www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

16-31 அக் 1-15 நவ 23-24/5 விலை ரூ 2


ஜெர்மன் 'ஐக்கியம்': கிழக்கை மேற்கு முழுங்கியது



# இரத்த வெள்ளத்தில் இந்தியா

படிப்பகம்

www.padippakam.com

# அடிப்படை வசதி கோரிப் போராட்டம் உளவுப் பிரிவு போலீசு பீதி!



தஞ்சை நகரின் மையமான கீழவாசல் ராவுத்தர் பாளையம் பகுதியில் நகராட்சியின் மாட்டிறைச்சிக் கூடம் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு அன்றாடம் மலைபோல் குவியும் மாட்டுக் குடல் மற்றும் இதர கழிவுகளால் அந்தப் பகுதி முழுவதும் சகிக்க முடியாத துர்நாற்றம் எப்போதும் வீசிக் கொண்டேயிருக்கும். இவ்விறைச்சிக் கூடத்தைச் சுற்றிலும் பெருமளவு குடியிருப்புகளும், பள்ளிக் கூடங்களும், பெருந்தொகையில் மக்கள் நடமாடும் கடைத் தெருவும் அமைந்துள்ளன. இறைச்சிக் கூடத்திலிருந்து கிளம்பும் நாற்றத்தாலும், விஷக் கிருமிகளாலும் இப் பகுதிவாழ் மக்கள் பலவகை நோய்களுக்கு ஆளாகிறார்கள். எனவே இதை நகருக்கு வெளியே அப்புறப்படுத்த வேண்டுமென பலகாலமாக இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தும் நகராட்சி நிர்வாகம் புறக்கணித்தே வருகிறது. ஓட்டுப் பொறுக்கும் போது இவ்விறைச்சிக் கூடத்தை அகற்றுவதாக வாக்குறுதி தந்த நகராட்சி தி.மு.க. தலைவர் ஏ.வி. பதி இப்போது வாயே திறப்பதில்லை.

இப்பிரச்சினையில் தஞ்சை மக்கள் கலை இலக்கியக் கழகம் தலையிட்டு போராடி வருகிறது. பிரசுரம், தட்டி, சுவரொட்டி வாயிலாகப் பிரச்சாரம் செய்தும் கடந்த 9.8.90 அன்று பகுதி மக்களைத் திரட்டி நகராட்சி முன் ஆர்ப்பாட்டமும் நடத்தியது.

அடுத்த கட்டமாக 4.10.90 அன்று இறைச்சிக் கூடம் முன்பாக மறியல் போராட்டம் நடத்தியது. பகுதிமக்கள் உட்பட முன்னணியாளர் 27 பேர் கைது செய்யப்பட்டு, போலீசு நிலையம் வரை கோரிக்கைகளை முழங்கியவாறு ஊர்வலமாகச் சென்றோம். அங்கு 'கியூ' பிரிவு போலீஸ் சூப்பிரண்டு உள்பட பல உளவுப் பிரிவு 'சூரப்புலி'கள் திரண்டிருந்தனர். கைது செய்யப்பட்ட பகுதி வாழ் இளைஞர்களை ஒவ்வொருவராக விசாரித்து "ம.க.இ.க.வுடன் தொடர்பு கொள்ளாதீர்கள். உங்கள் வேலைக்கே ஆபத்து வரும். அவர்கள் எங்கேயாவது குண்டு வைத்துவிட்டுப் போய் விடுவார்கள். நீங்கள்தான் மாட்டிக் கொள்வீர்கள்" என்று மிரட்டியுள்ளனர். ஆனாலும் பல இளைஞர்கள், நாங்கள் பாதிக்கப் படுவதால் தான் போராடுகிறோம்; இனியும் போராடுவோம் என்று துணிவுடன் கூறியுள்ளனர்.

'கியூ' பிரிவு போலீசாரின் மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ம.க.இ.க. ஒருக்காலும் பணிந்து விடாது; முன்னிலும் வீரியத்துடனும் மக்கள் ஆதரவுடனும் நகராட்சி நிர்வாகத்தின் திமிர்த்தனத்துக்கு எதிராக தொடர்ந்து போராடவே செய்யும்.

— மக்கள் கலை இலக்கியக் கழகம்
தஞ்சை.

# காசிருந்தால் பஞ்சு மெத்தை! காசில்லாவிட்டால் கட்டாந்தரை!

## - கருப்பம்புலம் மருத்துவமனை சீர்கேடுகள்

"காசிருந்தால் மருத்துவமனையில் பஞ்சு மெத்தையில் பிணமும் நோயாளியாய் படுத்திருக்கும்; காசில்லா விட்டாலோ நாற்சந்தியில் நோயாளியும் பிணமாய் படுத்திருப்பான்" என்பது அனைத்து அரசு மருத்துவமனைகளின் நிலையாக இருக்கிறது. வேதாரண்யம் ஒன்றியத்திலிருக்கும் கருப்பம்புலம் அரசு மருத்துவமனை இதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு. நோயாளிக்கு அக்கறையின்றி வைத்தியம் பார்ப்பது; மருந்து கட்ட, ஊசி போட என எதற்கெடுத்தாலும் காசு புடுங்குவது இங்குள்ள மருத்துவர்களின், ஊழியர்களின் வாடிக்கை.

ஊசி மருந்து, செலின், குளுக்கோஸ் போன்றவைகளை வெளியில் காசு கொடுத்து வாங்கிக் கொண்டு போய் கொடுத்தாலும் சரியாக வைத்தியம் பார்க்காமல் காசு சம்பாரிக்க முடியுமா என்பதிலேயே குறியாய் இருக்கிறார்கள். மேலும் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி, போதுமான படுக்கை வசதி - மருத்துவர் வசதி எதுவும் இங்கில்லை.

இவற்றை அம்பலப்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்க கோரி வேதாரண்யம், புதிய ஜனநாயக வாசகர் வட்டம் பிரசுரம் வெளியிட்டது. 6-10-90 அன்று கருப்பம்புலம் கடைத்தெருவில் மருத்துவமனையின் சீர்கேடுகளை அம்பலப்படுத்தி தெருமுனைக் கூட்டம் நடத்த திட்டமிட்டு வேதாரண்யம் மற்றும் வாய்மேடு போலீசு நிலையங்களில் அனுமதி வாங்கப்பட்டது. ஆனால் கடைசி நேரத்தில் போலீசு அனுமதி மறுத்து அடாவடித்தனம் செய்ததோடு உள்ளூர் நிலப்பிரபுவாகிய பி.வி.குழந்தைவேல் வீட்டிற்கு தோழர்களை வருமாறு அழைத்து அவரிடம் பிரச்சனையைக் கூறுங்கள், அவர் வேண்டிய ஏற்பாடு செய்வார் எனக் கூறியது. தோழர்கள் பி.வி.குழந்தைவேலுவிற்கும் இப்பிரச்சனைக்கும் எந்த தொடர்புமில்லை வரமுடியாது என மறுக்கவே டி.எஸ்.பி.யிடம் எழுத்துப் பூர்வமாக அனுமதி வாங்கி வரும்படி போலீசு இழுக்கடித்தது.

பின்னர் தோழர்களும் வேதாரண்யம் போலீஸ் நிலையம் சென்ற பொழுது அங்கு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் தான் இருந்தார். அவர் கூட்டத்திற்கு அனுமதி மறுத்து "கருப்பம்புலத்தில் நடத்தினால் பிரச்சனை வரும் நாங்கள் பாதுகாப்பு தரமுடியாது. வேறு எங்காவது வேண்டுமானால் நடத்துங்கள். தாசில்தார் அலுவலகம் முன் உண்ணாவிரதம் இருங்கள் அனுமதி தருகிறேன். கலெக்டர், சி.எம்., போன்றோர்க்கு புகார் அனுப்புங்கள்" என 'அறிவுரை' கூறினார். இதற்கிடையில் இன்னொரு புறம் டாக்டர் சந்திரசேகரனது கைக்கூலிகளும், சில சமூக விரோதிகளும் உள்ளூர் கிராமவாசிகள் என்ற பெயரில் புதிய ஜனநாயக வாசகர் வட்டத்தின் பிரசுரத்துக்கு மறுப்பு தெரிவித்து மருத்துவமனையில் சீர்கேடுகளே இல்லையென்றும் ஒழுங்காக நடக்கும் மருத்துவமனையை வேண்டுமென்றே குறை கூறி பொய்ப்பிரச்சாரம் செய்வதாகவும் பிரசுரம் வெளியிட்டுள்ளனர். கூட்டம் நடத்தினால் நேரடியாக வந்து தாக்குவோம் என மிரட்டியுள்ளனர்.

போலீசின், உள்ளூர் ரௌடியின் அரட்டல் உருட்டலுக்கெல்லாம் பயந்தவர்களில்லை பு.ஜ.வாசக வட்டத்தினர்; தொடர்ந்து இவர்களை அம்பலப்படுத்தி முறியடித்து வருகிறார்கள். பகுதி மக்கள் மருத்துவமனை சீர்கேட்டை அம்பலப்படுத்திய துண்டு பிரசுரத்தை செயல்பாட்டை வரவேற்று நிதியுதவி அளித்து வருகின்றனர்.






படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

**23 - 24**

16 அக் -15 நவ.'90

உள்நாடு
தனிஇதழ் : ரூ.2.
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுசந்தா : US $ 11



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர். 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப் பேட்டை
சென்னை-600 015.


# இரத்த வெள்ளத்தில் இந்தியா

நம்புங்கள்! இந்தியா இன்னமும் ஒரே அரசியல் நிர்வாக அமைப்பின் கீழ் இருக்கிறது என்பதைத் தவிர நாடு பிளவுபட்டுப் போய் விட்டது. சாதி ரீதியாக, மத ரீதியாக, இனரீதியாக! இப்போது சாதி, மத, இன ஒருமைப்பாட்டுக்காக வெவ்வேறு பெயர்களில் யாத்திரைகள் புறப்பட்டிருக்கும் அதே சர்வகட்சி அரசியல் தலைவர்கள்தான் நாட்டைப் பிளவுப்படுத்தி விட்டார்கள்!

நம்புங்கள்! இன்னமும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்பதைத் தவிர நாடு ஒரு உள்நாட்டுப் போரில் மூழ்கிப் போய் விட்டது - சாதிப்போர், மதப்போர், இனப்போராக! காந்தீய அகிம்சை பற்றி ஓயாது ஒப்பாரி வைக்கும் அவர்கள்தான் இந்த உள்நாட்டுப் போரை மூட்டி விட்டார்கள்!

இவற்றால் சாதி, மத இன ரீதியாகப் பிளவுபட்டு போரிட்டு மாண்டு போவது மக்களே! ஆதாயம் அடைவது அந்த அரசியல் தலைவர்கள்தான்! ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கும், தக்கவைத்துக் கொள்வதற்கும் மக்களை உயிர்பலியிடும் வரலாற்றுப் பாரம்பரியம் இந்த நாட்டுக்கு நிறையவே உண்டு. பழைய கதைகளுக்குப் போக வேண்டியதில்லை. 1982 அசாம் தேர்தலின் போது, முஸ்லீம்களுக்கு எதிராகப் பழங்குடியினரும், வங்காளிகளுக்கு எதிராக அசாமியரும் என்று ஆயிரக்கணக்கானோரைக் கொன்று பாசிச இந்திரா ஆட்சி அமைத்தார். 1984 பொதுத் தேர்தல்களின் போது பல ஆயிரம் சீக்கியரைப் படுகொலை செய்து பாசிச ராஜீவ் கும்பல் பதவிக்கு வந்தது. உடனே வந்த மாநிலங்களுக்கான 1985 தேர்தல்களில் குஜராத், மத்தியப் பிரதேசத்தில் பலநூறு தாழ்த்தப்பட்ட மக்களை கொன்று மேல்சாதி ஆட்சியை நிறுவியது பாசிச ராஜீவ் கும்பல். 1989 இல் நடந்த பொதுத் தேர்தல்களில் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அயோத்தி விவகாரத்தை முன்னிறுத்தி வடமாநிலங்களில் ஆயிரக்கணக்கான முஸ்லீம்களைக் கொன்று குவித்தும் பாசிச ராஜீவ் கும்பல் வெற்றி பெற முடியவில்லை. இந்துமதவெறி பாரதீய ஜனதாவும் சாதியக் கூட்டமைப்பான ஜனதாதளமும் அக்கொலைகளை சாதகமாக்கிக் கொண்டன.

இப்போது இன்னொரு இடைத் தேர்தலுக்குத் தயாரித்துக் கொண்டிருக்கும் ஜனதாதளம், பாரதீய ஜனதா, காங்கிரசு ஆகிய நாட்டின் பிரதான ஆளும் வர்க்கக் கட்சிகள் மூன்றுமே அரசியல் ஆதாயம் கருதி சாதி, மதவெறியைத் தூண்டி நாட்டை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கின்றன. பரிசுத்த நாடகம், தனிநபர்மோகம், இலவசத் திட்டங்கள், கவர்ச்சி முழக்கங்கள் கூட ஓட்டுப் பொறுக்குவதற்குப் போதாதவை ஆகிவிட்டன. தேர்தல் தேவதைக்கு இரத்தத்தால் குளிப்பாட்டி, பிணங்களைப் படையல் வைக்கிறார்கள்.

இடஒதுக்கீட்டை ஆதரித்தும் எதிர்த்தும் சாதி அடிப்படையிலும், அயோத்தி விவாகரத்தில் மதஅடிப்படையிலும் நடக்கும் கோரக் கொலைகள் - வன்முறை வெறியாட்டங்கள் மனச்சாட்சியுடைய அனைவரையும் வெறுப்பும் அதிர்ச்சியும் அடைய வைக்கின்றன. காஷ்மிரில் இந்திய இராணுவத்தின் அக்கிரமங்களும் அதற்கு விதிவிலக்கின்றி அனைத்து அரசியல் கட்சிகளும் தரும் ஆதரவும் மனிதாபிமானமுடைய எவரையும் ஆத்திரமடையச் செய்கின்றன. விவகாரங்களில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்படுவதையும் சாவதையும் கூட தர்க்க ரீதியாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் கடந்த சில நாட்களாக நடந்து வரும் சம்பவங்கள் எவ்வித தர்க்கத்துக்கும் அடங்காத வெறிச் செயல்களாகவே தோன்றுகின்றன.

- மண்டல் கமிசன் பரிந்துரையை அமுலாக்குவதை எதிர்த்து மேல்சாதிக் கலவரத்தின் ஒரு பகுதியாக மாணவ இளைஞர்கள் தாமே தீக்குளித்தனர் என்று காட்டுவதற்காக பலாத்காரமாக உயிரோடு கொளுத்தப்படுகின்றனர். அதன் உச்சகட்டமாக அக்டோபர் 9-ம் தேதி தென்மேற்கு டெல்லியில் ஒரு கோரக் கொலை நடந்திருக்கிறது. பள்ளிப் பேருந்து ஒன்றின் ஓட்டுநர் பிரீதம் சிங்கின் மகள் 14 வயது பிரவீன் கௌர் என்ற சிறுமி. வகுப்பறையில் இருந்து தண்ணீர் குடிக்க வெளியே வந்தாள். அங்கே ஒளிந்திருந்த பக்கத்துப் பள்ளியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் திடீரென்று பிரவீன் கௌர் மீது மண்ணெண்ணையை ஊற்றிக் கொளுத்திக் கொன்று விட்டனர். இவ்வாறு கொலை வெறியும், பள்ளிச் சிறுவர்- சிறுமிகள் கூட தூக்கிலிட்டும், கழுத்தை அறுத்துக் கொண்டும், தீக்குளித்தும் தற்கொலை செய்யுமளவு சாதிவெறி நஞ்சு இளைஞர்களின் நெஞ்சிலே ஊட்டப்படுகிறது.

- அதேநாளில் ஆந்திராவிலுள்ள வாரங்கல் போய்க் கொண்டிருந்த காகதிய விரைவு பாசஞ்சர் ரெயிலில் ஏறிய ஒரு கொலைவெறி கும்பல் மண்டல் கமிசன் பரிந்துரை அமலாக்கத்துக்கு விதித்துள்ள உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக கோஷமிட்டு பிரசுரங்களை விநியோகித்தது. அறுபதுக்கும் மேற்பட்டவர் இருந்த இரயில் பெட்டி கதவுகளை மூடி மண்ணெண்ணை ஊற்றிக் கொளுத்திவிட்டு ஓடிவிட்டது. (மண்டல் கமிசன் பரிந்துரையை ஆதரிக்கும் மக்கள் யுத்தக் குழு என்ற அமைப்பினர்தான் இவ்வாறு செய்ததென்கின்றனர் தப்பிய பயணிகளும், பத்திரிக்கைகளும், போலீசும். ஆனால் அக்குழு தான் செய்யவில்லை, விசாரணை நடத்துங்கள் என்கிறது.) இத்தீவைப்புப் படுகொலையில் 47 பேர் மாண்டு போயினர்; 14 பேர் தீக்காயங்களுடன் சாவோடு போராடுகின்றனர். எண்ண முடியாத அளவு உருகிப்போன உடல்களை மண்வாரியில் அள்ளிக் கொட்டினார்கள்.

- அக்டோபர் 30ந் தேதி, அயோத்தியிலுள்ள பாபர் மசூதியை இடித்துத் தள்ளிவிட்டு, ராமன் கோவிலைக் கட்டியே தீருவோமென ஆர்.எஸ்.எஸ். விசுவ இந்து முன்னணி, பஜ்ராங் தள் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சி ஆகிய இந்துமத வெறி அமைப்புகள் 'ராமர் ஜோதி', ரதயாத்திரை கிளம்பியுள்ளன. மதவெறியன் அத்வானியின் ரத யாத்திரை போகுமிடமெல்லாம் பிணக்காடாகிறது; 'ராமர் ஜோதி' போகுமிடமெல்லாம் சுடுகாடாகிறது. தெற்கே தவணகிரி மற்றும் கோலார் மாவட்டங்களில் நடந்த மதவெறிப் படுகொலைக்கு 60க்கும் மேற்பட்டோர்

படிப்பகம்

பலியாயினர், வடக்கே, குஜராத்தைத் தொடர்ந்து, உத்திரப் பிரதேசத்தின் மொராதாபாத், மீரட், பிரெய்லி, காஜிப்பூதூர், பிரதாபகர் ஆகிய மாவட்டங்களில் நடந்த மதவெறிப் படுகொலையில் பலர் மாண்டனர். இவற்றின் அடுத்த கட்டமாக அயோத்தியை அடுத்துள்ள கலோனல் கஞ்ச் வட்டாரத்தின் பல கிராமங்களில் ஆர்.எஸ்.எஸ். இந்து மத வெறிக் கொலைப்படை புகுந்தது. திரிசூலம், ஈட்டி, வாள் கொண்டு 300க்கும் மேற்பட்ட முஸ்லீம் மக்களை வெட்டிக் குத்திக் கொன்றது. குடிநீர் குழாய்களைத் தகர்த்து, பிணங்களை கிணறுகளில் வீசி நஞ்சாக்கியது. வீடுகளைக் சூறையிட்டுக் கொளுத்தியது. பக்கவாத நோயாளிச் சிறுவனைக் தாய் முன்னே உயிரோடு எரித்தும், மூன்று வயதுச் சிறுமி சாபியின் நாக்கை அறுத்தும் கொன்று மிருக வெறியைத் தணித்துக் கொண்டது. இன்னமும் தொடரும் ரதயாத்திரையும், ராமன் ஜோதியும் எவ்வளவு பேரைக் காவு கொள்ளும் என்று எண்ண முடியாது.

● அக்கிரமங்களே அன்றாடமும் தொடரும் போது அவற்றோடு வாழ்வதே வழக்கமாகி விடுகின்றன. அவற்றைவிடப் பெரிய அளவிலான அக்கிரமங்கள், கொடுமைகள் நிகழும் போது அவை கவனத்தில்படாமல் போய்விடுகின்றன. இப்படித்தான் ஆகிவிட்டன பஞ்சாப், காஷ்மீர் விவகாரங்கள். குறிப்பாக காஷ்மீரில் இராணுவம் நடத்தும் கேள்வி முறையற்ற அட்டூழியங்களும் கொலைகளும் பன்மடங்கு பெருகிவிட்டன. குடியுரிமை, ஜனநாயக உரிமை, பண்பாட்டு ஒழுக்க நெறி அரசியல் என்றெல்லாம் பேசித் திரியும் தார்குண்டே, கிருஷ்ணய்யர் முதல் அசோக் மித்ரா வரையிலான அறிவுஜீவிகள் அனைவரும் கண்ணை மூடிக் கொண்டு காஷ்மீரில் இராணுவ வெறியாட்டத்தை அங்கீகரிக்கின்றனர். கடந்த மாதம் கிராமத்துச் சாலையில் தாயோடு போய்க் கொண்டிருந்த பெண்ணை இழுத்துப் போய்க் கற்பழித்துக் காட்டுக்குள் வீசியுள்ளது, இராணுவ கும்பல். புதிதாய் மணமான கணவனுடன் பேருந்தில் போய்க் கொண்டிருந்த மணமகளை கடத்திக் கொண்டு போய் கும்பலாய்க் கற்பழித்து இரண்டு நாட்களுக்குப் பிறகு விரட்டியுள்ளது. 60 பேருக்கு மேல் பயணம் செய்த பேருந்தை மடக்கி, 'பெட்ரோல்' ஊற்றி அவ்வளவு பேரையும் உயிரோடு கொளுத்தி விட்டது. "அந்த பஸ்ஸுக்குள் காஷ்மீரித் தீவிரவாதிகள் சிலர் இருந்தனர்; அதனால்தான் கொளுத்தினோம்" என்று பகிரங்கமாய் புளுகுகிறது இராணுவக் கொலைக் கும்பல்.

இப்படிப்பட்ட வெறியாட்டங்கள் இன்னும் பல மடங்கு நடக்க வேண்டும் என்று தான் இப்போது யாத்திரைகள் போய்க் கொண்டிருக்கும், யாத்திரைகளுக்குத் திட்டமிட்டிருக்கும் சர்வகட்சித் தலைவர்களும் மீதத்தலைவர்களும் காத்திருக்கின்றனர்.

ஜனதாதளம் சாதி அரசியல் கலவரங்களுக்கு காரணமாக இருப்பதாகவும், பாரதீய ஜனதா கட்சி மத வெறிக் கலவரங்களைத் தூண்டுவதாகவும், நாடு எதிர் கொண்டுள்ள எந்தப் பிரச்சனையையும் தீர்க்கத் திராணியற்றதாக வி.பி.சிங் அரசாங்கத்தின் மீது குற்றஞ்சாட்டுகிறது; பாசிச ராஜீவ் கும்பல். ஆனால் அதுதான் துவாரகா மடச் சங்கராச்




சாரியைத் அயோத்தியில் ராமன் கோவில் கட்டும்படி தூண்டியது; அதன் உள்ளூர் கிரிமினல் தலைவர்கள்தான் இட ஒதுக்கீட்டிற்கு எதிரான மேல்சாதிக் கலவரங்களை தலைமையேற்று நடத்துகிறார்கள். பாசிச ராஜீவ் கும்பல் பின்னிருந்து அவர்களை இயக்குகிறது. மண்டல் கமிஷன், அயோத்தி, பஞ்சாப், காஷ்மீர் - இப்படி ஏதாவது ஒரு காரணத்தால் ஜனதாதள அரசு கவிழ்ந்து, இடைத்தேர்தல் வந்தால் ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று மனப்பால் குடிக்கிறது.

இந்து மதவெறியர்கள் தவிர ஏனைய அனைத்துத் தரப்பினரும் கேட்டுக் கொண்டும் கூட அயோத்தி பாபர் மசூதியை இடித்து, ராமன் கோவிலைக் கட்டுவது என்பதில் வறட்டுத் தனமாகவும், திமிரோடும் நிற்கிறது ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கட்சி. சிறுபான்மையினரின் ஓட்டுக்காக எல்லாக் கட்சிகளும் பெரும்பான்மை இந்துக்களின் நலன்களுக்காக நிற்கிறோம் என்று காட்டி 1989 தேர்தல்களைப் போல வெற்றி பெற்று விடலாம் எனக் கனவு காண்கிறது. ராமஜென்ம பூமி விவகாரத்தை ஓரங்கட்டுவதற்காகத் தான் மண்டல் கமிசன் அமுலாக்கத்தைக் கொண்டு வந்திருப்பதைப் புரிந்து கொண்டு, ஆர்.எஸ்.எஸ். மேல் சாதி வெறியர்கள் அதற்கு எதிரான கலவரத்தையும் நடத்துகின்றனர்.

சகல பிரச்சினைகளிலும், சகல துறைகளிலும் தோல்வியுற்று விட்டது; தீராத உட்கட்சிப் பதவிச் சண்டையில் சிக்கிக் கொண்டு விட்டது, வி.பி.சிங் கும்பல். அவற்றில் இருந்து திசை திருப்பவும் எல்லா எதிர்த்தரப்பையும் வாயடைக்கவும் ராஜபுத்திரர், முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் மற்றும் பிற்பட்ட சாதிகள் அடங்கிய தனி ஓட்டு வங்கியைத் தனக்கென உருவாக்கிக் கொள்ளவும் மண்டல் கமிசன் பரிந்துரையை அமுலாக்க முடிவு எடுத்துள்ளது.

1969ல் வங்கிகளைத் தேசவுடமையாக்கியும், மன்னர் மானியத்தை ஒழித்தும் தானொரு முற்போக்கு வேடம் போட்டு தனிச் செல்வாக்கைப் பெற்றார் இந்திரா. அதேபோன்று மண்டல் கமிசன் பரிந்துரை அமுலாக்கம் ஒரு 'சமூகப் புரட்சி' என்கிற பெயரால் தனிச்செல்வாக்குப் பெற வி.பி. சிங் கும்பல் முயலுகிறது. இந்தப் பிரச்சினையில் தான் காங்கிரசு, பாரதீய ஜனதா உட்பட எல்லா எதிர்த்தரப்பும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்றன; இட ஒதுக்கீட்டை எதிர்த்தும் ஆதரித்தும் நடக்கும் கலவரங்கள் தொடர்ந்து பரவினால் தனது செல்வாக்கும் உயரும் என்று அது நம்புகிறது.

இரண்டு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள், இந்திய மக்கள் முன்னணி முதல் மக்கள் யுத்தக் குழு வரை பல வண்ண "இடதுசாரி"களும் வி.பி.சிங் கும்பலை வால் பிடிக்கச் செய்வதில் அது வெற்றி பெற்று விட்டது. சாதி ரீதியாக மக்களைப் பிளவுபடுத்த இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து இடைத் தேர்தல்கள் நடத்தி மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வி.பி.சிங் கும்பல் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அதை வால்பிடித்துச் செல்லும் கட்சிகளும் குழுக்களும்கூட ஒன்று அதை ஆதரிக்க வேண்டும் அல்லது சந்தர்ப்பவாத நிலை எடுக்க வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

ஆகவே, தமது சுயநலன்களுக்காக வேண்டி நாட்டையும் மக்களையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் இந்த சாதி, மத, 'தேசிய' வெறிச் சக்திகளிடமிருந்தும் பேரழிவிலிருந்தும் தப்ப வேண்டுமானால் எவ்வித சமரசமும் இல்லாத சரியான தீர்வுகளை முன்வைத்து மக்களைத் திரட்ட வேண்டும். அவை:

✱ அரசு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக மேல்சாதி - மேட்டுக் குடியினரிடையே நடக்கும் சாதிச் சண்டைகளை அம்பலப்படுத்தி முறியடிப்போம்!

✱ ஆர்.எஸ்.எஸ். போன்ற மதவெறி அமைப்புகளைத் தடைசெய்தும், பாபர் மசூதியை முஸ்லீம்களிடம் ஒப்படைத்தும் மத வெறி - வகுப்புவாதச் சக்திகளை முறியடிப்போம்!

✱ பஞ்சாபில் அரசு பயங்கரவாதம் - சீக்கிய மதவெறி பயங்கரவாதம் இரண்டையுமே எதிர்த்து முறியடிப்போம்!

✱ காஷ்மீர் உட்பட அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கி ஜனநாயக பூர்வமாக நாட்டு ஐக்கியத்தை நிலை நாட்டுவோம்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## கர்நாடக ஆட்சிக் கவிழ்ப்பு:

# சாராய அதிபர்களிடம் ராஜீவ் சோரம்!

கர்நாடகத்தில் காங்கிரசு ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. நிலையான ஆட்சி தரப் போவதாக வாக்களித்து, பெரும்பான்மை பலத்துடன் 11 மாதங்களுக்கு முன்பு வீரேந்திர பாட்டீல் தலைமையில் ஆட்சிக்கு வந்த காங்கிரசு அரசு இன்று நிலை குலைந்து கிடக்கிறது.

காங்கிரசு அரசு கவிழ்ந்ததற்கு பாட்டீலின் உடல் நலமின்மை காரணமா? அல்லது தான் பதவியில் இல்லாத போது தனது அடிவருடிகள் ஆட்சியிலிருப்பதைச் சகித்துக் கொள்ள முடியாத ராஜீவின் வக்கிரம் காரணமா? அல்லது கட்சிக்குள் நிலவிய கோஷ்டி மோதலா, அண்மையில் கர்நாடகத்தில் பரவிய வகுப்புக் கலவரங்களா, நெருக்கடியைச் சாதகமாக்கிக் கொண்டு சட்டமன்றத்தைக் கலைத்த கவர்னரின் சாதுரியமா? — இதிலே எது வெற்றி பெற்றது என்று அரசியல் பார்வையாளர்களும் பத்திரிகைகளும் விவகாரத்தை திசைதிருப்பி சூடேற்றுகின்றன. இல்லை; இவை எல்லாவற்றையும் விட கர்நாடக அரசியலை ஆட்டிப் படைக்கும் சாராய அதிபர்களே காங்கிரசு அரசு கவிழ்க்கப்பட்டதற்கு முக்கிய காரணம். கர்நாடக அரசியலைப் படைத்து, காத்து, அழிக்கும் மும்மூர்த்திகளான சாராய அதிபர்கள்தான் திரைமறைவிலிருந்து இன்றைய ஆட்சிக் கவிழ்ப்பை வழி நடத்தியுள்ளனர்.

கர்நாடகத்தில் சாராய அதிபர்கள் 'இரண்டாம் தரமானது' என்ற பெயரில் முதல்தர சரக்குகளுக்கு எக்சைஸ் வரி ஏய்ப்பு செய்து கொள்ளையடிப்பது வழக்கம். கோடே, விஜய் மல்லைய்யாவின் யூ.பி. குருப், தாசப்பா குருப் முதலான பெரு முதலாளித்துவ நிறுவனங்கள் இவ்வாறு கொழுத்த லாபத்தை ஈட்டி வந்தன. இதிலே கோடே நிறுவனத்துக்கும் இதர சாராய அதிபர்களுக்குமிடையே கடுமையான போட்டா போட்டி. கோடே கும்பலை வீழ்த்த ஒரு பிரிவு சாராய அதிபர்கள் முதல்வர் வீரேந்திர பாட்டீலின் உதவியை நாடினர். இதன்படி எக்சைஸ் வரிச் சட்டத்திலுள்ள சில ஓட்டைகளை அடைத்து கோடே கும்பலுக்கு பாட்டீல் ஆப்பு வைத்தார். அதேசமயம் போட்டி சாராய கும்பல் ஒரு சில இனங்களில் வரியிலிருந்து தப்பிக்கவும் உதவினார். ஆத்திரமடைந்த கோடே மற்றும் பிற சாராய அதிபர்கள் வீரேந்திர பாட்டீலை வீழ்த்த களத்தில் இறங்கினர்.

கர்நாடக காங்கிரசில் பாட்டீல் கோஷ்டிக்கு எதிராக குண்டுராவ், பங்காரப்பா, வீரப்பமொய்லி, ரங்கநாத் ஆகியோர் தலைமையிலான 4 கோஷ்டிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நாய்ச் சண்டையில் உள்ளன. இந்த எதிர் கோஷ்டிகளை சாராய அதிபர்கள் விலை பேசினர். அதைத் தொடர்ந்து விறுவிறுப்பாக அரசியல் காட்சிகள் அரங்கேறத் தொடங்கியது.

செப்டம்பர் இறுதியில் முதல்வர் பாட்டீல் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரது வலது கை பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டது. பேச்சும் சரியாக வரவில்லை. இதைப் பயன்படுத்திக் கொண்டு செயல்பட முடியாத பாட்டீலை பதவியிலிருந்து நீக்குமாறு எதிர் கோஷ்டிகள் ராஜீவை நிர்பந்தித்தன. பீதியடைந்த பாட்டீல் துணை முதல்வர் பதவியை உருவாக்கலாம் என்று நப்பாசை காட்டி எதிர் கோஷ்டியை பிளவுபடுத்த முயன்று தோற்றுப் போனார்.

இதற்கிடையே கர்நாடகத்தில் பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். இந்து வெறியர்கள் ராமஜோதி யாத்திரை என்ற பெயரில் மதவெறிக் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டு காங்கிரசு ஆட்சியை நிலைகுலைய வைக்க ரகசிய ஏற்பாடுகளில் இறங்கினர். வகுப்புக் கலவரங்கள் பரவாமல் 'அமைதி தவழும்' மாநிலமாக விளங்கிய கர்நாடகாவில் தாவண்கரெ, சென்னப்பட்டிணம், கோலார் மாவட்டங்களில் கலவரத் தீ பற்ற வைக்கப்பட்டது. பாட்டீல் ஆட்சியை வீழ்த்தக் காத்திருந்த காங்கிரசு கோஷ்டிகள் இக்கலவரங்களை பின்னாலிருந்து கொண்டு உசுப்பி விட்டன. ஓட்டுப் பொறுக்கிகளின் பதவிச் சண்டைக்கு உழைக்கும் மக்களில் பலர் பலிகிடாவாக்கப் பட்டனர். வகுப்பு ஒற்றுமைக்காக ராஜீவ் சத்பவன யாத்திரை நாடகமாடும் நேரத்தில் இவ்வாறு காங்கிரசு மாநிலத்திலேயே கலவரம் மூண்டு விட்டதைக் காட்டி, பாட்டீலை பதவி இறக்கச் செய்ய காங்கிரசு கோஷ்டிகளே கலவரத் தீயை விசிறிவிட்டு ராஜீவிடம் முறையிட்டன. ராஜீவும் அவசரமாக ஹெலிக்காப்டரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பறந்து சென்று திரும்பிய பிறகு இன்னும் 4 நாளில் முதல்வர் மாற்றப்படுவார் என்று அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து எதிர்த்தரப்பு கோஷ்டியினர் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி பாட்டீலை சட்டமன்றத் தலைவர் பொறுப்பிலிருந்து நீக்கி விட்டதாக அறிவித்தனர். இந்தக் கூட்டம் கட்சி விதிகளுக்கே எதிரானது; சட்ட விரோதமானது என்று பாட்டீல் மிரட்டிப் பார்த்தார். ஆனால் யாரும் பணிவதாகத் தெரியவில்லை. பாட்டீல் கோஷ்டியைச் சேர்ந்தவர்களே விலை பேசப்பட்டு எதிர்த்தரப்புக்குத் தாவினர். அரண்டு போன பாட்டீல் தமது கட்சியினர் கட்டுப்பாட்டை மீறி செயல்படுவதால் மந்திரி சபையைக் கலைக்குமாறு கவர்னரிடம் கடிதம் கொடுத்தார்.

கவர்னரை நேரில் சந்தித்து முறையிட்டும், எதிர்க்கட்சியான ஜனதாதள பிரமுகர்களிடம் தூதுவிட்டும் பாட்டீல் ஆட்சியைக் கலைக்குமாறு எதிர்கோஷ்டிகள் நிர்பந்தித்தன. டெல்லி அரசிடம் நல்ல பெயர் வாங்கும் நோக்கத்தோடு, பாட்டீல் மந்திரி சபையைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கவர்னர் பானுபிரதாப் சிங் பிரகடனம் செய்தார்.

வீரேந்திர பாட்டீல் உடல்நலமற்று இருப்பதைக் காட்டி அவரைப் பொறுப்பிலிருந்து நீக்குவதை நியாயப்படுத்துகிறார், ராஜீவ். ஆனால் அதே நிலைமையில்தான் ஆந்திர முதல்வர் சென்னா ரெட்டியும் உள்ளார். உடல்நலமின்மைதான் காரணம் என்றால் அவரையும் நீக்குவதுதானே? அவ்வளவு ஏன்? தமிழகத்தில் எம்.ஜி.ஆர். கூட முதல்வர் என்ற பெயரில் நடைபிணமாகத்தான் கிடந்தார். ஈழ விவகாரமும் வன்னியர் போராட்டமும் அன்று எரியும் பிரச்சனையாக இருந்த போதிலும் கூட அவரைப் பொறுப்பிலிருந்து நீக்க ராஜீவ் முன்வரவில்லை. தனக்குத் தேவையென்றால் செத்த பிணத்தைக் கூட முதல்வராக அமர்த்தி நீடிக்கச் செய்வது, வேண்டாமென்றால் தூக்கியெறிவது என்கிற பாசிச வக்கிரம்தான் ராஜீவிடம் மிதமிஞ்சி வழிகிறது. அதைவிட சாராய அதிபர்களிடம் சோரம் போய்விட்ட ராஜீவால், அவர்களது விருப்பத்தை மீறி எதையும் செய்ய முடியாது என்பதையே இந்த ஆட்சிக் கவிழ்ப்பு நிரூபித்துக் காட்டுகிறது.

இப்போது பாட்டீலுக்குப் பதிலாக பங்காரப்பா சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, புதிய முதல்வர் தேர்வுக்கான பேரங்கள் நடந்து வருகின்றன. ஆனால் முற்றிவரும் கோஷ்டிப் பூசல்களால் காங்கிரசு ஆட்சியே நிலைக்குமா என்பது கேள்விக் குறியாகிவிட்டது. அது தொடர்ந்து நீடிப்பதும் நிலைகுலைவதும் சாராய அதிபர்களின் கையில்தான் உள்ளது.

— குமார்





பதவியைப் பறிகொடுத்த வீரேந்திர பாட்டீல்

சாராய அதிபர்களிடம் சோரம் போன பாசிச ராஜீவ்



படிப்பகம்

www.padippakam.com

# கேரள கடற்கரையை ஆளுவது 'மார்க்சிஸ்டு'களல்ல! மஃபியாக்கள்!



மஃபியா கும்பல் தலைவன் அப்துல் ரஹ்மானை மாலையிட்டு வரவேற்கும் முக்கியப் புள்ளிகள்



ரஹ்மானின் கூட்டாளியான ஐ.ஜி - அலெக்சாந்தர்



'ஆள்காட்டி' அபுபெக்கர்

கேரள மலபார் கடற்கரையை ஒட்டிச் செல்கிற தேசிய நெடுஞ்சாலையில் இரு கார்கள் - மாருதி மற்றும் அம்பாசிடர் - 370 கிலோ எடையுள்ள தங்கத்தை சுமந்து கொண்டு விரைகின்றன. இத்தங்கம், பிரபல மஃபியா கும்பல் தலைவன் அப்துல் ரஹ்மான் என்பவனைச் சேர்ந்தது; அவனது ஆட்களால் கடத்தப்படுகிறது. இதை உளவு பார்த்து அறிந்து கொண்ட வருவாய் புலனாய்வு இயக்கத்தின் (DRI) ஆள்காட்டிகளான ஹம்சா மற்றும் அபுபெக்கர் தமது அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர். அதிகாரிகளும் முன்னேற்பாட்டுடன் காசர்காடு எனுமிடத்தில் காத்திருந்து இருகார்களையும் இடைமறித்து அந்த 6.8 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத்தைக் கைப்பற்றி கடத்தல் பேர்வழிகளை கைது செய்தனர் — இது நடந்தது 1989 பிப்ரவரி மாதம்.

அப்துல் ரஹ்மானின் பல தங்கக் கடத்தல்களை உளவு பார்த்து அதிகாரிகளுக்கு காட்டிக் கொடுத்து கூலி பெற்று வந்தனர் ஹம்சாவும் அபுபெக்கரும். தனது தொழிலுக்கு தடங்கலாக இருக்கும் இவர்களை பல வழிகளில் மிரட்டியும் பணியாததால் தீர்த்துக் கட்ட முடிவு செய்து ஆட்களை ஏவினான் ரஹ்மான். 1989 ஏப்ரலில் ஹம்சா மங்களூரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த பொழுது கேரள எல்லையிலுள்ள பொய்நச்சியில் ரஹ்மானின் ஆட்களால் கொலை செய்யப்பட்டான்.

இவை ஒரு வருடத்திய சமாச்சாரம் என்றாலும் இது தொடர்பான புதிய தகவல்கள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. கேரள போலீசு உயர் அதிகாரிகள், ஓட்டுக்கட்சித் ('மார்க்சிஸ்டுகள்' உட்பட) தலைவர்கள் ரஹ்மானின் கூட்டாளிகளாக இருப்பதும், ஹம்சா கொலை வழக்கில் குற்றவாளிகளை தப்புவிக்க முயற்சித்து வருவதும் அண்மையில் அம்பலத்திற்கு வந்துள்ளது.

அப்துல் ரஹ்மான் பாகிஸ்தானைச் சேர்ந்தவன். தனது 15-வது வயதிலேயே பாகிஸ்தானைச் சேர்ந்த கடத்தல் புள்ளி ஹாஜி அஷ்ரப் என்பவனிடம் வேலை செய்து 'முறையாக தொழில்' பயின்றவன். 1980-ம் வருட வாக்கில் சில மில்லியன் டாலர்களை ரஹ்மான் மோசடி செய்ததால் அஷ்ரப் ஆட்களால் பலமாக தாக்கப்பட்டு லண்டனிலுள்ள குப்பைத் தொட்டியில் - தமது தொழிலுக்கு பாதுகாப்புக் கருதி இவர்கள் அதிகம் வாசம் செய்வது லண்டனில் தான் - வீசப்பட்டான். பின்னர் இவனை லண்டன் போலீசார் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார்கள். இவனிருந்த மருத்துவமனையில் கேரள முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் சிகிச்சைப் பெற்றுக் கொண்டிருந்தார். இருவருக்குமிடையே தொடர்பு ஏற்பட்டு, அமைச்சரின் ஊக்குதலின் பேரில் உடல்நலம் தேறியதும் கடத்தலை சுயமாக செய்யத் தொடங்கினான் ரஹ்மான்.

இன்று இந்தியாவில் தங்கக் கடத்தலில் முக்கியப் புள்ளியாக கொடி கட்டிப் பறக்கிறான். கேரளாவிலுள்ள தமது உறவினர்களான கே.எம்.அப்துல்லா, 'சாஹினா சாரி' முகம்மது குன்ஹி, எஸ்.ஹெச்.ஹைதர், மொகம்மது ரஜீப் முதலானவர்கள் மூலமே இந்திய 'வர்த்தக'த்தை கவனித்து வருகிறான். இவனது கும்பலில் இருந்தவர்கள் தான் ஹம்சாவும் அபுபெக்கரும். பணப்பட்டுவாடா விசயத்தில் ரஹ்மான் இவர்களுக்கு 'துரோகம்' செய்ததால் போலீசிற்கு ஆள்காட்டிகளாக மாறினார்கள். ரஹ்மானின் திட்டங்களையும் ரகசியங்களையும் இவர்கள் எளிதாக கண்டுபிடித்து போலீசிற்கு தகவல் தருவதால் முதல் தவணையாக ஹம்சாவை தீர்த்திருக்கிறான் ரஹ்மான். அபுபெக்கரை ஹம்சா கொலையில் சிக்க வைக்கவும் போலீசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் செல்வாக்கைப் பயன்படுத்தி வருகிறான்.

கேரள குற்றப்பிரிவு போலீசின் தனிக்குழு ஒன்று ஹம்சா கொலை வழக்கை விசாரித்து ரஹ்மானும் அவனது உறவினர்களுமே கொலையாளிகள் என அறிக்கை சமர்பித்தது. அதே சமயம் இத்துறையின் பொது கண்காணிப்பாளர் (ஐ.ஜி) - ரஹ்மானின் கூட்டாளி - தமக்கு செல்வாக்குள்ள சிறப்பு புலனாய்வுக்குழு (SIT) விற்கு இவ்விசாரணையை மாற்றுவதற்கு பெரிதும் முயற்சித்து வருகிறார். சிறப்பு புலனாய்வுக் குழுவினர் மூலம் அபுபெக்கரை கொலையாளியாக சித்தரிக்க சில தில்லுமுல்லுகள் செய்தார்.

பம்பாயிலும், கோவாவிலும் சிலரை ஹம்சாவை கொல்வதற்காக அபுபெக்கரால் நியமிக்கப்பட்ட கூலியாட்கள் என SIT-யினர் கைது செய்தனர். இவர்கள் மூலம் "ஹம்சாவை கொல்வதற்காக தாங்கள் அனுப்பிய 1.5 லட்சம் ரூபாய் கிடைக்கப் பெற்றோம். நன்றி" என போலி முகவரியில் தந்தி ஒன்றை அபுபெக்கருக்கு அனுப்பினர். அலெக்சாந்தரும் அபுபெக்கரை கைது செய்து விசாரணை என்ற பெயரில் ஒரு மாத காலம் சட்டவிரோதமாக தனது கஸ்டடியில்



படிப்பகம்

www.padippakam.com

வைத்தார்: பணத்தகராறு காரணமாக அபு பெக்கர்தான் ஹம்சாவைக் கொன்றதாக தற்தியை இதற்கு ஆதாரமாக காட்டி நாடகமாடினார் - இவை அம்பலமாகி நாறியதும் விசாரணையை சி.பி.ஐ.-க்கு மாற்றியது கேரள அரசு.

கொலையாளிகளை தப்பிக்க உடந்தையாக இருக்கும் அலெக்சாந்தரும் சரி, SIT -யின் அதிகாரிகளும் சரி இதுவரை குறைந்தபட்ச விசாரணைக்குக் கூட உட்படுத்தப்படவில்லை. ''சி.பி.ஐ.யும் ரஹ்மானுக்கு சாதகமாகத்தான் செயல்படும். ஏனெனில் ரஹ்மானுக்கு அனைத்து போலீசு அதிகாரிகள் மத்தியிலும், அரசியல்வாதிகள் மத்தியிலும் செல்வாக்கு இருக்கிறது. இன்று கூட ரஹ்மானும் அவனது ஆட்களும் தைரியமாக கோவாவில் உலாவுவதும், வழக்கமான கடத்தலில் ஈடுபடுவதும் நடக்கிறது'' என்கிறார் ஹம்சாவின் மனைவி சைபுனிஷா.

உண்மைதான். உயர்போலீசு அதிகாரிகள் முதல் முதலமைச்சர் செயலகம், அமைச்சர்கள் வரை ரஹ்மானின் கூட்டாளிகள் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள். போலீசு உயரதிகாரி ராஜகோபால் நாராயணன் (DGP) என்பவரும், முன்னாள் சபாநாயகரும் இந்நாள் இ.கே.நாயனாரின் அரசியல் செயலருமான ஏ.பி.குரியன் என்பவரும் ரஹ்மானின் கூட்டாளிகள்; அலெக்சாந்தருக்கு பக்கபலமாக நின்று செயல்பட்டு வருகின்றனர். எந்த கட்சியினரும் ரஹ்மானுக்கு எதிராக முணுமுணுப்பது கூட கிடையாது.

'மார்சிஸ்டுகளோ' ரஹ்மானின் நெருங்கிய கூட்டாளிகளாகி விட்டார்கள். ஹம்சாவின் மகள் கொடுத்த மனுவிற்கு பதிலளிக்கையில் இ.கே.நாயனார், ''சி.பி.ஐ. வழக்கை முனைப்பாக முறையாக விசாரித்து வருகிறது.'' என வக்காலத்து வாங்கியதோடு ''சி.பி.ஐ. விசாரணையில் இருக்கும் போது நான் வேறு எந்த கருத்தும் கூற முடியாது'' என நழுவிக் கொண்டார். ஏன்? தனது செயல்பாட்டிற்கு தடையாக இருந்த கண்ணனூர் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவரை தமது செல்வாக்கைக் கொண்டு மாவட்ட கட்சி கமிட்டியிலிருந்தே நீக்கியிருக்கிறான் ரஹ்மான்.

மாபியாக்களின் - கடத்தல பேர்வழிகளின் சொர்க்க பூமியாக இதுவரை வர்ணிக்கப்பட்டது பம்பாய் மற்றும் கோவா கடற்கரைதான். ஆனால் இந்த அணியில் கேரள மலபார் கடற்கரையும் சேர்ந்து விட்டது. இந்தப் 'பெருமை'யில் 'மார்க்சிஸ்ட்'களுக்கும் பங்கு உண்டு. காங்கிரசு ஆட்சியிலே தான் ரஹ்மான் வளர்ந்து வந்தான் என்றாலும் இன்றும் அவனுடைய வளர்ச்சி தடைபடவில்லை. துபாயிலிருந்து தங்கத்தை கடத்தும் மஃபியாக்களான அப்துல் ரஹ்மான், கே.எம்.அப்துல்லா, கலாத்ரா அப்துல் ஹாஜி, சோபி முதலானோர் கேரளாவில் இன்று பெயர் பெற்று விளங்குகிறார்கள். ''கேரளாவைப் பாருங்கள், மேற்கு வங்கத்தைப் பாருங்கள்! அவை எங்கள் ஆட்சியால் சொர்க்க பூமியாக திகழ்கின்றன'' என்று 'மார்சிஸ்டுகள்' மார்தட்டுவதன் உண்மையான அர்த்தம் இப்பொழுது புரிந்து விட்டது.

◆ ராசு.

# விவசாயிகள் விடுதலை முன்னணியின் மீது தாக்குதல்!
# பாட்டாளி மக்கள் கட்சியின் பாசிசப் போக்கு!

தே.மீனாட்சிபுரம் பஞ்சாயத்தில் தே.மீனாட்சிபுரம், தே.மேட்டுப்பட்டி, ஓவுலாபுரம், அழகர் நாயக்கன்பட்டி இந்த நான்கு பகுதியும் அடங்கும். நான்கு பகுதிக்கும் மையமான சாலை வசதியுள்ள பொதுவான இடமான தே.மேட்டுப்பட்டியில் பஞ்சாயத்து கட்டிடத்தைக் கட்டும்படி பொதுமக்களும் பஞ்சாயத்து உறுப்பினர்களும் கோரிக்கை வைத்தனர். இதைப் புறக்கணித்துவிட்டு பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் அய்யலு தனது ஊரான அழகர் நாயக்கன்பட்டியில் (தே.மீ.புரத்திற்கும் அழகர் நாயக்கன்பட்டிக்கும் இடையில் உள்ள தூரம் சுமார் 7 கி.மீ.) கட்டிடத்தைக் கட்டினார். இதனை எதிர்த்து கட்டிடத்தை தே.மேட்டுப்பட்டியிலேயே கட்டவேண்டுமென கோரி மனுதயாரித்து விவசாயிகள் விடுதலை முன்னணி, பகுதி மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தியது. இதில் பா.ம.கட்சி மற்றும் அதன் அங்கமான தெய்வேந்தர் குல வேளாளர் சங்கத்தின் தலைமைகளைத் தவிர பகுதி மக்கள் அனைவரும் கையெழுத்துப் போட்டனர். இதைப் பொறுக்க முடியாத சாதியத் தலைமைகள் வி.வி.மு.-வை ஒழித்துக்கட்ட வேண்டுமென கங்கணம் கட்டிக்கொண்டு செயல்பட்த் தொடங்கியுள்ளனர்.




உத்தமபாளைய வட்டார மாநாட்டை ஒட்டி தே.மீனாட்சிபுரத்தில் எழுதப்பட்டிருந்த வி.வி.மு.வின் சுவரெழுத்தை மாநாடு முடிவதற்கு முன்பே அடாவடித்தனமாக அழித்து வெள்ளையடித்தனர் பா.ம.க.வினர். அப்பொழுது தங்கள் கட்சி தலைவர் ராமதாஸ் தே.மீனாட்சிபுரம் வர இருக்கிறார்: வரவேற்று எழுதவேண்டும் என்று கூறினர். ஆனால் ராமதாஸ் வரவில்லை, 20 நாட்களுக்குப் பின் அச்சுவரில் வி.வி.மு.வினர் மலிவு விலை சாராயத்தை அம்பலப்படுத்தி சுவரெழுத்து எழுதியதற்கு எப்படி எங்களைக் கேட்காமல் எழுதலாம் என பட்டாக்காரன்போல் சண்டைக்கு வந்தனர். ''ஊரில் ஒன்று நீங்கள் இருக்க வேண்டும் அல்லது நாங்கள் இருக்க வேண்டும்'' என்று தொடையைத் தட்டி சவடால் அடித்தனர்.

பின்னர் வி.வி.மு.வினர் ஊர் பொது மக்களை சீர்குலைப்பதாக குற்றப்பட்டியல் ஒன்று ஜோடித்து பகுதி மக்களிடம் படித்துக் காட்டாமல் ஊருக்கு நன்மை செய்கிறோம் என ஏமாற்றி சுமார் 250 பாமரர்களிடம் கையெழுத்து வாங்கினர். இம்மனுவின் மூலம் 'வி.வி.மு.வினரை உள்ளே தள்ளிவிடலாம். பிறகு ஊரைவிட்டே ஓடிவிடுவார்கள்' என கனவுகண்டனர்; சிலரிடம் பேசியும் திரிந்தனர். ஆனால், வி.வி.மு.வினர் இதை அம்பலத்திற்கு கொண்டு வந்தனர். 'பொதுமக்களிடம் படித்துக் காட்டாமல் கையெழுத்து வாங்கி மோசடி செய்த பா.ம.க. கிளைத் தலைவர் டி.செல்லதுரையை காவல்துறையே கைது செய்!' என தட்டி எழுதி வைத்தனர். ஊர் பொதுமக்களைக் கூட்டி சாதிவெறியர்களின் - பா.ம.க கும்பலின் பாசிச முகத்தை திரைகிழித்துக் காட்டினர்.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடந்த தேவாரம் - போடி கலவரத்தின் போது சாதிவெறிக்கு பலியாகி பிளவு படாத வண்ணம் பிரச்சாரம் செய்து தே.மீனாட்சிபுரம் ஊர்க் கமிட்டியின் மூலம் சில கட்டுப்பாடுகள் விதித்து பகுதி மக்களின் ஒற்றுமையைக் காத்தனர் வி.வி.மு.வினர். அதன் பிறகு தேவாரம் போலீசு திட்டமிட்டே பகுதிக்குள் நுழைந்து பீதியூட்டி பொதுமக்களுக்கு தொல்லை கொடுத்து வந்ததையும் அம்பலப்படுத்தி முறியடித்தனர். தொடர்ந்து அனைத்து பகுதி பிரச்சினைகளிலும் தலையிட்டு சாதிவெறியர்களை இனங்காட்டி அம்பலப்படுத்தி வருகின்றனர். இதனால் ஆத்திரமடைந்த சாதிவெறியர்கள் பா.ம.க.வினர் வி.வி.மு. தோழர்களை தங்களுடன் சேர்ந்து செயல்படும்படி தொடக்கத்திலிருந்தே வற்புறுத்தி வந்தனர்; இல்லையெனில் ஊரைவிட்டு ஒதுக்கி வைப்போம் என மிரட்டினர். இன்று பேட்டை ரவுடியாய் தம்மை எதிர்த்து எவனும் ஊரில் இருக்கக் கூடாது என வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றனர். எந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நாங்கள் குரல் கொடுக்கிறோம் என்றார்களோ அதே தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்றி கையெழுத்து வாங்கி மோசடி செய்ததன் மூலம் தங்களைத் தாங்களே தோலுரித்தும் கொண்டார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# பிழைப்புவாதிகளின் புழுதி அரசியல்

கழகங்களின் சாடல், சவடால், புழுதி அரசியலால் தமிழகம் மூச்சு திணறுகிறது. ''கருணாநிதி ஐம்பெரும் விழா நடத்தி சென்னையை ஒரு கலக்கு கலக்கினாறென்றால், ஜெயலலிதா எம்.ஜி.ஆர். சிலை திறப்புவிழா பேரணி நடத்தி கருணாநிதியை கலக்கிவிட்டார்'' என்று கழகங்கள் கிளப்பிய புழுதியில் புரள்கின்றன, 'கிசுகிசு' அரசியல் ஏடுகள்.

பிரதமர் வி.பி.சிங் கலந்து கொண்ட சென்னைய்யைக் குலுக்கிய கருணாநிதியின் ஐம்பெரும் விழா பேரணி, முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கலந்து கொண்ட ஜெயலலிதா நடத்திய அதிரடி பேரணி, போட்டி அ.தி.மு.க. திருநாவுக்கரசு கும்பல் நடத்திய 'கொள்கை' பேரணி, இதன் நடுவில் காளிமுத்து, தலைவி ஜெயலலிதாவிடம் கண்ணைக் கசக்கி ''கொள்கைக்காக எனது பதவியிழக்கவும் தயார்'' என்று அறிக்கைவிட்டது; மறுபுறம் முதல்வர் கருணாநிதி மகன் மு.க.ஸ்டாலின் சோவியத் நாடு சென்று வெற்றியுடன் திரும்பியதற்காக மாபெரும் விழா எடுத்தது; இன்னொருபுறம், காங்கிரசு கட்சிக்கு கர்நாடகத்தில் ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க தமிழக தலைவர் மூப்பனார் விரைந்த சோகம்! (தமிழக காங்கிரசு கட்சியின் நெருக்கடியைத் தீர்க்க நாகாலாந்திலிருந்து ஒருவர் வருவார் போலும்!) - இப்படி கடந்த ஒரு மாதத்தில் வெடிப்பு, விம்மல், சோகம், மகிழ்ச்சி என்று கலந்து புழுதி அரசியல் தமிழகத்தில் மையங்கொண்டது.

மண்டல் கமிஷன் பரிந்துரையை அமுல்படுத்தியதற்கு ஆதரவுப் பேரணி என்று இதிலும் வழக்கம் போல் தன்னை அருவறுப்பான முறையில் பகட்டிக் கொண்டார், கருணாநிதி. கொள்கை ரீதியாக ஆதரவைத் தெரிவிப்பதற்கு பதில் வி.பி.சிங்கின் புகழ் பாடுவதிலேயே நேரத்தைக் கழித்தார். கருணாநிதி மனைவிகள் ராஜாத்தியும், தயாளுவும் அண்ணாசலையின் நவீன உப்பரிகையிலிருந்து கழகப் பேரணியைக் கண்டு களித்தனர். தி.மு.க. தொண்டர்கள் ''கருணாநிதி வாழ்க!'', ''வி.பி.சிங் வாழ்க!'' என்று கோஷமிட்டுவிட்டு வாடிவதங்கி வீடு சேர்ந்தனர்.

படுக்கையிலிருந்த ஜெயலலிதா பரபரப்படைந்தார்! ஏற்கனவே போட்டி அ.தி.மு.க. உருவாக்கி நமைச்சல் கொடுத்த திருநாவுக்கரசு கும்பலுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அ.தி.மு.க.வில் தன் தலைமை நீர்த்துப் போகும் என்று நம்பிக்கையுடன் கனவுகாணும் கருணாநிதியை பீதியூட்ட களத்தில் இறங்கினார்.

மூலையில் கிடந்த எம்.ஜி.ஆர். சிலை திறப்புவிழா நிகழ்ச்சியை தரிதப்படுத்தினார். திருநாவுக்கரசு ஆட்களும் எம்.ஜி.ஆர். சிலை திறக்கப் போகிறோம் என்று குறுக்கே மறித்தனர்! எனவே அவசரமாக தேதி குறித்து வழக்கத்திற்கு மாறாக தொண்டர்களுக்கு உருக்கமாக கடிதம் எழுதி பத்திரிக்கையில் அழைப்பு விடுத்தார்.

தன்னை போலவே பதவிப் பட்டினியில் வாடும் தனது தரப்பு அரசியல் குரு ராஜீவை அழைத்து வந்தார். தடபுடல் வரவேற்பு, தனது கைப்பட விருந்து, மாபெரும் பேரணி என்று ராஜீவை உற்சகமூட்டினார்.

''மக்கள் வெள்ளத்தைப் பார்த்த ராஜீவ் காந்தி 'ஜெயலலிதாஜி! நீங்களே எம்.ஜி.ஆரின் வாரிசு' என்று சொன்னார், உணர்ச்சிவயப்பட்டு! ஜெயலலிதாவின் கன்னங்கள் பூரிப்படைந்து பளபளத்தன!..'' என்று ஜூனியர் விகடன் (17.10.90) உரிமையுடன் எழுதுகிறது.

ஜெயலலிதாவின் பேரணியைப் பார்த்து கலக்கமடைந்தார் கருணாநிதி! தனது மகன் மு.க.முத்து வேறு அந்த நேரத்தில் முறைத்துக் கொண்டு ஜெயலலிதா கட்சியில் சேர்ந்துவிடவே மேலும் குழம்பினார்.

ஏற்கனவே துரத்தப்பட்டு ஜெயலலிதாவிடம் தஞ்சம் புகுந்த காளிமுத்துவுக்கு தனது பூசாரிகள் மூலம் உடுக்கையடித்தார். விளைவு; காளிமுத்து சாமியாடினார்! இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டில் 'வி.பி.சிங் அவசரப்பட்டுவிட்டார்' என்ற ஜெயலலிதா அறிக்கையை எதிர்த்து காளிமுத்து ஒரு அறிக்கை வெளியிட்டார். அவ்வளவுதான்! ஜெயலலிதாவின் மற்ற வளர்ப்பு பிராணிகள் ஓடப் பார்த்த காளிமுத்துவை 'பிலுபிலு'வென்று பிடித்துக் கொண்டன.

'ஆசிட்' புகழ் தாமரைக்கனி, அரங்கநாயகம், சேடப்பட்டி முத்தையா, காஞ்சி பன்னீர் செல்வம் ஆகியோர் காளிமுத்துவின் அருகதையை ஆதியிலிருந்து அந்தம்வரை அவிழ்த்துவிட்டனர்.

''இதய தெய்வம் புரட்சித் தலைவரின் மறைவுக்குப்பின் நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள தலைவியாம், புரட்சித் தலைவியின் முடிவுகளை விமர்சனம் செய்யும் அருகதை, ஆண்டாண்டு காலமாக யாராவது ஒருவரோடு பேரம் பேசியே அரசியல் நடத்தி வரும் காளிமுத்துவுக்கு கிடையவே கிடையாது.

புரட்சித் தலைவர் காலத்திலிருந்து அறிக்கை மன்னனாகிவிட்ட காளிமுத்தே, தொடர்ந்து இத்தகைய அறிக்கைகள் விட்டால் காமராசர் மாவட்ட எல்லைக்குள் எங்கும் நடமாடவிட மாட்டோம்... காளிமுத்துவை கட்சியிலிருந்து உடனே நீக்க வேண்டும். அப்படி நீக்காவிட்டால் நான் தீக்குளிப்பேன்'' என்று தன் தலையையே ஜெயலலிதாவின் காலடியில் வைத்தார், தாமரைக்கனி!

அரங்கநாயகம் காளிமுத்துவை விலாவில் குத்தினார். ''தலைமை கசக்கிறது. ஆனால் தலைமையினால் கிடைத்த பதவி இனிக்கிறது. என்ன செய்வார்?.. 'விற்பனைக்கு' என்று எழுதிய அட்டையை தொங்க்விட்டுக் கொண்டிருப்பவர்'' என்று நக்கல் செய்தார்.

சேப்பட்டி முத்தையா காளிமுத்துவை குறிபார்த்து தாக்கினார். ''..பேரம் முடிந்து பெற்ற அச்சாரத்திற்கு அறிக்கை விட்டுள்ளார். பாக்கி கிடைத்ததும் இன்னும்கூட பல அறிக்கைகள் விடுவார்'' என்றார்.

ஜெயலலிதாவின் கைத்தடியான எஸ்.டி.எஸ். காளிமுத்துவை அளவாகக் குத்தினார். ''தமிழறிந்த காளிமுத்து தடுமாறக் கூடாது. அவரது தடுமாற்றங்களுக்கு தத்துவ விளக்கமளிக்க முயல்வதும் கொள்கை மூலாம் பூசுவதும் அவர் குழப்பத்தில் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது'' என்றார்.

மறுபுறம், திருநாவுக்கரசு கும்பல் ஜெயலலிதாவை உசுப்பேற்றியது. ''தன்னை எதிர்த்து எந்த அறிக்கையுமே விடாத

**சிலை திறப்பு விழா பேரணியைப் பார்வையிடும் ராஜீவ் - ஜெயல்லிதா - பாசிசக் கூட்டாளிகள்.**





படிப்பகம்

www.padippakam.com

பலரை பலமுறை அவசரப்பட்டு நீக்கிய ஜெயலலிதா, இப்போது தன்னை பகிரங்கமாகத் தாக்கி பேசியிருக்கும் காளிமுத்து, ஆர்.எம்.வீரப்பன் ஆகியோர் மேல் நடவடிக்கை எடுக்க பயப்படுகிறார். அவர்களை கட்சியை விட்டு நீக்கினால், அவருடைய அணி தவிடு பொடியாகிவிடும்'' என்று அறிக்கை விட்டு, யாராவது, எப்படியாவது தம் அணிக்கு வர மாட்டார்களா என்று நாய் வண்டி போல் அலைந்தது.

திருநாவுக்கரசு அணியில் இணைந்திருக்கும் பண்ருட்டி, தம் அணியே உண்மையான, ராசியான அ.தி.மு.க. என்பதை ராஜீவுக்கு நிரூபிக்க பலவித தத்துவ விளக்கங்களை அளித்தார்.

கர்நாடகாவில், காங்கிரசு ஆட்சியைக் கவிழ்த்து மத்திய அரசு ஜனாதிபதி ஆட்சியை திணித்ததற்கு ''...ஜெயலலிதாவோடு எப்போதெல்லாம் ராஜீவ்காந்தி சேர்ந்து நின்றாலும் அப்போதெல்லாம் ஒன்று அவர் பதவி போகிறது. அல்லது அவருடன் இருப்பவர்கள் பதவி போகிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலிலும், பாண்டிச்சேரி சட்டசபைத் தேர்தலிலும், இப்போது கர்நாடகத்திலும் இது நிரூபிக்கப்பட்டு உள்ளது'' என்று அசிங்கமாக கவனத்தைக் கவர்ந்தார்.

ஜெயலலிதா நேரடியாக விசயத்திற்குச் சென்றார். தன்னுடைய தலைமையால் பெற்ற 'எம்.பி. பதவியை காளிமுத்து உடனடியாக ராஜினாமா செய்துவிட்டால் நல்லது' என்று பல்லைப் பிடுங்கினார். என் கையெழுத்துடன் பல 'லெட்டர்பேட்'கள் ஜெயலலிதாவிடம் இருக்கிறது. வேண்டுமானால் அதை உபயோகித்து அவரே என் ராஜினாமாவை நாடாளுமன்றத்திற்கு அனுப்பட்டும் என்று மீசையைத் தடவிய காளிமுத்து பிறகு பதவி பறிபோகும் பயத்தில் உளறினார்.

''பொதுச் செயலாளரின் கரத்தை வலுப்படுத்தவே இப்படிச் சொன்னேன்''. ''பொதுச் செயலாளருக்கு உள்ள பெருமை காப்பாற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில்தான் கூறினேன்'' என்று வழிந்தார்.

கடைசியாக வந்த தகவலின்படி, ஜெயலலிதாவை சந்தித்து தன்னுடைய நிலையை விளக்க காளிமுத்து முயற்சி என்று செய்தி வந்துள்ளது. ஒரு மயிர் நீங்கின் உயிர் வாழா கவரிமான் - ஐந்தறிவு விலங்கு; உதிர்ந்த ரோமமான காளிமுத்து டாக்டர், எம்.ஏ.பிஎல். மட்டுமல்ல, தமிழின தலைவர்களில் ஒருவர்!

★ ☆ ★

**வி**சிலடிச்சான் குஞ்சுகள், விடலைகள், தற்குறிகள், கிராமத்தான்கள் சேர்ந்த கலவைத்தான், எம்.ஜி.ஆர். கும்பல்; முழுக்க முழுக்க சினிமா கவர்ச்சியால் சேர்க்கப்பட்டவர்கள் என்று அ.தி.மு.க.வின் கும்பலுக்கு தி.மு.க. கொள்கை ரீதியான விளக்கம் கொடுக்கிறது.

ஜெயலலிதாவுக்குச் சேரும் கும்பல் அதைவிட மோசம்! 'புரட்சித் தலைவி'யின் உடல் கவர்ச்சியைக் கண்டு கிறங்கிப் போனவர்கள் என்று வரையறை செய்கிறது.

தி.மு.க. பாசறையோ, மெத்தப் படித்தவர்கள், அறிஞர்கள், அறிவாளிகள், பண்பாளர்கள், அரசுப் பணியாளர்கள், மத்தியத்தர வர்க்கத்தினர், நாகரீகம் படைத்த நகரத்தவர்கள், உயர்கல்வி படிக்கும் மாணவர்கள், லட்சியப் பிடிப்புள்ள இளைஞர்கள், மொழி, இனப் போராளிகள் - இவர்களை முதுகெலும்பாக கொண்டு இயங்குகிறது என்று பெருமை பேசுகிறார்கள்.



ரஷியாவுக்குச் சென்று திரும்பிய மு.க.ஸ்டாலினுக்கு வரவேற்பு - வாரிசு அரசியல்.

ஜெயலலிதா கட்சிக்கு இவர்கள் சொல்லும் அடிப்படையெல்லாம் ஒன்றுபட்ட தி.மு.க. காலத்திலேயே அதன் தலைவர்கள் விரும்பி உருவாக்கிய கொள்கை ரீதியான அடிப்படைகள் தான்! எம்.ஜி.ஆர். அதை. தானே மொத்தமாக வரித்து கொண்டாரே என்பது தான் கருணாநிதியின் ஆதங்கம்!

கருணாநிதியின் அறுவெறுப்பான சுயவிளம்பரம் பலவற்றில் இதைக் காணலாம். கட்சி, ஆட்சி விழாக்களுக்கு கும்பல் சேர்க்கவும் ஓட்டுப் பொறுக்கவும் கருணாநிதி கையாளும் கீழ்த்தரமான நடவடிக்கைகளிலும் இதைக் காணலாம்!

உதாரணத்திற்கு தன் மகனை அரசியலில் வாரிசாக நுழைப்பதற்கு கருணாநிதி செய்யும் கேவலங்களை 'கிசு கிசு' பத்திரிக்கைகளாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை; வெடித்து விடுகின்றன.

**ஜெயலலிதா போன்ற கவர்ச்சி அரசியலின் கதாநாயகிகளும் சரி, கருணாநிதி போன்ற சூழ்ச்சி, சுயவிளம்பரம், வாரிசு அரசியலின் பிதாமகன்களும் சரி; புழுதி அரசியலின் மூலம்தான் புகழேணியின் உச்சியில் தொத்திக் கொண்டிருக்கிறார்கள்!**

சமீபத்தில் ''இந்திய - சோவியத் நட்புறவுக் கழகத்தின் அழைப்பின் பேரில் ரஷ்யா சென்று வெற்றியுடன் திரும்பும் முத்தமிழின் மணிமுத்தே, தி.மு.க. இளைஞரணித் தளபதியே, வருக, வருக!'' என்று சுவரொட்டி மூலம் சென்னை சுவர்களையே மூடிவிட்டார்கள், தி.மு.க. தலைவர்கள்!

'தமிழின இளவல்' ரஷியாவுக்குச் சென்று கோர்பச்சேவுக்கு ஆலோசனை சொல்லி, வழி காட்டிவிட்டு வந்ததுபோல் சித்தரித்தார்கள்! உண்மையை ஜூனியர் விகடன் போட்டுடைத்து...ட்டது! ''ரஷ்யத் தூதரகம் சா.கணேசனுக்கு மட்டுமே முதலில் அழைப்பு விடுத்திருந்தது! முதல்வரின் மகன் ஸ்டாலினையும் அழைத்துப்போக ஏற்பாடு செய்யுமாறு ரஷ்யத் தூதரகத்திடம் தெரிவிக்கப்பட.. ஸ்டாலினுக்கும் அழைப்பு வந்தது..''

இந்த சின்ன விசயத்திலேயே கருணாநிதி இவ்வளவு அநாகரிகமாக நடந்துக் கொள்கிறாரென்றால், அவருடைய அதிகாரக் கோட்டையின் நான்கு சுவர்களுக்குள் என்னவெல்லாம் நடக்கும்?

ஜெயலலிதா போன்ற கவர்ச்சி அரசியலின் கதாநாயகிகளும் சரி, கருணாநிதி போன்ற சூழ்ச்சி, சுயவிளம்பரம், வாரிசு அரசியலின் பிதாமகன்களும் சரி; புழுதி அரசியலின் மூலம்தான் புகழேணியின் உச்சியில் தொத்திக் கொண்டிருக்கிறார்கள்! ஜனநாயகத்திற்கான அரசியல் காற்று கொஞ்சம் பலமாக வீசினாலே கவிழ்ந்து விடுவார்கள்! எனவேதான் வி.பி.சிங், ராஜீவ் என்று ஆளுக்கொரு பாசிச தலைமையைப் பிடித்து தொங்குவதில் குறியாய் இருக்கிறார்கள். அதே போல் தாங்கள் தொடர்ந்து புகழேணியின் உச்சியில் தொத்திக் கொண்டிருப்பதற்காக 'பலம்' அனைத்தையும் செலவழித்து புழுதி அரசியலை உருவாக்கி வளர்க்கிறார்கள்.

● பழநி.



படிப்பகம்

www.padippakam.com




● *"மண்டல் கமிசனை எதிர்ப்பவர்கள் மக்கள் எதிரிகளே" என்ற அரங்கக் கூட்டம் ஒன்று சென்னையில் நடந்தது. அதில் பேசிய பேராசிரியர் சுப.வீரபாண்டியன், "கேடயமும் சமரனும் சரியாக சொல்லியிருக்கின்றன. வேறு சிலர் என்ன சொல்லுவது என்று தெரியாமல் குழப்பியிருக்கிறார்கள்" என்று பேசினார். புதிய ஜனநாயகத்தைத் தானே அப்படிக் குறிப்பிட்டுள்ளார்? அதற்கு உங்கள் விளக்கம் என்ன?*

*— த.பிரபு, சென்னை.*

☆ ஐய்யய்யே! அது பழைய கதை! உங்களுக்கு சமீபத்திய நடப்பு தெரியாது போலிருக்கிறது! இப்போது கையில் தார்ச் சட்டியுடன் கேடயம் - மன ஓசைக் கும்பல் பேராசிரியர் சுப.வீரபாண்டியனைத் தேடிக் கொண்டிருக்கிறது. அவரோ முகமூடி போட்டுக் கொண்டு தான் நடமாடுகிறார் என்று கேள்விப்படுகிறோம். பேர.சுப.வீ கேடயம் - மனஓசைக் கும்பல், சமரன் குழுவினர் போன்றவாகள நமது நாட்டு அறிவு ஜீவிகளின் வளர்ச்சி மட்டத்துக்கும் நேர்மைக்கும் எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றனர்.

1-15 செப்டம்பர் கேடயம், "குனிந்தவர்கள் நிமிர்வது எப்போது? குடுமிகள் ஆதிக்கம் ஒழிவது எப்போது?" எனஅட்டைப்படக் கட்டுரைத் தலைப்பும், அதையே சுவரொட்டியாகவும் போட்டு வந்தது: அருண்செளரி, சோ முதலிய பார்ப்பன கும்பல் ஆயுத பாணியாக இடஒதுக்கீடு எதிர்ப்புப் பேரணி நடத்தும் அட்டைப்படத்துடன் வந்தது; தி.க.வின் உண்மை ஏட்டிலே வழக்கமாக வரும் பார்ப்பனனின் கேலிச் சித்திரமும் இருந்தது; 'பிற்படுத்தப்பட்ட' சாதிகளுக்குள்ளும் மேல்சாதி ஆளும் வர்க்கப் பிரிவினரைக் குறிப்பிடும் போது கூட "பூணூல் போடாத பார்ப்பனர்கள்", "பூணூல் இல்லாத ஆதிக்க சக்திகள்" என்றும், தி.க., தி.மு.க. தலைமையைக் கூட 'அரைப்பார்ப்பனர்கள்' என்றும் எழுதியிருந்தது.

அவ்வளவு தான்! கேடயம் - மனஓசை கும்பலின் இந்த அரசியல் வியாபார உத்திக்கே ஆராய்ச்சியாளரும், பேராசிரியருமான சுப.வீரபாண்டியன்போன்ற பண்டிதர்கள் வீழ்ந்து விட்டார்கள். இன்றைய படிநிலை சாதி ஆதிக்க சமூக அமைப்பில் பார்ப்பனர் ஆதிக்கத்தை தளர்த்த துணை புரியும் என்பதால் பிற்பட்டோருக்கான இடஒதுக்கீடு அவசியமானதே; ஒரு சீர் திருத்தக் கோரிக்கை என்ற அளவில் அதை ஆதரிக்கிறோம்; பார்ப்பன கும்பல்கள் நடத்தும் இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சிகளை எதிர்த்து முறியடிப்பதில் ஒடுக்கப்பட்ட பிரிவினர் அனைவரும் ஒன்றிணைந்து நிற்பது அவசியம் — என்றெல்லாம் 1-15 செப்டம்பர் கேடயம் எழுதியிருந்தது உண்மை தான். இருந்தபோதும் மண்டல் கமிசனும், அதன் தீவிர ஆதரவாளர்களான சுப.வீரபாண்டியன் போன்றவர்களும் கடுமையாக எதிர்க்கும் ஒரு நிலைப்பாட்டை, இ.காங்கிரசு, பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் முன்வைக்கும் நிலைப்பாட்டை ஆதரிக்கும் வகையிலான ஒரு கருத்தையும் 1-15 செப். கேடயம் எழுதியிருந்தது. அது பின்வருமாறு:

பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் கூட பெரும் பகுதியை விழுங்குபவர்கள் அச்சாதிகளிலும் பூணூல் போடாத பார்ப்பனர்கள், சுரண்டிக் கொழுக்கும் ஒட்டுண்ணிகள்; இட ஒதுக்கீட்டின் பலன்களைக் கூட பெரும்பாலும் பொருளாதார வசதியுள்ள குடும்பங்கள் மட்டுமே பயன்படுத்திக் கொள்கின்றன; 1000 பேர் இருக்கும் இடத்தில் 100 வேலைகளை மட்டுமே இன்றைய சமூக அமைப்பினால் தர முடிகிறது. இந்த 100 வேலைகளிலும் 50 வேலைகள் தாழ்த்தப்பட்ட, உண்மையிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தரப்படவேண்டும் என்பது ஒரு சீர்திருத்தக் கோரிக்கை என்ற அளவில் அதை நாம் ஆதரிக்கிறோம் என்று 1-15 செப். கேடயம் எழுதியது.

இவ்வாறு பொருளாதார ரீதியில் வசதியுள்ள குடும்பங்கள், உண்மையிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று பிற்பட்ட சாதிகளுக்குள்ளாகவே பாகுபடுத்திப் பார்த்து இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றுதான் இ.காங், பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் முதல் சங்கராச்சாரி வரை கூறுகின்றனர். இதைத்தான் மண்டல் கமிசன் கடுமையாக எதிர்க்கிறது. "மண்டல் கமிசன் எதிர்ப்பாளர்கள் மக்கள் எதிரிகள்" என்று முழங்கும் சுப.வீரபாண்டியர்களுக்கு மேற்கண்ட கேடயத்தின் நிலைப்பாடு ஏனோ கண்ணில் படவில்லை!

இப்படி சுப.வீரபாண்டியன் வகையறாக்களிடம் இலாபகரமாக வியாபாரத்தை முடித்துக் கொண்ட கேடயம் மனஓசைக் கும்பல் புரட்சிக்கர அணிகளின் பக்கம் கடை திறந்து அரசியல் வியாபாரத்தைத் துவங்கிவிட்டது, 1-15 அக்டோபர் கேடயம் இதழ் மூலம். 1-15 செப்டம்பர் கேடயத்தில் 1000 பேருக்கு 100 வேலை; அதில் 27 பிற்பட்டோருக்குக் கிடைக்கும்; அதாவது உண்மையிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கட்டுமே என்று கணக்குப் போட்டிருந்தனர். 1-15 அக்டோபரில் மொத்தம் 10 லட்சம் மைய அரசுப்பதவிகள்; அதில் 4 லட்சம் பிற்படுத்தப்பட்டவருக்கு ஒதுக்கப்பட்டாலும் மொத்தம் 40 கோடி பிற்படுத்தப்பட்ட மக்களில் 1000க்கு ஒருவருக்குத் தான் வேலை தரப்படும்; அதுவும் கல்வி, சமூகப் பொருளாதார ரீதியில் முன்னேறியவரே பெற முடியும்; ஆகவே "ஒடுக்கப்பட்ட வர்க்கங்களைப் பொறுத்தவரை இடஒதுக்கீடு அறிவிப்புகள், ஆசை காட்டல்கள் என்பதற்கு மேல் எதுவும் இல்லை" என்று புதுக் கணக்குப் போட்டது. 40 கோடிப் பிற்பட்ட மக்களில் வயோதிகர்கள், சிறுவர்கள், விவசாயிகள் உட்பட ஏற்கெனவே தொழில் புரிவோர் அனைவருக்கும் இடஒதுக்கீடு கணக்குப் போட்டு அதனால் ஒரு பலனும் கிடையாது என்று வலிந்து எழுதியது.

1-15 செப். கேடயத்தில் மண்டல் கமிசன் அறிக்கை கூறுவது என்ன? என்று கேள்வி கேட்டு அதன் வரலாற்றை, பரிந்துரையை எழுதினார்கள். ஆனால் 1-15 அக்டோபர் கேடயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கும் மண்டல் கமிசன் அறிக்கைக்கும் என்ன சம்பந்தம்? என்று கேள்வி கேட்டுப் பின்வருமாறு எழுதினார்கள்: "உளுத்துப் போன இந்த ஆட்சி அமைப்புக்கு ஒட்டுப்போடும் சீர் திருத்தத்தைத்தான் மண்டல் கமிசன் அறிக்கை பரிந்துரை செய்கிறது" "தாமும் அதிகாரத்தில் பங்கு வகிப்பது போன்ற மாயையை ஒடுக்கப்பட்ட மக்களிடம் தோற்றுவிப்பதற்கான சீர்திருத்த நடவடிக்கை" என்றார்கள்.

1-15 செப்டம்பர் கேடயத்தில், பார்ப்பன கும்பல்கள் நடத்தும் "இட ஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சிகளை எதிர்த்து முறியடிப்பதில் ஒடுக்கப்பட்ட பிரிவினர் அனைவரும் ஒன்றிணைந்து நிற்பது அவசி

**பொருளாதார ரீதியில் வசதியுள்ள குடும்பங்கள், உண்மையிலே பிற்படுத்தப்பட்ட மக்கள் என்று பிற்பட்ட சாதிகளுக்குள்ளாகவே பாகுபடுத்திப் பார்த்து இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றுதான் இ.காங்., பாரதீய ஜனதா மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள் முதல் சங்கராச்சாரி வரை கூறுகின்றனர். இதுதான் கேடயம் எழுதியிருந்த நிலைப்பாடுமாகும். இதைத்தான் மண்டல் கமிசன் கடுமையாக எதிர்க்கிறது. "மண்டல் கமிஷன் எதிர்ப்பாளர்கள் மக்கள் எதிரிகள்" என்று முழங்கும் சுப.வீரபாண்டியர்களுக்கு கேடயத்தின் நிலைப்பாடு ஏனோ கண்ணில் படவில்லை!**



படிப்பகம்

www.padippakam.com

யம்'' என்று எழுதினார்கள். ஆனால் 1-15 அக்டோபர் கேடயத்தில் ''இன்று 'ராமஜென்மபூமி - பாபர் மசூதி' பிரச்சினை நாடெங்கும் மதப் பிளவுகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுவது போன்று, மண்டல் கமிசன் இடஒதுக்கீட்டுப் பிரச்சினை சாதியப் பிளவுகளை உருவாக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது'' என்று எழுதினார்கள்.

அதோடு ''இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை சாதிய சண்டைபோல் தோற்றமளித்த போதும் உண்மையில் இது ஒரு வர்க்கப் பிரச்சினை. அரசு அதிகாரத்தில் ஏற்கெனவே செல்வாக்குப் பெற்ற வர்க்கங்களுடன் அரசு அதிகாரத்தில் கூடுதலாகப் பங்கு கேட்கும் வர்க்கங்கள் மோதிக் கொள்ளும் வர்க்க மோதல்தான் இது'' என்றும் எழுதியது.

1-15 செப்டம்பர் கேடயத்தில், இன்றைய படிநிலை சாதி ஆதிக்க சமூக அமைப்பில் பார்ப்பனர் ஆதிக்கத்தை தளர்த்த் துணை புரியும் என்பதால் அவசியமானதே என்றார்கள்; 1000 பேருக்கு 100 வேலைகளே இன்றைய சமூக அமைப்பினால் தரமுடியும் என்றாலும் அதிலும் இடஒதுக்கீடு செய்வதை ஒரு சீர் திருத்தக் கோரிக்கை என்ற அளவில் ஆதரிப்பதாக எழுதினார்கள். ஆனால் 1-15 அக்டோபர் கேடயத்தில், ''ஏற்ற தாழ்வான சமூக அமைப்பில் சமத்துவத்தை சாதிப்பதற்கே ஒடுக்கப்பட்டோருக்கு முன்னுரிமைகள் அவசியம். ஆனால் இன்றைய பிற்போக்கான சமூக அமைப்பில் இத்தகைய முன்னுரிமைகள் உண்மையிலே ஒடுக்கப்பட்டோரை விடுவிப்பதாக அமையாது. மாறாக ஒடுக்கப்பட்டோரிலேயே ஒரு பிரிவினரை ஆளும் வர்க்கங்களின் சேவகர்களாகவும், பங்குதாரர்களாகவும் மாற்றுவதாகவே இருக்கும். இத்தகைய முன்னுரிமைகள் உண்மையிலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கான முன்னுரிமைகளாக அமைவது ஒரு புரட்சிகர அரசின் கீழ்தான் சாத்தியம்'' என்று தள்ளிப் போட்டு விடுவார்கள்.

கேடயம் - மனஓசைக் கும்பல் இப்படி 'திடீர் பல்டி' அடித்த விவகாரத்தை சுப.வீரபாண்டியன்போன்ற ஆராய்ச்சியாளர்களிடம் விட்டு விடுவோம். இப்போது அதீதப் புரட்சி வேடம் போடும் கேடயம் - மனஓசைக் கும்பல் இன்னும் சில கேடான வாதங்கள் வைப்பதைப் புரட்சிகர அணிகள் கவனிக்கவேண்டும். அவை: (1) மண்டல் கமிசன் விவகாரத்தில் சாதிப் பிளவுகள், மோதல்களை உருவாக்குவது சம்பந்தப்பட்ட இரண்டு சாதியினரும் தான். 'ராம ஜென்மபூமி - பாபர் மசூதி' விவகாரத்திலோ மதப் பிளவுகளை உருவாக்கி மோத விடுவது ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி., விசுவ இந்து பரிசுத் ஆகிய பார்ப்பன கும்பல்தான். இரண்டு விவகாரங்களையும் இவ்வாறு ஒப்பிடுவதன் மூலம் பார்ப்பன கும்பல்களைப் போலவே முஸ்லீம்கள் மீது பழிதூற்றுகிறது. (2) இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை ஆளும் வர்க்கங்கள் மோதிக் கொள்ளும் வர்க்க மோதல்தான்; இரண்டு பிரிவுமே நிலவும் உளுத்துப் போன ஆட்சி அமைப்பைப் பாதுகாப்பதற்கான வர்க்கங்கள் தான் என்று எழுதும் கேடயம் - மனஓசைக் கும்பல் அவற்றிலே பிற்போக்கான பார்ப்பனீய உறவுகளுக்காக நிற்கும் சக்திகளை எதிர்த்து முறியடிக்க வேண்டும்; அதே வேளையில் முதலாளித்துவ உறவுகளுக்காக நிற்கும் சக்திகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும் என்கிறது. ஆகவே ஆளும் வர்க்கங்களிலேயே ஒரு பிரிவுடன் ஏதாவது ஒரு வகை சமரசத்துக்கு அடிபோடுகிறது. (3) புரட்சிக்குப் பிறகு, புரட்சிகர அரசின் கீழ்தான் இடஒதுக்கீடு உண்மையிலேயே ஒடுக்கப்பட்ட சாதிகளுக்குக் கிடைக்கும் என்று ஐந்தாண்டுகளுக்கு முன்பு மனஓசை எழுதியது. இப்போது மீண்டும் அதைப் புதுப்பித்து ஒடுக்கப்பட்ட சாதிகள் என்பதற்குப் பதில் ஒடுக்கப்பட்ட மக்கள் என்கிற சொற்களைப் போட்டு கேடயம் எழுதுகிறது.

இட ஒதுக்கீடு என்பதே சாதி, இன, மத அல்லது நிற அடிப்படையில் தரப்படும் முன்னுரிமையைத் தான் குறிக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்கள் என்கிற பொதுவான வரையறையின்கீழ் இட ஒதுக்கீடு என்பது பொருளற்றதாகி விடும். அது மட்டுமல்ல புரட்சிக்குப் பிறகு அமைவதோ ஒடுக்கப்பட்ட மககளின் அரசு தான். அதிலே அவர்களுக்கு முன்னுரிமை என்கிற பிரச்சினை ஏன் எழுகிறது. அதாவது புரட்சிக்குப் பிறகும் சாதிகள் பதிவு செய்யப்பட்டு அமைப்பாக நீடிக்கும் என்பது தான் கேடயம் - மனஓசைக் கும்பலின் கருத்து. புதிய ஜனநாயகப் புரட்சி என்பதே வரணாசிரம - பார்ப்பனீய - இந்து வெறி மற்றும் சாதீய அமைப்பை அடிப்படையாகக் கொண்ட அரை நிலப்பிரபுத்துவத்தைத் தகர்ப்பது தான். பிறகு மிச்சசொச்சங்களாகவே அவை நீடிக்க முடியும்; அவையும் சீர்திருத்தங்கள் மூலம் அழிக்கப்படும். அப்படி இருக்கும்போது சாதிபார்த்து இட ஒதுக்கீடு என்கிற பிரச்சினை எப்படி வரும்? வர்க்க அடிப்படையிலான முன்னுரிமைகள் தானே இருக்கும்?

இது ஒருபுறம் இருக்க, சமரன் குழுவினர் இடஒதுக்கீடு பிரச்சினை குறித்து விவாதித்துக் கொண்டிருப்பதாகவும், புதிய ஜனநாயகத்துக்கு அதன் மீது எந்த ஒரு நிலைப்பாடும் கிடையாது; நடுநிலை வகிக்கிறது என்றும் ஆகஸ்டு - செப்டம்பர் மாதங்களில் பேசி வந்தனர். அப்படி இருக்கும்போது சமரன் நிலைப்பாடு சரியானதென்று பேரா. சுப.வீரபாண்டியன் பேசியுள்ளார். அது எப்படிச் சாத்தியமானது? ஒன்று மட்டும் தெரிகிறது: புதிய ஜனநாயகத்துக்கு எதிராக ஒரு சாந்தர்ப்பவாத அணி உருவாகி அவதூறுகளில் இறங்கியுள்ளது!

இப்போது அதே சமரன் குழுவினர் கூறுகின்றனர்: புதிய ஜனநாயகத்தின் முடிவு தான் நாங்களும் எடுத்திருப்பது; ஆனால் சொல்லத் தெரியாமல் சொல்லி சிக்கிக் கொண்டார்கள். இப்படித்தான் எல்லா விவகாரங்களிலும் கூறுகின்றனர். எப்போதாவது, எந்த விவகாரத்திலாவது சொந்தமாகவும் சரியாகவும் உரிய காலத்தில் சமரன் குழுவினர் முடிவெடுக்க மாட்டார்களா என்று நாம் காத்திருக்கிறோம். ஆனால் அவர்களோ, குடிக்கத் தண்ணீர் கேட்டால் (கருமாதிக்கு) குளிப்பாட்டத் தண்ணீர் கொண்டு வருபவர்களாகவே இருக்கிறார்கள்.

கேடயம் - மனஓசைக் கும்பலும், சமரன் குழுவும் இப்போது எடுத்துள்ள நிலைப்பாடுகளைப் பார்த்து பேர.சுப.வீரபாண்டியர்கள் கூறட்டும் யார் முடிவெடுக்கத் தெரியாமல் குழப்புபவர்கள்? புதிய ஜனநாயகமா? அவர்களா?

## அறிவிப்பு

**தவிர்க்கவியலாத காரணங்களால் புதிய ஜனநாயகம் 23-24 ஆகிய இரு இதழ்களும் சேர்த்தே வெளிவருகின்றன; அடுத்த இதழ் நவ 16 அன்று கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். சிரமத்திற்கு வருந்துகிறோம். — ஆசிரியர் குழு.**

## புதிய ஜனநாயகம்
# ஆறாவது ஆண்டு விழா
# மதுரையில்

அன்பார்ந்த வாசகர்களே,

புதிய ஜனநாயகத்தில் வெளிவந்துள்ள கட்டுரைகள் - அதன் அரசியல் கண்ணோட்டம் குறித்து உங்களது விமர்சனங்கள், சந்தேகங்கள், ஆலோசனைகளை அக்டோபர் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். நிகழ்ச்சியில் ஆசிரியர் அவற்றுக்கு பதில் அளிப்பார். தவறாமல் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுங்கள்! புதிய ஜனநாயகத்தை புரட்சிப் பாதையில் வழி நடத்திச் செல்ல கருத்தால் உதவுங்கள்!

ஆறாம் ஆண்டு விழா நவம்பர் 7-ந் தேதி நடைபெறுமென சென்ற இதழில் அறிவித்திருந்தோம். நாம் தீர்மானித்துள்ள நாளில் நிகழ்ச்சிக்கான அரங்கம் கிடைப்பதில் சிக்கல் உள்ளதால் அடுத்த இதழில் நிகழ்ச்சிநிரலை விபரமாக அறிவிக்கிறோம்.

— ஆசிரியர் குழு.



படிப்பகம்

www.padippakam.com



மணக்கோலத்தில் சென்றவர்; இந்திய ராணுவத்தால் கும்பலாக கற்பழிக்கப்பட்டார்; அவமானம் யாருக்கு?

# ''பயிற்சி மட்டும் இருந்தால், இந்திய ராணுவத்தைக் கொன்று பழி தீர்ப்பேன்''

இந்திய அரசின் பயங்கரவாதத்தில் காஷ்மீர் மக்கள் மீண்டும் மீண்டும் குரூரமாக தோய்த்தெடுக்கப் படுகிறார்கள். இந்து மத வெறி கவர்னர் ஜக்மோகன் இடம்மாறி போனபிறகும் (நாடாளுமன்ற மேல்சபை உறுப்பினரானார்) காஷ்மீர் முஸ்லீம்களுக்கு நிம்மதி இல்லை.

கழுகுக்கு பதில் ஓநாயை காவலுக்கு நியமித்துள்ளது வி.பி.சிங் அரசு. இந்திய அரசின் உளவு படை 'ரா'வின் முன்னாள் தலைவர் கிரீஷ் சாக்சேனாவை காஷ்மீர் கவர்னராக்கியது. இப்போது இந்திய அரசின் ராணுவத்தின் கொடுங்கரம் காஷ்மீரின் குக்கிராமங்கள் வரை நீண்டுள்ளது.

ஒருமைப்பாடு, சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பது என்ற பெயரில் பிரிவினைவாதிகளை ஒடுக்குவது, தீவிரவாதிகளை பிடிப்பது என்று கிராமங்களில் புகும் ராணுவம் முஸ்லீம் அபலைகளை கும்பல் கும்பலாக கற்பழித்து அவமானப்படுத்துகிறது. எதிர்ப்பவர்களை நிர்வாண அணிவகுப்பு நடத்தி இழிவுப்படுத்துகிறது. 'தேடுதல்' வேட்டையின் இறுதியில் முஸ்லீம்களின் அற்ப உடமைகளையும், வீடுகளையும் தீயிட்டு கொளுத்துகிறது.

அம்பலப்பட்டு போன இந்திய அரசு இப்படி சமாதானம் சொல்கிறது. தமது கடமைகளின் போது அத்து மீறல்கள் ஒரு சிலவற்றை ராணுவ வீரர்கள் செய்கின்றனர் என்று சப்பைகட்டு கட்டுகிறது.

ஆனால் ராணுவம் முழுக்க கிரிமினல் நடவடிக்கைகளுக்குத் தான் ஏவிவிடப்பட்டிருக்கிறது என்பதை உழைக்கும் பத்திரிகையாளர்கள் மீண்டும் ஒரு முறை ஆதாரங்களுடன் நிரூபிக்கின்றனர்.

இந்தியா - பாகிஸ்தான் எல்லையிலிருந்து 25 கி.மீ தூரத்தில் இருக்கும் சிறு கிராமம் பஷி போரா. ஆகஸ்ட் 10-ந் தேதி அங்கு டஜன் கணக்கில் ராணுவத்தினர் வந்திறங்கினர். குடும்ப ஆண்களை துப்பாக்கி முனையில் சிதறடித்தனர். பெண்களை வரிசையாக நிறுத்தி இளமையானவர்களையும் அழகானவர்களையும் தனியாகப் பிரித்து மீதி பேர்களை விரட்டியடித்தனர். பள்ளி போரா என்ற பக்கத்து கிராமத்துக்கு விரட்டியடிக்கப்பட்ட பெண்கள் தப்பித்து வந்தனர்.

50 வயது சாஜா என்ற தாய் மிரட்சியுடன் அந்த பயங்கரத்தை நினைவு கூர்கிறார், ''பெண்களை நிர்வாணமாக்கி நடக்கவிட்டு ரசித்தனர். ஒரே சமயத்தில் 8-லிருந்து 10 ராணுவத்தினர் ஒருவர் மீது விழுந்தனர். என் தலையிலும், கண்ணிலும் துப்பாக்கி கட்டையால் அடித்தனர். கல்யாணம் ஆகாத எனது இரண்டு பெண்களை கெடுக்க நான் விடவேயில்லை''

ஆனால் எல்லோரையும் அத்தாயால் காப்பாற்ற முடியவில்லை. தப்பி ஓடியவர்களை கழனி வேலிகளிலும் மாட்டுக் கொட்டகையிலும் வைத்து கும்பல் கும்பலாக கற்பழித்தது இராணுவம். பாதிக்கப்பட்ட அபலைகள் பலர் நினைவு திரும்பாமல் கழனிகளில் கேட்பாரற்று கிடந்தனர். அவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

உடைகள் கிழிக்கப்பட்டு ரத்தத்தில் தோய்ந்து கிடந்தது.

தைரியமுடன் பெண்களை காப்பாற்ற வந்த ஆண்களை துப்பாக்கியால் சுட்டு அவர்கள் கண் முன்னே கற்பழித்தது, ராணுவம். இவ்வாறு ராணுவத்தால் கற்பழிக்கப்பட்ட 16 வயது ருக்சானா 15 நாட்கள் உயிருக்கு போராடி மீண்டார். ஆனால், இன்னும் அவர் மரண பயத்திலிருந்து மீளவே இல்லை.

ஸ்ரீநகரின் தெற்கே 90 கி.மீ தூரத்தில் இருப்பது குப்வாரா மாவட்டம். இயற்கை எழில் கொஞ்சும் மலைகளும், அடர்ந்த காடுகளும் அடங்கிய இடம். தேரேகாம் என்பது அங்கேயுள்ள சிறு கிராமம். ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி அமைப்பின் நிறுவனரான மக்பூல்பட் பிறந்த ஊர்.

அங்கு தேடுதல் வேட்டையில் இறங்கிய ராணுவம் வீடு வீடாக புகுந்து பெண்களை இழுத்துச் சென்றது. எதிர்த்தவர்களை பெண்கள் என்றும் பாராமல் 'பெல்ட்'டாலும், துப்பாக்கி கட்டையாலும் அடித்தது. மின்சாரம் செலுத்தி சித்திரவதை செய்தது. 18 வயது மும்தாஜ் என்ற இளம் பெண்ணை இவ்வாறு அடித்து தனது இச்சையை தீர்த்துக் கொண்டது.

அப்போது மிரண்டு அவ்வீட்டை விட்டு ஓடிய குடும்பம், பல நாட்களுக்கு பிறகும் திரும்பி வரவேயில்லை. மேலும் 18 வயது பெண் சித்திரவதைக்கு பிறகு ராணுவத்தால் தலை கீழாக மரத்தில் தொங்க விடப்பட்டாள். உயிர் பிழைத்தாலும் அவள் இன்னும் பழைய நிலைக்குத் திரும்பவேயில்லை.

சோகிபால் என்ற கிராமத்திலிருந்து ஒரு இளம் தம்பதிகளை கடத்திச் சென்றது, ராணுவம். ராணுவ முகாமில் கணவரை மரத்தில் கட்டிவிட்டு, மனைவியை கற்பழித்தனர்.

16 வயது ஜுலேகா தனது தாயுடன் சாலி பகாட என்ற தனது குடியிருப்பு பகுதியில் காலை நேரத்தில் நடந்து சென்று கொண்டிருந்தாள். அங்கு சென்று கொண்டிருந்த ராணுவம் அவர்களை அப்படியே தூக்கி கொண்டு போய் விட்டது. அருகாமையில் இருந்த காட்டுப்பகுதியில் அப்பெண் மாலையில் கண்டெடுக்கப்பட்டார். வீட்டுக்கு எடுத்து வரப்பட்ட அவர் அன்றிரவே இறந்து போனார்.

இஸ்லாமாபாத் மாவட்டம் படாஸ்கம் கிராமத்தில் வைத்து திருமண பேருந்திலிருந்து புது மணமகளை எல்லை பாதுகாப்பு படையினர் இழுத்துச் சென்று கும்பலாக கற்பழித்தனர். 2 நாளுக்குப்பின் விடுவித்தனர். ஆனந்த்நாக் மாவட்ட பொது மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார். மக்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பு கிளம்பவே, குற்றவாளிகள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

பத்காம் மாவட்ட வத்வான் கிராமத்தில் 100-க்கும் மேற்பட்ட வண்டிகளில் வந்திறங்கிய ராணுவத்தினர், அப்பாவி விவசாயிகளின் குடும்பங்களில் புரிந்த அட்டூழியங்கள், புல்வாமா மாவட்டத்தில் நடந்த ராணுவ கற்பழிப்புகள் - இவை எதற்கும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படவேயில்லை.

கற்பழித்து கொல்லப்பட்ட தமது சகோதரிகளுக்கு ஆதரவாக, சித்திரவதைக்கும் கொலைக்கும் பலியான தமது சகோதரர்களுக்கு ஆதரவாக இறுதி ஊர்வலம் நடத்தக் கூட காஷ்மீர் மக்களுக்கு அனுமதி இல்லை. இறுதி ஊர்வலத்தில் கலந்துக் கொள்பவர்களையும் நர வேட்டையாடுகிறது, இந்திய ராணுவம்.

உயிரா? மானமா? உடமையா? உரிமையா? எதையாவது ஒன்றைதான் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று கொக்கரிக்கிறது, இந்திய அரசு! இந்திய ஆதிக்க வெறி அரசின் மிருகபலத்தைக் கண்டு வீரமிக்க காஷ்மீர் முஸ்லீம்கள் பணிந்து விடவில்லை. அதன் சவாலுக்கு நேருக்கு நேர் முகங்கொடுக்கிறார்கள்! இந்திய ஆக்கிரமிப்பு வெறியர்களுக்கு புரியும் மொழியிலே பேசுகிறார்கள்!

இதோ, பர்தா அணிந்த அன்பிற்குரிய எமது முஸ்லீம் சகோதரிகள் போர்களத்தில் இறங்கி விட்டார்கள்! இந்திய கொலைவெறி ராணுவத்தை சந்திக்க மரபுவழி ஆயுதங்களில் பயிற்சி பெறுகிறார்கள்! எங்களுக்கு உயிரும் வேண்டும் மானமும் வேண்டும், உடமையும் வேண்டும், உரிமையும் வேண்டும் என்று முழங்குகிறார்கள்! தமது நீதியான யுத்தத்திற்கு இந்திய உழைக்கும் மக்கள் கண்டிப்பாக தோள் கொடுப்பார்கள் என்று நம்புகிறார்கள்!

● பச்சையப்பன்

**இந்திய ராணுவம் கிழித்த தங்கள் ஆடைகளை காட்டுகிறார்கள்; விரைவில் பழி தீர்ப்பார்கள்!**





படிப்பகம்

www.padippakam.com

# ஜெர்மன் 'ஐக்கியம்': மேற்கு கிழக்கை முழுங்கியது





ரெயிஷ் ஸ்டாக் பெர்லினிலுள்ள வரலாற்றுச் சிறபப மிக்க ஜெர்மானியப் பேரரசின் நாடாளுமன்றக் கட்டிடம். அங்கே தான் மனித குலத்தின் பயங்கர எதிரி நாஜிக் கொலைவெறியன் அடால்ஃப் இட்லர் அரசுத் தலைவராகப் பதவியேற்றுக் கொண்டான். அதே ரெயிஷ் ஸ்டாக் கட்டிடத்தை தானே கொளுத்தி விட்டு ஜார்ஜ் திமித்ரோவ் போன்ற கம்யூனிச தலைவர்கள் மீது பழி சுமத்தி ஜெர்மனி முழுவதும் நாஜித் தாக்குதலை ஏவி மக்களது அனைத்து உரிமைகளையும் பறித்தான். அதே ரெயிஷ்ஸ்டாக்கில் தான் கொடிய பாசிச ஆக்கிரமிப்பு உலகப் போரைப் பிரகடனம் செய்தான். இட்லரின நாஜிப் படைகளை வென்று ஆக்கிரமிப்பு உலகப்போர் முடிவுற்றதை அதே ரெயிஷ் ஸ்டாக் கட்டிடத்தின் உச்சியில் செங்கொடி ஏற்றிப் பிரகடனம் செய்தது சோவியத் செஞ்சேனை. அதன் மூலம் மனித குலத்தையே - உலகத்தையே நாஜிப் பேரழிவிலிருந்து காத்தது

கடந்த அக்டோபர் மூன்றாம் நாள் நள்ளிரவில் அதே ரெயிஷ் ஸ்டாக்கில் கிழக்கு - மேற்கு என்று பிளவு பட்டிருந்த ஜெர்மனியின் ஐக்கியம பிரகடனப்படுத்தப் பட்டது. உண்மையில் இது ஐக்கியமல்ல; கிழக்கு ஜெர்மனியை மேற்கு ஜெர்மனி கைப்பற்றிக் கொள்வது தான். ''வாருங்கள், ஜெர்மனி ஜனநாயகக் குடியரசோடு! ஜெர்மனிக்குப் போவோம்!'' என்று எழுதிய பதாகைகளே இந்த கைப்பறறுதலைப் பிரகடனம் செய்து விட்டது.

கிழக்கு ஜெர்மனியின் நாடாளுமன்றம், அரசாங்கம், இராணுவம், கொடி, தேசியக் கொடி அனைத்தும் தூக்கி எறியப்பட்டு விட்டன. மேற்கு ஜெர்மனியின் கறுப்பு, சிகப்பு, பொன்னிறக் கொடியேற்றி அதன் தேசிய கீதம் பாடினார்கள். கிழக்கு ஜெர்மனியின நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கு ஜெர்மனியினுடையதோடு சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதன் ஐந்து உறுப்பினர்களை மேற்கு ஜெர்மனியின் அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டு ஜெர்மனி முழுவதும் அதன் ஆதிக்கம் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து விட்டது, பிற்போக்கு கிறித்துவ ஜனநாயகக் கட்சி. முதல் தவணையாக 187000 கோடி ரூபாய் ருசிய ஆக்கிரமிப்பு இராணுவத்துக்குக் கொடுத்து வெளியேற்றிவிட்டு - விலை கொடுத்து விட்டுத் தான் கிழக்கை மேற்கு ஜெர்மனி கைப்பற்றியிருக்கிறது.

ஏதோ ஏராளமான திரண்ட சொத்துக்களைப் பாகம் பிரித்துக் கொண்டு போன சகோதரன் எல்லாவற்றையும் ஊதாரித்தனமாக இழந்து விட்டு வந்து, பெருஞ்செல்வந்தனாக வளர்ந்து விட்ட இன்னொரு சகோதரனிடம் கையேந்துவதைப் போல ஏளனப் பார்வைக்கு இலக்காகி இருக்கிறது கிழக்கு ஜெர்மனி. சர்வநாசம் விளைவித்த போரின் சிதிலங்களையும் பிணக்காட்டையும் தான் அவர்கள் பெற்றிருந்தார்கள் என்பதையெல்லாம் மறைத்து விட்டார்கள். கிழக்கு ஜெர்மனியின் அரசுத் தலைவராய் இருந்த டீ மாய்ஜிரே, ''கண்ணீர் சிந்தாது விடைபெறுகிறோம்'' என்று அறிவித்தார். அவரைப் போலவே மற்ற பிற துரோகிகளும் சிறிதும் வெட்கமின்றி தாழ்வு மனப்பான்மையைப் பறைசாற்றி விட்டு மேற்கு ஜெர்மனியின் ஆதிக்க வாதிகளின் கால்களில் சரணடைந்தனர்.




மேற்கு ஜெர்மனியின் வேந்தரும், மிதவாத நாஜியுமான ஹெல்மெட் கோல் ''கம்யூனிச சர்வாதிகாரத்தில் இருந்து விடுபட்டு வந்ததற்காக'' கிழக்கு ஜெர்மானியர்களை வாழ்த்தினார்; இதற்காக கம்யூனிசத் துரோகியான ருசிய சர்வாதிகாரி கோர்பச்சேவுக்கு நன்றி சொன்னார்.

இவ்வாறு கிழக்கு ஜெர்மனியை மேற்கு ஜெர்மனியின் மிதவாத நாஜிக்கள் கைப்பற்றிக் கொண்டுள்ளதை மூடி மறைப்பதற்காக கிழக்கு பெர்லினில் இந்த விழாவை மிகக் கோலாகலமாகக் கொண்டாடினர். பித்தோவின் இசை, பட்டாசு - வாண வேடிக்கைகள், ஊர்வலங்கள், போதை ஏற்றும் விருந்துகள், களிவெறியாட்டங்கள், அதி நவீன பிரெஞ்சு லேசர் ஒளிச்சித்திரங்கள் என்று திமிலோகப்பட்டது, கிழக்கு ஜெர்மனி.

எல்லாம் அரசு ஏற்பாடு செய்த செயற்கையான ஆர்ப்பாட்டங்கள் தானே தவிர கிழக்கு - மேற்கு ஜெர்மனி மக்கள் எவ்வித உற்சாகமும் காட்டவில்லை என்று எல்லா நாட்டு முதலாளித்துவ ஏடுகளும் எழுதுகின்றன. இவ்வளவையும் மீறி 20,000 கிழக்கு ஜெர்மானியர்கள் இந்த ஐக்கியத்தை எதிர்த்து வன்முறை ஆர்ப்பாட்டம் நடத்தினர். மேற்கு ஜெர்மனியின் தேசியக் கொடிகள் கொளுத்தப்பட்டன; கலவரங்களை ஒடுக்குவதற்காக மேற்கிலிருந்து கொண்டு வந்து குவிக்கப்பட்டிருந்த போலீசுக்கு எதிராக பீர்பாட்டில்களை வீசிப் போராடினர். ஹெலிக்காப்டர் விமானங்களில் ரோந்து சுற்றிய போலீசையும் கண்டு அஞ்சாது, ஐக்கியப் பிரகடன விழா நடந்த ரெயிஷ் ஸ்டாக்கிற்குள் நுழைந்த மக்கள் மீது துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டன.

பெர்லின் தவிர கிழக்கில் லீப்சிக், மாக்டேபர்க், ஷ்வெரின் மற்றும் மேற்கில் கோட்டிங்ஜென் ஆகிய நகரங்களிலும் ஐக்கிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஜெர்மானிய மக்களில் பலரது விருப்பத்துக்கு எதிராக இந்த இணைப்பு நடந்தது. திடீரென்று அதிகரித்து வரும் வேலை இல்லாத் திண்டாட்டம், மற்றும் வாழ்க்கைச் செலவுகளைக் கண்டு கி.ஜெர்மனி மக்கள் கவலை கொண்டுள்ளனர். கிழக்கு ஜெர்மனி வெறும் பஞ்ச பூமியாகி விட்டது. மறு நிர்மாணம், மறு வாழ்வளிக்கவே கோடி கோடியாய்க் கொட்ட வேண்டும் என்று ஊதிப் பெருக்கி மேற்கு ஜெர்மனியில் நடத்தப்பட்ட பிரச்சாரம் எதிர் விளைவை ஏற்படுத்தியது; அதாவது தமது வசதிகளில் நிறைய இழக்க வேண்டும் என மே.ஜெர்மனியில் பீதி கிளப்பப்பட்டது: இந்த நிலையில் மேற்கத்திய ஏகபோகங்கள் பீற்றிக் கொள்ளும் ஜனநாயக மரபுப்படி மக்கள் கருத்துக்கணிப்பு ஒப்புதல் பெறாமலேயே அவசர அவசரமாக 'ஐக்கியத்தை' அவர்கள் மீது திணித்துள்ளார்கள்.

இதன் காரணமாக எழுந்த எதிர்ப்புகளும் தீவிரமாகியுள்ளன. இவற்றையெல்லாம் சமாளிப்பதற்காக மக்கள் மீது தாக்குதல் மற்றும் கலவரங்கள் நடத்தும்படி புதிய



படிப்பகம்

www.padippakam.com



நாஜிக் குண்டர்கள் - கும்பல்களும் ஏவி விடப்பட்டனர்.

கோர்பி கொண்டு வந்த பிரெஸ்த் ரோய்க்கா மற்றும் கிளாஸ்நோஸ்ட்டும், 1989 நவம்பர் 9-ந் தேதி பெர்லின் சுவர் தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நடந்த 'மக்கள் புரட்சி'யும் தான் ஜெர்மன் இணைப்புக்கு வழிவகுத்தன என்று கூறுகிறார்கள். ஆனால் 1989 இல் கி.ஜெர்மனியில் மக்கள் புரட்சி எனப்படும் ஆட்சிக் கவிழ்ப்பு கலகங்களைத் தலைமையேற்று நடத்திய அனைவரையும் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள், புதிய ஐக்கிய மிதவாத நாஜிக்கள். புதிய அரசாங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மந்திரிகள் அனைவரும் ஹெல்மட் கோலின் கிறித்துவ ஜனநாயகக் கட்சிக்காரர்கள்; 1989 ஆட்சிக் கவிழ்ப்பு புரட்சியில் இவர்கள் எந்தப் பங்கும் ஆற்றியது கிடையாது.

இதுதான் வரலாற்றின் படிப்பினை என்றறியாத ஜெர்மானிய மக்கள் தெருக்களிலே நின்று கூச்சல் போடுகிறார்கள். ''புரட்சியைத் துவங்கி நடத்தியவர்களைப் பற்றி நீங்கள் ஏன் மவுனம் சாதிக்கிறீர்கள்; அரசியல்வாதிகள் தமது சுயநலன்களுக்காக இயக்கத்தையே கடத்திக் கொண்டு போய் விட்டார்கள்'' என்று அவர்களில் ஒருவர் பத்திரிகையாளரைப் பார்த்து ஆவேசமாகக் கேட்டாராம். கிழக்கு ஜெர்மனியின் ஆட்சிக் கவிழ்ப்புப் புரட்சியின் மையமாக விளங்கிய லீப்சிக் நகரின் மாதா கோவில் அன்று இழுத்துப் பூட்டப்பட்டிருந்தது. ''வேலையிழந்தவர்களுக்காக இடை இடையே தொழுகைகள் நடத்தலாம்'' என்று 'ஜோக்' அடித்தாராம் தலைமைப் பாதிரியார்.

1989 நவம்பர் ஆட்சிக் கவிழ்ப்புப் புரட்சி கி.ஜெர்மனி மக்களிடம் ஒரு பெருமளவு மாயை ஏற்படுத்தியிருந்தது உண்மை தான். முன்பு கி.ஜெர்மனியில் உணவு, உடை, வீடு போன்றவற்றிற்கு அரசு மானியம் காரணமாக மக்கள் தமது வருமானத்தில் குறைந்த பங்கே செலவழித்து வந்தனர். ஆனால் குளிர்சாதனப் பெட்டி, வாகனங்கள், துணி துவைக்கும் இயந்திரம், வானொலி, வீடியோ போன்றவற்றுக்கு பெருமளவு பணம் செலவழிக்க வேண்டியிருந்தது. அதனால் மேற்கு ஜெர்மனி நாணய விகிதத்தில் வருமானம் பெற்றால் வீடு, உணவு, உடை போக மேற்கண்ட பாவனைப் பொருட்களை எளிதில் பெறலாம் என்று கனவு கண்டனர்.

ஆனால் மேற்கிலோ 40-50% வீட்டு வாடகைக்கும், 30% வரை உணவுக்கும் மக்கள் தமது வருமானத்தில் செலவிட்டு எஞ்சியதற்குப் பாவனைப் பொருட்கள் வாங்க முடியாமல் திண்டாடினார்கள்; அதோடு ஏகபோகக் கொள்ளைக்கும் ஈடு கொடுக்கிறார்கள். இதனால் அங்கே விண்ணை முட்டும் அளவு விலைவாசி ஏறியிருந்தது.

இந்த உண்மைகளை மூடி மறைத்து, மேற்கு ஜெர்மனியின் ஆட்சியாளர்கள் தமது அடி வருடிகள் மூலமாகவும், மக்கள் திரள் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும் இரு ஜெர்மனிகளின் இணைப்புப் பிரச்சாரத்தை முடுக்கி விட்டனர். கிழக்கு ஜெர்மனியின் 40 ஆண்டு கால கம்யூனிச ஆட்சியில் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, பற்றாக் குறையும், பொருளாதார நெருக்கடிகளும் முற்றி விட்டன; எனவே இணைப்பை ஆவலோடும் அவசரத்தோடும் கிழக்கின் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்ற பொய்ப் பிரச்சாரம் வெறியோடு நடந்தது. ஆனாலும் 1989 டிசம்பரில் - கிழக்கில் நடந்த கருத்துக் கணிப்பின்படி 27% தான் இணைப்பை ஆதரித்தனர் 71% இணைப்பை எதிர்த்தனர்.

இதனால் பீதியுற்ற ஆட்சியாளர்கள் இணைப்பு ஆதரவுப் பிரச்சாரத்தை மேலும்



2

தீவிரமாக்கி, மே.ஜெர்மனியின் பொருளாதார முன்னேற்றம் குறித்து மாயக் கனவுகளை உருவாக்கினர். அங்கு வேலையற்றோருக்கு உதவிப் பணம் வழங்கும் முதலாளித்துவ சந்தை முறையை - போராட்ட உணர்வை மழுங்கடிக்கும் முயற்சியை - சமூகப் பொறுப்பு மிக்க நடவடிக்கை என்று வானொலி - வானொளியின் பிரதானப் பார்வை நேரங்களில் பிரச்சாரம் செய்தனர்.

மேற்கில் 44 லட்சமும் புதிய சந்தையான கிழக்கில் 11 லட்சமும் விற்கும் பைல்டு ஜெய்டுங் என்ற நாளேடு முதல் பல பத்திரிகைகளுமே திட்டமிட்டுத் தேசிய இனவெறி ஊட்டின. குறிப்பாக ஜெர்மனியில் குடியேறியுள்ள வெளி நாட்டவருக்கு எதிராக வேலையற்றோர் மற்றும் தொழிலாளரிடையே இத்தேசிய வெறி பரப்பப்பட்டது; நாஜி இட்லர் 60 லட்சம் யூதர்களை கொன்றொழிக்கும் ஆயுதமாக ஏந்தியிருந்தது இதே தேசிய வெறி தான்!

தகர்க்கப்பட்ட பெர்லின் சுவரினூடாகக் கிழக்கே பாய்ந்த மே.ஜெர்மனி மற்றும் அமெரிக்க தேசங் கடந்த தொழில் கழகங்கள் இந்த இணைவுப் பிரச்சாரத்திற்குப் பின்பலமாக இருந்தன. இணைவுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள் வீழ்த்தப்பட்ட கம்யூனிச சர்வாதிகாரத்தை ஆதரிப்பவர்கள்; அது வேண்டுமா? சுதந்திரமான ஐக்கிய ஜெர்மனி வேண்டுமா? இரண்டில் ஒன்றெனப் பிரச்சாரம் நடந்தது.

இவ்வளவுக்கும் இடையே இணைப்புக்கு எதிராகத் தொடர்ந்து பல போராட்டங்கள் நடந்தன. 7 ஆயிரம் பேர் கொண்டதாகப் பொய்ப் பிரச்சாரம் செய்யப்பட்ட ஃபிராங்பர்ட் ஆர்ப்பாட்டம் 20,000 பேர் கொண்டது; மக்கள் மீது கண்ணெரிக்கும் இரசாயனம் கலந்த நீரைப் பாய்ச்சி இறைத்து போலீசார் அதைக் கலைத்தனர். ஆனால் இணைவு ஆதரவு இயக்கங்கள் அரசு ஆதரவு பலத்தோடு நடத்தப்பட்டு ஊதிப் பெருக்கிக் காட்டப்பட்டன.

கிழக்கு - மேற்கு ஜெர்மனி 'இணைவி'னால் மேற்கு ஜெர்மனி ஏதோ ஏராளமாக இழந்து விடுமென்று பாவனை செய்கிறார்கள். உண்மையில் கி.ஜெர்மனி ஒரு வறிய நாடு அல்ல. முன்னாள் சோசலிச நாடுகள் அனைத்திலும் பார்க்க வெகுவாக முன்னேறியிருந்ததுதான்! இரு ஜெர்மனிகளது பொருளாதார உற்பத்தி முக்கியத்துவ வரிசை வேறு வேறாய் இருந்தது. மேற்கே ஏகபோக - தேசங்கடந்த தொழில் கழகங்களின் ஆடம்பர, நுகர் பொருள் உற்பத்தியும் போட்டிச் சந்தையும் பிரதானமாய் இருந்தன. கிழக்கே கனரக - இயந்திர உற்பத்தியும் கட்டுப்படுத்தப்பட்ட சந்தையும் பிரதானமாய் இருந்தன.

கிழக்கே ஒவ்வொருவருக்கும் மேற்கை விடக் கூடுதலான உணவும் - இறைச்சியும் கிடைத்தன. இப்போது மேற்கில் இருந்து குவிக்கப்பட்ட தகர டப்பா கறி, உணவு வகைகள் மீதான மோகம் கிழக்கின் விளைபொருட்களின் சந்தையைப் பறித்துக் கொண்டதில் விவசாயிகள் போராடுகின்றனர். நவீனத் தொழில்நுட்பம், இயந்திர மயமாக்கப்பட்ட உற்பத்தி கொண்ட தேசங்கடந்த தொழில் கழகங்கள் சந்தையைப் பிடித்துக் கொண்டதால், இதன் விளைவாக புதிய - கடுமையான பொருளாதார நெருக்கடிகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் தீவிரமாகியுள்ளன என்பதுதான் உண்மை நிலைமை!

ஜெர்மனி இணைவினால் பெருத்த ஆதாயம் அடையப் போவது, மேற்கு ஜெர்மனியும் அதன் ஏகபோக முதலாளிகளும்



3

தான். ''இன்று நாம் கி.ஜெர்மனிக்கு வழங்கும் பணமானது 2000 ஆண்டளவில் 1,17,300 கோடி ரூபாய் இலாபத்தை நமக்கு ஈட்டித் தரும்'' என்று ஹெல்மெட் கோல் பகிரங்கமாகவே கூறியுள்ளார். இந்த இலாபம் ஜெர்மன் மக்களை அடையாது; கிழக்கே பாய்ந்துள்ள சீமன்ஸ், பென்ஸ், ஓபல், தாய்ல்மர், வாக்ஸ்வேகன் ஆகிய மேற்கு ஜெர்மன் ஏகபோகங்களுக்குத்தான்!

மேற்கு ஜெர்மனியின் ஏகபோகங்களது நுழைவால் ஏற்கனவே வாரம் 25,000 பேர் என்று இதுவரை 8 லட்சம் பேர் வேலையில்லாதோர் பட்டியலில் சேர்ந்துள்ளனர். ஜெர்மன் இணைவில் இன்னும் பல பாதிப்பு



4



படிப்பகம்

www.padippakam.com



கள் ஏற்பட்டுள்ளன. பெண்கள் பல உரிமைகள் இழப்பதும், குடியேறியிருக்கும் வெளிநாட்டவர் மீது தாக்குதலும், தேசிய வெறிபிடித்த புதிய நாஜிக்களின் ஆதிக்கமும் அதிகரித்துள்ளன.

இதுவரை கிழக்கு ஜெர்மனிப் பெண்களுக்கு கருக்கலைப்பு அல்லது கரு வைத்திருப்பதற்கான உரிமை, சமவேலை வாய்ப்பு, சம ஊதிய உரிமை போன்றவை பறிக்கப்படும். ஏனெனில் மேற்கே அவை கிடையாது. 26% பெண்கள் வேலை வாய்ப்பிழந்து, பொருளாதாரச் சுதந்திரத்தைப் பறி கொடுப்பர். கிழக்கே தடை செய்யப்பட்டிருந்த விபச்சார விடுதிகள், இரவு நடன விடுதிகள், ஆபாச சினிமா, பத்திரிகைகள் இப்போது எங்கும் நிரம்பி வழிகின்றன. எனவே முதலாளித்துவ ஆணாதிக்கம் நிலைநாட்டப்படுகிறது.

கிழக்கே ஆஃப்பிரிக்கர், வியத்நாமியரும், மேற்கே ஆஃப்பிரிக்கர், தமிழர், துருக்கியரும் குடியேறியுள்ளனர். இவர்களுக்கு எதிராக தேசிய வெறி கிளப்பி தாக்குதல்கள் தொடுக்கப்படுகின்றன. குறிப்பாக ஈழத் தமிழர் அகதி முகாம்கள் எரிக்கப்படுகின்றன. இதற்குக் காரணமான புதிய நாஜிக் கட்சிகள் மீதிருந்த தடை நீக்கப்பட்டு அங்கீகரித்துள்ளனர்.

இவ்வாறு ஜெர்மனி இணைப்பானது ஜெர்மனி மக்களுக்கு எதிரானது மட்டுமல்ல. உலக மக்களுக்கு, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு அது ஒரு அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது: நாஜிக் கிரிமினல்கள் இரண்டாம் உலகப்போரின் போது நடத்திய கொலை வெறியாட்டம் அவர்களது நினைவை விட்டு மறையவில்லை. எனவே 1871-இல் பிஸ்மார்க்க நிறுவிய முதலாம் ஜெர்மானியப் பேரரசு (ரெயிஷ்), 1933-ல் ஆட்சி பீடமேறிய நாஜி இட்லரின் மூன்றாம் ஜெர்மானியப் பேரரசப் பாரம்பரியத்தில் இப்போது நான்காம் ஜெர்மானியப் பேரரசு தோன்றியுள்ளதாக வெறுப்பும் பீதியும் கிளம்பியுள்ளது. கடந்தகால ஜெர்மானிய வரலாறு மட்டுமல்ல, இப்போதைக்கு ஜெர்மானிய சமூக, அரசியல், பொருளாதார அமைப்பும் கூட இதையே உறுதிப்படுத்துகிறது.

**(தொடரும்)**

(கணிசமான அளவு தகவல்களும், படங்களும் ஜெர்மனியில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழர் சிலர் நடத்தும் ''புதுமை'' என்கிற மாத இதழில் இருந்து திரட்டப்பட்டவை)

## 'பரிசுத்த ராஜா' ஆட்சியில்

# பல்லாயிரம் கோடி சுங்கவரி மோசடி



விவசாயிகள் வரிகட்டவில்லையென்றால் அவர்கள் வீட்டின கதவுகளை உழவு மாடுகளை, பாத்திரம் பண்டங்களை தூக்கிச் செல்லும் அதிகாரிகளைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். எந்த அதிகாரியாவது, விவசாயின் வீட்டின் கதவை தட்டி 'நாங்கள் உங்களிடம் அதிக மாக வரி வசூலித்து விட்டோம் மீதி இந்தாருங்கள்' என்று கொடுத்திருக்கிறார்களா?

ஆனால் சுரண்டும் முதலாளிகளுக்கும் வர்த்தக சூதாடிகளுக்கும் ஒவ்வொரு வருடமும் 'அதிக'மான வரியை கணக்கு பார்த்து கோடிக்கணக்கான ரூபாய்களை திருப்பிக் கொடுக்கிறது அதிகாரவர்க்கம், ஆளும் கும்பல்.

மத்திய சுங்கவரி மற்றும் ஆயத்தீர்வை கழகம் (CBEC) கடந்த நான்கு ஆண்டுகளில் 1018 கோடி ரூபாய்களை திருப்பிக் கொடுத்துள்ளது. இவ்வாண்டு மார்ச்சு மாதத்திற்குள் 88.4 கோடி ரூபாயை கொடுத்துள்ளது. இதில், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வாங்கியவர்களும் அடக்கம்.

இந்த விசயமே இப்போது வெளிவருவதற்கு காரணம், 13,000 கோடி ரூபாயை முதலாளிகளுக்கும் வர்த்தக சூதாடிகளுக்கும் திருப்பி கொடுக்க அதிகார வர்க்கம் அடிபோட்டு அம்பலப்பட்டு போனது தான்! சுங்கவரி மற்றும் ஆயத் தீர்வையை ஒரு பொருளுக்கு தீர்மானிப்பதும், கணக்கிடுவதும், வசூலிப்பதும், அதில் சிறப்பு சாதனங்கள் என்ற பெயரில் சலுகைகள் வழங்குவதும் நபர்களுக்கேற்ப வேறுபடும்!

சம்பந்தப்பட்ட நபரின் செல்வாக்கு, வீழ்ச்சி, அதிகார வர்க்கத்தின் கருணை, பழி வாங்கல், ஆளும் அரசியல் கட்சி தலைவர்களின் தலையீடு இவற்றைப் பொறுத்து அமையும்.

இதற்காக மிக மிக நீண்ட, இடியாப்ப சிக்கல் போன்ற குற்றவியல் சட்டங்கள் போலவே வரிவசூலிப்பு சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப, ட்ரிப்யூனல், உயர்நீதி மன்றம் உச்சநீதி மன்றம் என்று சென்று வரிவசூலிக்கும் இலாக்கா கணக்கு தப்பாக போட்டு விட்டது; அதிக வரி வசூலித்து விட்டது என்று வாதாடி சாதகமான தீர்ப்புகள் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்கள திரும்ப பெற்றுக் கொள்கின்றனர்.

இந்த ஆண்டு டில்லி உச்ச நீதி மன்றத்தில் மட்டும் கட்டிய வரியில் ரூ 10,000 கோடிக்கு மேல் திரும்பக் கேட்டு முதலாளிகளும் வர்த்தக சூதாடிகளும் அரசின் மீது வழக்கு தொடுத்துள்ளனர். பல்வேறு மாநில உயர்நீதி மன்றங்களிலும் பல நூறு கோடி ரூபாய்களுக்கு வழக்குகள் உள்ளது.

சுங்கவரி மற்றும் ஆயத்தீர்வை மூலம் '89-90' ல் அரசு வசூலித்த தொகையே 40,208 கோடி ரூபாய்கள் தான்! அதில் இவ்வளவு பணத்தையும் திரும்ப கேட்கிறார்கள்!

''உண்மையில் அரசு அதிகமாக வசூலித்து விட்டது என்று வாதத்திற்கு வைத்துக் கொண்டால் கூட அதை சம்மந்தப்பட்ட முதலாளிகளுக்கு அரசு திருப்பிக் கொடுப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது!'' இதை நாம் சொல்ல வில்லை. பல்வேறு முதலாளித்துவ பொருளாதார வல்லுநர்களும் மற்றும் சட்ட நிபுணர்களும் சொல்கிறார்கள்!

காரணம் என்னவெனில் அரசின் எந்த வொரு வரிவிதிப்பையும் முதலாளிகள் தங்களுடைய 'பாக்கெட்'டிலிருந்தோ இலாபத்திலிருந்தோ தருவதில்லை. அரசின் வரிவிதிப்பை மொத்தமாக நுகர்வோர் மீது சுமத்தி விடுகின்றன.

குறிப்பாக, சுங்க வரி நேரடியாக - தீப்பெட்டி உள்பட - நுகர்வோரிடம் தான் திருப்பி தர வேண்டும். நுகர்வோரிடம் திருப்பி தருவது நிர்வாக ரீதியில் இயல்பாக சாத்தியப்படாது என்பதால்; இத்தொகையை 81-ஆம் ஆண்டிலிருந்து தனி தலைப்பில் போட்டு வைப்பதற்கு அரசுக்கு சிபாரிசு செய்தது, அரசு பொது கணக்கு கமிட்டி (PAC). அத்தொகையை நுகர்வோர் நலத்திட்டங்களுக்கு பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வைத்தது.

ஆனால், அப்போது இந்திராகாந்தி தலைமையில் இருந்த மந்திரி சபையும், நிதி மந்திரி ஆர். வெங்கட்ராமனும் (தற்போதைய ஜனாதிபதி) இதை சட்டைச் செய்ய வில்லை. முதலாளிகளுக்கு தரமறுப்பதற்கு சட்டத்தில் இடமில்லை என்று கூறி ஒவ்வொரு ஆண்டும் பல நூறு கோடி ரூபாய்களை திருப்பிக் கொடுத்தனர்.

பல்வேறு அமைப்புகள், தனிநபர்கள் அரசின் மீது தொடுத்த எதிர் வழக்கில் அரசின் முடிவைச் சாடி பல்வேறு நீதிமன்ற தீர்ப்புகள் வந்தன. 'பொதுப் பணம் முதலாளிகளுக்கு முறைகேடான முறையில் திருப்பி விடப்படுகின்றன.' என்று அவை அரசை நேரடியாக குற்றம் சாட்டின. இப்படி பொது நிர்ப்பந்தம் காரணமாக, செப்டம்பர் மாதம் '88 ஆம் ஆண்டு மத்திய சுங்கவரி மற்றும் ஆயத்தீர்வை துறை (CBEC) திருப்பி தருவதை நிறுத்தி வைக்குமாறு தனது அலுவலகங்களுக்கு குறிப்பு அனுப்பியது. ராஜா வி.பி.சிங் பதவியேற்கும் வரை - டிசம்பர் '89 - நிலைமை இதுதான்!

பிறகு திடீரென 3 மாதத்தில் - மார்ச்சு 21-ந் தேதி1990-ல் 'டெலக்ஸ்' செய்தி மூலம் பாக்கியுள்ள அதிகவரி தொகைகளை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு (முதலாளிகள்,



படிப்பகம்

www.padippakam.com

வர்த்தகர்கள்) திருப்பி தந்து வழக்குகளை பைசல் செய்யுமாறு, சுங்க வரி மற்றும் ஆயத் தீர்வை துறை தமது அலுவலகங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியது.

மார்ச்சு 28-ந் தேதி தலைமை அலுவலகத்திலிருந்து அதற்கான சட்ட விதிகள், வழிகாட்டுதல்கள் சுட்டிக் காட்டப்பட்டு அறிக்கைகள் பறந்தது. மொத்த வரி விதிப்பில் 22 சதவிகித வருமானம் இவ்வரிகளின் கீழ் வருகிறது.

ஏறக்குறைய 182 அத்தியாவசிய, ஆடம்பர, அடிப்படை உற்பத்திப் பொருட்கள் இவ்வரி விதிப்பின் கீழ் வருகின்றன. தீப்பெட்டி, காகிதம், தாவர எண்ணெய், டீ, செயற்கையிழை நூல், மருந்துகள், டயர், மற்றும் பெட்ரோலியப் பொருட்கள், சிகரெட், பாவனை பொருட்கள் ஆகியன இவ்வரிவிதிப்பின் கீழ் அடங்கும் ஒரு சில பொருட்கள்.

பாம்பே டையிங் நுல்ஸிவாடியா, 'சிகரெட்' உற்பத்தியில் ஏகபோகம் வகிக்கும் இந்திய புகையிலை கம்பெனி (ITC), பாவனை பொருட்கள் உற்பத்தியில் ஏகபோகம் வகிக்கும் 'இந்துஸ்தான் லீவர்', 'டன்லப்' போன்ற ஏகபோக டயர் கம்பெனிகள் சுங்க வரி திருப்பி தருவதால் பிரதானமாக பலனடையும்!

இது தேசிய முன்னணி அரசுக்குள்ளேயே புகைச்சலைக் கிளம்பியது. இந்த வரிச் 'சலுகை'யினால் அதிகம் பலனடையாத ஒரு பிரிவு முதலாளித்துவ கும்பல் இதற்கெதிராக நான்கு சுவர்களுக்குள் கலகம் புரிந்தன. சந்திர சேகர், எஸ்.என்.சின்கா தலைமையில் ஜனதாதள எம்.பிக்கள் கட்சி மற்றும் ஆட்சிக்குள்ளேயும், காங்கிரசு ராஜீவ் காந்தி தலைமையில் வெளியிலிருந்தும் தாக்குதல் தொடுத்தனர். ஆளும் கட்சி நபர்களால் சோசலிச சிந்தனையாளர் என்று போற்றப்படும் மதுலிமாயி இவர்களுக்கு அறிவு பூர்வமாக தலைமை தாங்கினார்.

இவர் சட்டம் மற்றும் நீதி துறை மத்திய அமைச்சர் தினேஷ் கோஸ்சுவாமி மற்றும் மத்திய வருமான வரி செயலகத்திற்கும் ஆதாரங்கள் அனுப்பி நாடாளுமன்றத்தில் பதில் கூறுமாறு நிர்ப்பந்தித்தார். சந்திரசேகர் வி.பி.சிங்குக்கு 2 கடிதங்கள் எழுதியும், பத்திரிகைகளுக்கு பேட்டிகள் அளித்து அம்பலப்படுத்தியும் நெருக்குதல் கொடுத்தார். மறுபுறம் காங்கிரசு, தே.மு. அரசு இது சம்மந்தமான அனைத்து கோப்புகளையும் அழிக்க முயற்சிக்கிறது என்று குற்றம் சாட்டியது.

''திறமையான'', ''தூய்மையான்'' நிதிய மைச்சர் என்று வர்ணிக்கப்படும் பேராசிரியர் மது தண்டவதே மெல்ல வாயை திறந்தார்! நவம்பர் 27-ந் தேதி 89 ஆம் வருடம் பம்பாய் உயர்நீதி மன்றம் உபரி வரியை திருப்பி வழங்குமாறு தீர்ப்பு வழங்கியது; அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட துறை முடிவெடுத்துள்ளது என்று அப்பாவி போல் நடித்தார்.

அதே பம்பாய் உயர்நீதி மன்றம் '85 ஆம் ஆண்டில் இதற்கெதிராக தீர்ப்பு வழங்கியுள்ளதை பற்றி கேட்டதற்கு மௌனம் சாதித்தார். உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஏன் உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்ய வில்லை என்று கேட்டதற்கு மழுப்பினார். இதே போல் அரசு கப்பல் கட்டுமான நிறுவனத்திற்கு ஆதரவாக வந்த தீர்ப்பை மட்டும் ஏன் ஏற்றுக் கொள்ள வில்லை. அதற்கெதிராக நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கியது ஏன்? என்றனர்.

இவ்வளவு தூரம் விவகாரம் அம்பலமான பிறகு தான், ஒவ்வொரு மந்திரியும் தத்தமது துறை அதிகார வர்க்கத்திடம் விளக்கம் கேட்பதாக கூறினர். சட்டம் மற்றும் நீதித் துறை, நிதி துறை, பிரதமர் ஆகிய மூவருமே தமது கவனத்துக்கு இது ஏற்கெனவே வரவில்லையென்று நழுவி கொண்டனர். பிறகு அவசர அவசரமாக ஆகஸ்ட் 28-ந் தேதி முறைகேடான உத்திரவை திரும்பப் பெற்றுக் கொண்டது, அரசு. அதுவும் கடைசியில் ஆகஸ்ட் 24-ந் தேதி நடந்த தே.மு எம்.பிக்கள் கூட்டத்தில் 22 எம்.பிக்கள் போர்க் கொடி தூக்கவே பணிந்தது.

அரசு பணத்தை இவ்வாறு முறைகேடாக முதலாளிகளுக்கும் வர்த்தக சூதாடிகளுக்கும் கடத்தும் பணிக்கு தலைமை ஏற்றது உண்மையில் அதிகார வர்க்கம் தான்! பிரதமர் செயலகம், வருமானவரி, மற்றும் சட்டத் துறை உயர் அதிகார வர்க்கம் ஒன்று கூடி இந்த கொள்ளையில் இறங்கியுள்ளது. தத்தமது மந்திரிகளையும் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. குட்டு வெளிப்பட்டவுடன் தமது ராஜ குருக்களான அதிகார வர்க்கத்தைப் பாதுகாக்கும் விசுவாசமான பிராணிகளாகி மத்திய மந்திரிகள் நாடாளுமன்றத்தில் வளைந்து நெளிந்தனர்.

இதை விட மோசடி, அதிக வரியை திருப்பிக் கொடுக்கும் நிறுவனங்களின் பட்டியலில் இருக்கும் இந்திய புகையிலை நிறுவனம் (ITC) என்ற ஏகபோக 'சிகரெட்' நிறுவனமே அரசுக்கு சுங்கவரியாக 1200 கோடி ரூபாய் வரி பாக்கி செலுத்த வேணடும்! கடந்த 20 ஆண்டுகளாக கடுகளவு வரியை கட்டி அதியே திருப்பி வாங்கிக் கொண்டும் அரசை ஏமாற்றி வருகிறது இந்நிறுவனம்.

அரசும் இதற்கு உடந்தையாக இருப்பதை தோலுரித்தும், அந்நிறுவனத்தின் சொத்துக்களை பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் பல்வேறு அமைப்புகள், தனிநபர்கள், அரசின் மீது பல்வேறு உயர்நீதி மன்றங்களில் வழக்கு தொடுத்தனர். அலகாபாத் உயர்நீதி மன்றம், உடனடியாக வசூலிக்குமாறு உத்திரவு பிறப்பித்தும் நிறைவேறவில்லை.

சென்னை மற்றும் கல்கத்தா உயர்நீதி மன்றங்கள், அந்நிறுவனத்தின் வரி வசூலிப்பு தடை கோரிக்கையை தள்ளுபடி செய்த பிறகும் அரசு அந்நிறுவனத்தின் மீது கை வைக்கவில்லை. அந்நிறுவனத்திற்கு சாதகமாக நடந்து கொள்ளும் வருமான வரி துறை அதிகார வர்க்கம், நிறுவனத்தின் சார்பாக அரசாங்கத்தையே மிரட்டுகிறது.


தீவிர வசூல் நடவடிக்கை எடுத்தால் கம்பெனியே மூடிவிடும் அபாயம் இருக்கிறது. இதனால் ஆயிரக்கணக்கானோர் வேலையிழப்பர். தற்போது அந்நிறுவனத்திடமிருந்து அரசுக்கு கிடைக்கும் 40 கோடி ரூபாய் சுங்க வரி இழப்பு ஏற்படும் என்கிறது. மேலும், வரி வசூலிப்புக்காக அந்நிறுவனத்தின் மீது தனது இலாகா தொடுத்துள்ள விசாரணைகளையும், வழக்குகளையும் வரைமுறையில்லாமல் இழுத்தடித்துக் கொண்டே செல்கிறது.

ராஜீவ் அரசாங்கம் மட்டுமல்ல, ராஜா வி.பி.சிங்கின் 'நேர்மையான' அரசாங்கமும் அதிகார வர்க்கத்தின் தயவில் அதன் ராஜ்ஜியத்தில் தான் ஒண்டிக் கொண்டிருக்கிறது.

வரி ஏய்ப்பு செய்தது விவசாயியாக இருந்தால், நாடே எதிரொலிக்கும்படி ஆளும் கட்சியும் அதிகார வர்க்க கும்பலும் ஒன்று சேர்ந்து கூக்குரலிடும். விவசாயிகள் தங்கள் பிரச்சனைகளுக்காக தற்காலிகமாக 'வரிகொடா' போராட்டத்தில் ஈடுபட்டால் அரசையே சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள் என்று ஒடுக்கிப் பணிய வைக்கும்.

அதிகார வர்க்கத்தின் தகுதி, திறமை என்பதெல்லாம் மோசடிக்கும் கொள்ளைக்கும் குறுக்கு வழி காண்பதில் தான், திருட்டுதனத்தை மறைப்பதிலும் தான் பளிச்சிடும்! நாட்டுக்கும் மக்களுக்கும் விசுவாசமாக இருப்பது, பணியில் உண்மை — நேர்மையாக உழைப்பது என்பது அதனிடம் சட்டுப் போட்டாலும் கிடைக்காது என்பதைத் தான் இந்த மொத்த சம்பவமும் நிரூபிக்கிறது.

— குணசேகரன்





படிப்பகம்

www.padippakam.com

## அயோத்தி விவகாரத்தின் ஆதிமூலம்:

# பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். சூழ்ச்சிகள்

*அயோத்தியிலுள்ள பாபர் மசூதியை இடித்துவிட்டு ராமர் கோயிலை நிறுவப் போவதாக சபதமேற்று, கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டு இந்து வெறியர்கள் ரத யாத்திரை புறப்பட்டுள்ளனர். ராமஜென்மபூமி விவகாரத்தின் தோற்றுவாய் என்ன? நிலைமை இந்த அளவு முற்றியதற்கு யார் காரணம் என்பதை ஆர்தர் பான்னெர் என்ற வெளிநாட்டுப் பத்திரிகையாளர் "ஆண்டவனின் அருளைப் பெற முடியாமல் தடுப்பது" என்ற தமது நூலில் விரிவாக விளக்கியுள்ளார். இந்து வெறியர்களின் சூழ்ச்சிகள் - சதிகளை அம்பலப்படுத்திக் காட்டும் அவரது நூலிலிருந்து சில பகுதிகளை இங்கே தொகுத்தளிக்கிறோம்.*

மதக் குறியீடுகளையும் இட்டுக் கட்டப்பட்ட புராணக் கதைகளையும் சூழ்ச்சியுடன் கையாள்வது, அதற்கான பலியாட்டை உருவாக்குவது, அதன் மூலம் குறிப்பிட்ட இனத்தை ஐக்கியப்படுத்த முயற்சிப்பது, சீரழிந்த அரசியல் - பொருளாதார நிலைமையைச் சாதமாக்கிக் கொண்டு நாட்டின் தலைவிதியை மாற்றப் போவதாக உறுதியளிப்பது —— இவை பாசிஸ்டுகளும் நாஜிகளும் கையாண்ட உத்திகள். ஆனால் இவை ஜெர்மனியையும் இத்தாலியையும் பேரழிவில் தள்ளி விட்டன. இந்தியாவில் அண்மைக் காலமாக இத்தகைய போக்கு வேரூன்றி வருகிறது.

○ ○ ○

### ஜென்மபூமிகளை விடுவிப்பது - இந்து வெறியர்களின் அதிரடி திட்டம்

தமிழகத்தில், மீனாட்சிபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் மத மாற்றத்தைத் தொடர்ந்து 1982-ல் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள் அவசரமாகக் கூடிப் பேசி இந்து ஒற்றுமையை நிலைநாட்டுவதை உடனடிப் பணி""ாக வரையறுத்தனர். ஆர்.எஸ்.எஸ் - பாரதீய ஜனதா தலைவர்களின் கூட்டத்தில் விசுவ இந்து பரிஷத்தை முன்னிறுத்தி இந்து ஒற்றுமையை சாதிக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. அதன்படி வி.இ.ப. 'முஸ்லீம்களின் பிடியில் சிக்கியுள்ள' மூன்று இந்துக் கோயில்களை விடுவிக்கும் திட்டத்தை அறிவித்தது. "உ.பி.மாநிலத்திலுள்ள அயோத்தியில் -இந்துக் கடவுளான இராமர் அவதரித்த இடத்தில் - முஸ்லீம் பேரரசரான பாபர் 1528-ல் கோயிலை இடித்து விட்டு மசூதியைக் கட்டினார். கிருஷ்ணன் அவதரித்த மதுராவில் 1661-ல் முஸ்லீம் மன்னர் ஔரங்கசீப் மசூதியைக் கட்டினார். வாரணாசி (காசி) யிலுள்ள விசுவநாதர் ஆலயத்தை இடித்துவிட்டு 1669-ல் ஔரங்கசீப் மசூதியைக் கட்டினார். இந்துக்களின் புனித தலங்களான இம்மூன்றையும் விடுவிக்கவேண்டும்" என்று வி.இ.ப. அறை கூவல் விடுத்தது.

அன்று இலங்கையைத் தீயிட்ட புராண குரங்குப் படையைப் போல இன்று இந்தியாவைச் சுடுகாடாக்க கிளம்பியுள்ள இந்துவெறி' ' படை



அறிவு பூர்வமாக ஆராய இடமளிக்காமல், குறுகிய மத உணர்வுகளைத் தூண்டும் வகையில் ஆண்டவன் அவதரித்த இடங்களைப் பற்றிய விவகாரம் திட்டமிட்டே உருவாக்கப்பட்டது. மேலும் முஸ்லீம்கள் பெருமளவில் குவிந்துள்ள உ.பி. மாநிலம் பலிகிடாவாக தீர்மானிக்கப்பட்டது.

உ.பி.மாநிலம் ஏறத்தாழ 13 கோடி மக்கள் தொகையைக் கொண்டது. இந்தியாவிலுள்ள மொத்த முஸ்லீம்களில் மூன்றில் ஒரு பங்கினர் உ.பி.யில் தான் வசிக்கின்றனர். அது முஸ்லீம் கலாச்சாரத்தின் இதயமான பகுதி; உருது மொழியின் தாயகம். முழங்கால் அளவுக்கு நீண்ட 'கோட்'டு அணியும் பழக்கம் முஸ்லீம்களிடமிருந்தே பரவியது.

விசுவ இந்து பரிஷத் அயோத்தியிலுள்ள மசூதியைக் குறிவைத்தது. சரயு என்னும் ஆற்றின் கரையில் அயோத்தி அமைந்துள்ளது. சரயு ஆற்றைக் கடந்தால் மோட்சத்துக்குப் போகலாம் என்பது இந்துக்களின் மத நம்பிக்கை. இராமனைப் பற்றிய பாடல்களைப் பாடிக் கொண்டு முன்பு நாடோடிகளாகத் திரிந்த ராமநந்திகள் எனப்படும் அம்மண சாமியார்கள் இப்போது அயோத்தியில் அதிகமாக உள்ளனர். வேதங்களைப் பற்றி பேசும் இவர்கள் போதை மருந்து அடிமைகள்!

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், இந்து, முஸ்லீம், பௌத்த சமயங்களின் மையமாகவும் புனிதத் தலமாகவும் அயோத்தி இருந்து வந்துள்ளது. பல்வேறு சமயங்களின் குருமார்கள் கூடுமிடமாகவும், வாதப் பிரதிவாதங்கள் நடக்குமிடமாகவும் இருந்துள்ளது.

### வகுப்பு ஒற்றுமைக்கு வேட்டு வைத்தது யார்?

முஸ்லீம் சமஸ்தானத்தின் கீழிருந்த அவாத் மகாணத்தை (அயோத்தியின் மறு பெயர்) 1856-ல் பிரிட்டிஷ் காலனியவாதிகள் தமது ஆட்சியின்கீழ் கொண்டுவந்தனர். அப்போதும் அதற்கு முன்னரும் வழிபாட்டு உரிமை கோரி இந்து - முஸ்லீம்களிடையே மோதல் நிலவியது. எனவே பாபர் மசூதியைச் (பிரிட்டிஷார் பாபர் மசூதி என்றே தீர்மானித்தனர்) சுற்றி கம்பி வேலி போட்டு, காலனியவாதிகள் இந்துக்களை வெளியேற்றினர். முஸ்லீம்களுக்கு மட்டுமே வழிபாட்டு உரிமையை அங்கீகரித்தனர். இதன் விளைவாக இந்து - முஸ்லீம்களிடையே மோதலும் கலவரமும் மேலும் அதிகரித்தது. இரு தரப்பினரையும் சமரசப்படுத்தும் நோக்கங்களுடன் அந்த வழிபாட்டுத் தலத்திலேயே தனித்தனி பிரிவாக இரு சமயத்தவர்களும் வழிபாடு செய்ய பிரிட்டிஷார் ஏற்பாடு செய்தனர்.

இந்த வகுப்பு ஒற்றுமைக்கும், பரஸ்பர சகிப்புத் தன்மைக்கும் இந்து வெறியர்கள் விரைவிலேயே வேட்டு வைத்தனர். மாட்



படிப்பகம்

www.padippakam.com

டுக் கறி உண்ணும் பிரிட்டிஷார் மற்றும் முஸ்லீம்களுக்கு எதிராக, பசுவை இந்துக்களின் புனிதச் சின்னமாக்கி அவர்கள் வழிபட்டதோடு, பசுவதைக்கு எதிரான இயக்கங்களையும் நடத்தினர். அயோத்தி உட்பட இந்தியாவின் பல பகுதிகளில் இது முஸ்லீம்களுக்கு எதிரான தாக்குதலாக நடந்தது. 1912-லும் பின்னர் 1934-லும் பக்ரீத் பண்டிகையின் போது இந்துவெறியர்கள் நடத்திய தாக்குதலில் அயோத்தியிலுள்ள பாபர் மசூதி பெருமளவு சேதமடைந்தது. ஆயிரக் கணக்கான முஸ்லீம்கள் கொன்றொழிக்கப் பட்டனர்.

### நள்ளிரவில் உதித்த ராமர் சிலை!

பிரிட்டிஷார் வெளியேறிய பிறகும் பிரச்சினை தீரவில்லை. 1949-ம் ஆண்டு டிசம்பர் 22-ம் தேதி நள்ளிரவில் போலீசார் காவல் இருக்கும்போதே அம்மசூதியில் இந்துக்கள் வழிபாடு செய்ய ஒதுக்கப்பட்ட இடத்தில் திடீரென ராமர் சிலை தோன்றியது! இது தெய்வசக்தி என்றும், இந்த மசூதி இந்துக்களுக்கு உரிமையானது என்று நிரூபிக்கப்பட்டு விட்டதாகவும் இந்து வெறியர்கள் கூத்தாடினர். இந்திய - பாகிஸ்தான் பிரிவினையால் ஏற்பட்ட கலவரங்களால் நாடே பாதிக்கப்பட்டுக் கிடந்த நிலையில் புதிதாக உருவான இந்த விவகாரத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் நோக்குடன் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு அந்த வழிபாட்டுத் தலத்தை மூடும்படி உத்திரவிட்டது. யாரும் வழிபட உரிமையில்லை என இரு சமயத்தினரையும் வெளியேற்றியது.

இது இந்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பாக கருதமுடியாது. அவர்கள் அந்த வழிபாட்டுத் தலத்திலுள்ள சபுத்ரா பீடம் எனப்படும் மேடையில் அமர்ந்து துதிப்பாடல்களைப் பாடவும், மூடப்பட்ட வழிபாட்டுத் தலத்திலுள்ள சன்னலின் வழியே ராமர் சிலையை தரிசிக்கவும் உரிமை வழங்கப்பட்டது.

### திரித யுக அயோத்தியும் கலியுக அயோத்தியும் ஒன்றுதானா?

இந்து மதக் கணக்குப்படி 'திரித' யுகத்தில் அதாவது 1,29,600 ஆண்டுகளுக்கு முன்பு ராமர் அயோத்தியில் அவதரித்தார். அதன் பிறகு அயோத்தி மறைந்து விட்டது. பின்னர் இன்றைய 'கலி' யுகத்தில் அதாவது கி.மு. முதலாம் நூற்றாண்டில் விக்ரமாதித்தன் என்ற மன்னன் அயோத்தியை நிறுவியதாக இந்துக்களில் சிலர் கூறுகின்றனர். ஆனால் அவனைப் பற்றிய வரலாற்று ஆதாரம் ஏதுமில்லை. நிறைய மன்னர்கள் விக்ரமாதித்தன் என்ற பெயரில் வாழ்ந்துள்ளனர்.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் குப்தர்கள் ஆட்சி காலத்தில் விக்ரமாதித்த குப்தர் என்ற துவக்க கால மன்னர் சரயு ஆற்றங்கரையில் தனது தலைநகரை நிறுவி அதற்கு அயோத்தி என்று பெயரிட்டார். ராமர் அவதரித்த அயோத்தியும் குப்தர் நிறுவிய அயோத்தியும் ஒன்றுதான் என நம்புவதற்கு இடமில்லை. அவர் காலத்தில் புத்தமதம் பின்னுக்கு தள்ளபட்டு இந்து மதம் செல்வாக்குடன் விளங்கியது. அதன் காரணமாக இந்துக் கடவுளான இராமர் அவதரித்த அயோத்தி என்ற இடத்தின் பெயரை தனது



காவிக் கொடியேந்தி கையில் ஆயுதங்களுடன் ரத்தம் குடிக்க அலையும் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கும்பல்

தலைநகருக்கு அவர் சூட்டியிருக்க வாய்ப்புண்டு.

இந்த விக்ரமாதித்த குப்தர், ராமர் அவதரித்ததாக கூறப்படும் இடத்தில் ஒரு இந்துக் கோயிலைக் கட்டினார். ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியில் குப்த வம்சம் அழிந்தது. அதோடு அயோத்தியும் கைவிடப்பட்டது. விக்கிரமாதித்த குப்தர் உருவாக்கிய ராமர் கோயில் சிதிலமடைந்து காட்டுப் புதர்கள் மண்டிக் கிடந்தது. குப்தர்களுக்குப் பிறகு பல்வேறு மன்னர்கள் இந்தியாவை ஆண்ட போதிலும் அயோத்தி முக்கியமானதாக கருதப்படவில்லை. இடிந்து கிடந்த ராமர் கோயிலும் புதுப்பிக்கப்படவில்லை. இடைப்பட்ட காலத்தில் புத்த, சமண மதங்களும் இந்து மதமும் வெவ்வேறு கட்டங்களில் செல்வாக்குடன் இருந்துள்ளன.

16-ம் நூற்றாண்டில் இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்ஜியம் தொடங்கியது. முதலாவது மொகலாயப் பேரரசரான பாபர் 1528-ல் அயோத்தியின் வழியே பயணப்பட்டபோது; இரு முஸ்லீம் மதகுருமார்களின் மூலம் அயோத்தியின் புனிதத்தையும் பெருமைகளையும் பற்றி அறிந்து அங்கு மசூதியை கட்டியெழுப்பினார். அதே சமயம் இடிந்து கிடந்த கோயிலில் ராமர் பிறந்த இடமாக கருதப்படும் ஒரு புதைகுழியில் இந்துக்கள் மலர்களைத் தூவி வழிபட்டு வந்தனர்.

### இந்துக்களை ஒற்றுமைப்படுத்தும் ஒரே துருப்புச் சீட்டு

1949-லிருந்து 34 ஆண்டுகளாக பாபர் மசூதி மூடிக்கிடந்த நிலையில், 1983-ல் ஆர்.எஸ்.எஸ்-ம், விசு இந்து பரிஷத்தும் அதை ராமர் கோயில் என்றும் இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமை தரப்படவேண்டும் என்றும் பிரச்சாரத்தைத் துவங்கினர். முஸ்லீம் மன்னர்களை அடக்கு முறையாளர்களாக சித்தரித்து, ராமர் கோயிலை இடித்துவிட்டு அங்கு மசூதியைக் கட்டியதாக கூறி இந்துக்களை வெறியூட்டினர். அதைத் தொடர்ந்து ராம ஜென்மபூமி விடுதலைப் படை 1984-ல் நிறுவப்பட்டது. நாடு முழுவதும் குறுக்கும் நெடுக்குமாக ஏகத்மாதா யஜ்னா என்ற பெயரில் மூன்று பெரும் பிரச்சார யாத்திரைகள் தவிர 35 உப யாத்திரைகள் நடத்தப்பட்டன. இந்துக் கடவுளான ராமர் சிறையின் உள்ளே அடைபட்டிருப்பதாக பெரிய அளவிலான சித்திரங்கள் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன. அக்டோபர் 31-ந் தேதியன்று பிரதமர் இந்திரா சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இந்த பிரச்சார யாத்திரைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன.

மீண்டும் மார்ச் 85-ல் ராமஜென்மபூமி விடுதலைக்கான கோரிக்கை எழுந்தது. டெல்லியில் ராமலீலா பண்டிகையின் போது கூடிய60,000இந்துக்களிடம்ஆர்.எஸ்.எஸ்-ம், வி.இ.ப.யும் பிரசுரங்களை விநியோகித்தனர். வெறியூட்டினர். மீண்டும் அக்டோபரில், அயோத்தி கோயிலின் பூட்டைத் திறக்க கோரி 25 ரத யாத்திரைகள் நடத்தப்பட்டன

### இந்துவெறி ஆட்சியாளர்களின் வஞ்சகத் தீர்ப்பு

1986 பிப்ரவரி முதல் நாளன்று அயோத்தியின் கீழ்கோர்ட்டு நீதிபதி, எவ்வித முன்னறிவிப்பு இன்றி, விசாரணை கூட இல்லாமல் திடீரென மூடிக் கிடந்த மசூதியின் கதவுகளைத் திறந்து விடுமாறு உத்தரவிட்டார். உள்ளூர் வக்கீல் ஒருவர் அளித்த மனுவின் அடிப்படையில் தான் தீர்ப்பளித்துள்ளதாக அவர் நியாயப்படுத்தினார். நூற்றாண்டுகளாக நடந்து வரும் வாதப் பிரதிவாதங்களுக்கு ஒரு தலைப்பட்சமாக முற்றுப் புள்ளி வைத்து இந்துக்களுக்கு வழிபாட்டு உரிமையை நீதித்துறை அங்கீகரித்தது. மதச் சார்பற்ற பல்வேறு பத்திரிகையாளர்கள் இந்த அநீதியான தீர்ப்பைக் கண்டித்தனர். சிறுபான்மை மக்கள் மீதான நீதித்துறையின் தாக்குதல் என்று முஸ்லீம்கள் குமுறினர். இந்த தீர்ப்பு அறிவிக்கப்படுவதற்கு முதல் நாளன்றே அயோத்தியில் ராணுவம் குவிக்கப்பட்டது. உ.பி.யின் அப்போ



படிப்பகம்

www.padippakam.com

தைய காங்கிரசு முதல்வரான வீர் பகதூர் சிங், 1985 டிசம்பர் மாதத்தில் அயோத்தியில் நடந்த இந்துப் பண்டிகையில் கலந்து கொண்டு விசுவ இந்து பரிஷத்தின் தலைவர்களை ரகசியமாக சந்தித்தார். அவரது ஏற்பாட்டின் படியே உள்ளூர் வக்கீல் கோர்ட்டில் மனுக் கொடுத்தார். இந்த வக்கீல் ஆர்.எஸ்.எஸ் - ஐச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது.

அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்தின் கதவுகள் திறக்கப்பட்டதும் இந்துக்கள் பெருமளவில் அங்கு திரண்டு இனிப்புகள் வழங்கியும், தேங்காய் உடைத்து பூசை செய்தும், மலர்களால் அலங்கரித்தும், முழக்கங்களுடன் தமது வெற்றியைக் கொண்டாடினர். ராஜீவ் தலைமையிலான மத்திய அரசு இதை அங்கீகரிக்கும் வகையில் இந்துக்களுக்குச் சாதகமாக நடந்துகொண்டது. ராம ஜென்ம பூமி கோயில் திறக்கப்பட்டு அங்கு இந்துக்கள் உற்சாகத்துடன் வழிபாடு செய்வதாக வானொலியும் தொலைக்காட்சியும் செய்திகளாகக் கூறின. முஸ்லீம்களின் வழிபாட்டு உரிமையும், பாபர் மசூதி என்ற பெயரும் திட்டமிட்டே இருட்டடிப்பு செய்யப்பட்டன.


## டெல்லி கலவரத்தின் பின்னணி

முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பழைய டெல்லியிலுள்ள சிவப்பு தெருவில் ஒரு பெரிய அரசமரம் உள்ளது. 1960 வரை இந்த மரத்தை யாரும் பொருட்படுத்தவில்லை. அரச மரத்தைக் கட்டிக்கொண்டு வழிபாடு செய்தால் மகப்பேறு உண்டாகும் என்ற இந்துமத நம்பிக்கையின்படி சில இந்துப் பெண்கள் '60களின் இறுதியில் இந்த மரத்தை வழிபடத் தொடங்கினர். இந்துக்கள் இந்த மரத்தைச் சுற்றி மேடை அமைக்க முற்பட்டபோது, நிலத்துக்கு உரிமையுள்ள முஸ்லீம் அறக்கட்டளை இதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. நகராட்சி நிர்வாகம் தலையிட்டு சமரசப் படுத்தியதன் பேரில் மரத்தைச் சுற்றி மேடை கட்டவும், சிறிய பிள்ளையார் சிலையை வைத்து வழிபடவும் முஸ்லீம்கள் சகிப்புத் தன்மையுடன் அங்கீகரித்தனர்.

பின்னர் 1984-ல் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் இந்த மேடையைச் சுற்றி சுவர் எழுப்ப முயன்றனர். முஸ்லீம்களின் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, சீக்கிய மதத்தைச் சேர்ந்த நகராட்சி அதிகாரி சுவர் எழுப்பத் தடை விதித்தார். ஆனால் விரைவிலேயே இந்த அதிகாரி மாற்றல் செய்யப்பட்டார். முஸ்லீம்களின் எதிர்ப்புகளுக்கு நடுவே, அரச மரத்தின் அருகில் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தினர் சிறிய சிவன் கோயிலைக் கட்டி , அதற்கு முழு நேர பூசாரியையும் நியமித்து தினமும் ஆறு வேளை வழிபாடு செய்தனர்.

அயோத்தியிலுள்ள வழிபாட்டுத்தலம் திறக்கப்பட்டு அது இந்துக்களுக்கு சாதகமாக அமைந்ததும், டெல்லியிலுள்ள அரச் மரத்தடி கோயிலுக்கு புராதன சிவன் கோயில் என பெயரிட்டு ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் பெயர்ப்பலகை அமைத்தனர். ராமஜென்ம பூமியை விடுதலை செய்த இந்துக்களுக்கு நன்றி தெரிவித்து பேனர்களைக் கட்டினர்.

அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலம் இந்துக்களுக்கு சாதகமாக திறக்கப்பட்டதா




''ஆண்டவனின் அருளைப் பெற முடியாமல் தடுப்பது — இன்றைய இந்தியாவின் சமூக நிகழ்ச்சிப் போக்குகள்'' என்ற இந்த ஆங்கில நூலின் ஆசிரியர் ஆர்தர் பான்னெர், நியூயார்க் டைம்ஸ் ஏட்டின் ஆசிய செய்தியாளராகப் பணியாற்றியவர். இந்து வெறியர்களின் சூழ்ச்சிகள் - சதிகள், மற்றும் அரசியல்வாதிகளின் கபடத்தனம் முதலானவற்றை இந்நூலில் விவரித்துள்ளார். அவர் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து சாதாரண மக்களிடம் பேட்டி கண்டு, வெடிக்கப் போகும் மதக் கலவரங்களுக்கு சமூக மாற்றம் மட்டும் தீர்வாக அமையும் என்று தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**AVERTING THE APOCALYPSE**
Social Movements in India today
**ARTHUR BONNER**
DUKE UNIVERSITY PRESS

லும், இந்து வெறியர்களின் ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளாலும் கொதிப்படைந்திருந்த முஸ்லீம்கள் அடுத்த வெள்ளிக் கிழமையில் டெல்லி ஜும்மா மசூதியில் தொழுகைக்காக கூடிய போது தமது அதிருப்தியையும் புகார்களையும் இமாம் புகாரியிடம் வெளியிட்டனர். நமது போராட்டம் அரசுக்கு எதிராக இருக்கவேண்டுமே தவிர இந்துக்களுக்கு எதிராக மாறக்கூடாது என்று இமாம், அவர்களை சாந்தப்படுத்தி அனுப்பினார்.

அன்று டெல்லியில் முஸ்லீம்கள் கடையடைப்பு போராட்டம் நடத்தினர். ஒரு சில இடங்களில் இந்து - முஸ்லீம்களிடையே கைகலப்பு மூண்டது.

சில முஸ்லீம் இளைஞர்கள் பாபர் மசூதியில் வழிபாட்டு உரிமை கோரி கோஷம் எழுப்பியபடி ஊர்வலமாகச் சென்றபோது, அந்த வழியே ஜீப்பில் வந்த ஜக்பர்வீஷ் கௌசல் என்ற இந்து வெறிபிடித்த போலீசு அதிகாரி அவர்களை நோக்கிச் சுட்டார். கூட்டம் சிதறியோடியபோது தவறி கீழே விழுந்த நிராயுதபாணிகளான இரு முஸ்லீம் இளைஞர்களை அவர் சுட்டுக் கொன்றார். ஆத்திரமடைந்த முஸ்லீம்கள் போலீசார் மீது கற்களை வீசினர். அதைத் தொடர்ந்து முஸ்லீம்கள் வன்முறையில் இறங்கி வாகனங்களுக்கு தீயிட்டதாகக் கூறி ஊரடங்கு உத்திரவு போடப்பட்டது. ஆயிரக்கணக்கானோரை போலீசார் கைது செய்து சித்திரவதை செய்தனர்.

நீங்கள் ஏன் பாகிஸ்தானுக்குப் போகாமல் இங்கிருக்கிறீர்கள் என்று கேட்டு போலீசார் முஸ்லீம்களைத் தாக்கினர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர், தாம் இந்துக்கள் என்று கூறிய போதிலும் நம்பாமல் போலீசார் ஒவ்வொருவரையும் 'சுன்னத்' செய்துள்ளனரா என்று ஆடையை அவிழ்த்து சோதித்தனர். சித்தரவதைக்குள்ளான முஸ்லீம்கள் தண்ணீர் கேட்டபோது போலீசார் அவர்கள் முகத்தில் மூத்திரத்தைக் கொட்டினர். இந்த உண்மைகளை சிவில் உரிமைக்கான மக்கள் கழகம் (PUCL) தனது ஆய்வறிக்கையில் அம்பலப்படுத்திக் காட்டியது.

டெல்லியைப் போலவே வட இந்தியாவில் பல பகுதிகளில் கலவரங்களும் அடக்குமுறைகளும் தொடர்ந்தது. நேற்றுவரை சகோதரர்களாகப் பழகி வந்த இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரையொருவர் சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலைமை தோன்றியது. நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள், பற்றி எரிந்த கலவரத் தீயில் மாண்டனர். பலர் தமது அற்ப உடமைகளை இழந்து நிராதரவாக நின்றனர். கலவரங்களால் வட இந்தியா பாதிக்கப்பட்டுக் கிடந்த அடுத்த சில மாதங்களில் மீண்டும் அயோத்தியிலுள்ள வழிபாட்டுத் தலத்தை மூடிவைத்துவிட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக ஆட்சியாளர்கள் அறிவித்தனர். ஆனால் அவர்களால் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்பது சந்தேகம் தான். கடைசியில் ஆண்டவனின் அருளை யாருமே பெறமுடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது.

○ ○ ○

நூலாசிரியர் தமது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளவாறு இந்தியாவில் இந்துவெறி பாசிசக் கட்சியான பாரதீய ஜனதா வட மாநிலங்களில் தீர்மானகரமான சக்தியாக வளர்ந்து வருகிறது. நாட்டின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாத முதலாளித்துவக் கட்சிகளின் கையாலாகாத்தனம், போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகம் ஆகியவற்றால் இத்தகைய பாசிச சக்திகள் குறுகிய மதவெறி, இனவெறியூட்டி மக்களைத் தம் பின்னே திரட்டிக் கொண்டு ஆட்சிக்கு வருவது இன்றைய உலகின் நிகழ்ச்சிப் போக்காக உள்ளது. அதே முறையில் இன்று இந்துவெறி பாரதீய ஜனதா அபாயகரமான சக்தியாக வளர்ந்து ஆட்சியைக் கைப்பற்றத் துடிக்கிறது.

இந்து வெறியர்களின் சூழ்ச்சிகளையும் சதிகளையும் தோலுரித்துக் காட்டும் இந்நூல், மேலும் உறுதியான வேகத்துடன் பாசிச எதிர்ப்பு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது. இந்துவெறி பாசிச சக்திகள் வெல்லுமா அல்லது புரட்சிகர ஜனநாயக சக்திகள் வெல்லுமா என்பது நமது விழிப்புணர்வையும், எதிர்ப்புணர்வையும் பொறுத்தே உள்ளது. நமது முன்முயற்சியையும் போர்க்குணத்தையும் ஒருக்கால் தளர்த்தினால், நமது நாடு இன்னுமொரு இட்லரின் ஜெர்மனியாக மாறுவதைத் தவிர்க்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

## ★ அமெரிக்க அரசே செயலிழந்தது
## ★ பாலஸ்தீன படுகொலைக்கு வக்காலத்து

# முதலாளித்துவத்தின் மகிமை

கம்யூனிசம் தோற்றுவிட்டதாம்! முதலாளித்துவம் வென்றுவிட்டதாம்! சண்டப்பிரசன்டம் செய்கின்றனர், அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளும். ஆனால் கடந்த வாரம் ஏற்பட்ட அரசியல், பொருளாதார நெருக்கடியினால் அமெரிக்க அரசே செயலிழந்து போனதென்று அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. உலகம் முழுவதும் ஜனநாயகக் காவலனாக வேஷங்கட்டிக்கொண்டு அலையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொங்கு சதை நாடான இஸ்ரேல் நடத்திய பாலஸ்தீனப் படுகொலைக்கு வக்காலத்து வாங்கிய போது மனிதஉரிமைகள் பற்றிய அதன் முகத்திரை கிழிந்துபோனது.

"அன்றாடச் செலவுக்கான அறிக்கையில் அமெரிக்க அதிபர் கையொப்பமிட மறுத்துவிட்டதால் அரசாங்கம் செயல்படுவதற்கான அதிகாரம் இனி இல்லாமல் போய்விட்டது" என்று அக்டோபர் 5 ந்தேதி நள்ளிரவு வெள்ளைமாளிகை அறிவித்துவிட்டது. இந்த அறிவிப்பின் மூலம் வெளிநாடுகளிலுள்ள அமெரிக்க இராணுவ நடவடிக்கை தவிர அமெரிக்க அரசு அமைப்புகள் எதுவுமே செயல்படமுடியாது; 22 நாட்களுக்கு பல லட்சம் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் கிடையாது என்ற நிலை ஏற்பட்டது.

இந்நிலைகுலைவிற்குக் காரணம் உலகின் மிகப் பெரிய பணக்கான நாட்டின் பற்றாக்குறை நிதிநிலை 8,75,000 கோடி ரூபாயை எட்டி பொருளாதார நெருக்கடி முற்றியதுதான். அமெரிக்கப் பொருளாதாரமே தலைகுப்புற வீழ்ந்துவிடுமளவு ஆழமான அவலத்தில் சிக்கிக் கொண்டுவிட்டது என பிற ஏகாதிபத்திய நாடுகள் கேலி செய்கின்றன. அவையும், சர்வதேச நிதியம் உடனடியான நிதிநிலை பற்றாக்குறையையும், கடனுக்கான வட்டி விகிதத்தையும் குறைக்கும்படி நிர்பந்திக்கின்றன. அவை அமெரிக்காவில் புதிதாக மூலதனமிடுவதைக் குறைத்துக் கொண்டுள்ளன. அமெரிக்காவிலும் மூலதன சேமிப்பு வீழ்ந்துவிட்டது. பணப் பெருக்கமும், வளைகுடா நெருக்கடியில் ஈடுபாடும் அமெரிக்கப் பொருளாதாரத்தைக் கடும் நெருக்கடிக்குள் தள்ளின.

எனவே நிதிநிலைப் பற்றாக்குறைக்கு உடனடித் தீர்வு காணவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. ஆனால் அமெரிக்க நாடாளுமன்றத்தில் (காங்கிரசில்) எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சிக்கே பெரும்பான்மையுள்ளது. அதிபர் புஷ்ஷின் குடியரசுக்கட்சி சிறுபான்மையாக உள்ளது. பீர், ஒயின், சிகரெட் போன்ற நுகர்பொருட்களுக்குக் கடுமையான வரிவிதிப்பது, மருத்துவச்சேவை போன்ற சமூக நலன்களை வெட்டிக் குறைப்பது ஆகிய நடவடிக்கைகளை குடியரசுக் கட்சி முன் மொழிந்தது. இது சாதாரண மக்களைப் பாதிக்கும்; செல்வந்தர்களுக்கு வருமானவரி, ஆலைகளுக்கு வரி போன்றவற்றை அதிகரிக்க வேண்டும் என்கிறது ஜனநாயகக் கட்சி.

இந்த இழுபறி நிலைக்கு முடிவு காண்பதாகக் கூறி சமரச நிதிநிலை அறிக்கை என்கிற பெயரில் ஏகபோகங்களுக்கு முற்றிலும் சாதகமான அறிக்கை ஒன்றை புஷ் நிர்வாகம் காங்ககிரசு முன் வைத்தது. அதைக் கண்டு குடியரசுக்கட்சி காங்கிரசார் கூட வெறுப்படைந்து ஜனநாயகக் கட்சியோடு சேர்ந்து மிகப் பெரும்பான்மையாகி புஷ் அறிக்கை நிராகரிக்கப்பட்டது.


உண்மையில் இது புஷ் மீதான அவநம்பிக்கைத் தீர்மானம் போன்றதுதான். ஆனால் அமெரிக்க அரசியல் சட்டப்படி அதிபரை பதவி நீக்கம் செய்யவும் முடியாது; அவரும் காங்கிரசைக் கலைக்கவும் முடியாது: இரண்டு அமைப்புகளையுமே குறிப்பிட்ட காலத்திற்கு மாற்ற முடியாதது. ஆனால் அதிபருக்குத்தான் நிர்வாகம் மற்றும் காங்கிரசு முடிவை ரத்துசெய்யும் உரிமை உள்ளது. அதைப் பயன்படுத்தி "காங்கிரசு உறுப்பினர்களுக்குப் பாடம் கற்பிக்கிறேன்" என்கிற திமிரோடு அரசு இயங்குவதையே நிறுத்திவிடும்படி உத்திரவு போட்டார் புஷ். அதன்மூலம் பீற்றிக் கொள்ளப்படும் முதலாளித்துவ ஜனநாயகத்தின் போர்வை களைந்து நிர்வாணமாக்கப்பட்டது.

இந்த உத்திரவின் மூலம் மக்கள் பிரதிநிதிகளின் கையை முறுக்கி 48 மணி நேரத்துக்குள் தனது தீர்வை ஏற்காவிடில் அரசு எந்திரமே முடக்கப்படும் என்று ஒரு தனிநபர் சர்வாதிகாரம் செலுத்தினார். இடைக்காலச் செலவு அறிக்கைக்கு ஒப்புதல் தரமறுத்து, அதை ரத்து (வீட்டோ) செய்துவிட்டார். வேறு வழியின்றி மூன்று நாட்களுக்குப் பிறகு கூடிய காங்கிரசு புஷ்ஷின் நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொண்டது. அம்மூன்று நாட்களும் கொலம்பஸ் விடுமுறை தினங்களாதலால் இந்த அதிர்ச்சியிலிருந்து அமெரிக்க மக்கள் தப்பித்தனர். சுற்றுலாப் பயணிகள் மட்டுமே பாதிக்கப்பட்டனர்.

"ஈராக்கின் சதாரம் உசைன் செய்வதைப் போல 20 லட்சம் அமெரிக்க அரசு ஊழியர்களைப் பணயக் கைதிகளாக வைத்து மிரட்டினார், புஷ்" என்று வெடித்தார் ஒரு ஜனநாயகக் கட்சி காங்கிரசுக்காரர். இச்சம்பவம் அமெரிக்கப் பொருளாதாரம் மட்டுமல்ல; அதன் அரசியல் ஓட்டாண்டித்தனத்தையும அம்பலப்படுத்திவிட்டது.

★ ☆ ★

அதே போன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ஜனநாயகக் காவலன் வேடமும் கடந்த வாரம் கிழிந்தது. பாலஸ்தீனியர்களுக்குச் சொந்தமான, ஜெருசலேம் நகரை 1967 யுத்தத்திலிருந்து யூத - ஜியோனிச இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. ஜெருசலேம் யூத, கிறித்துவ, முஸ்லீம் மதங்களின் புனிதத்தலம். அங்குள்ள கோவில் மலையில் முஸ்லீம் மற்றும் யூத மதங்களுக்கான கோவில்கள் உள்ளன. சாலமன், கிரோடு ஆகிய அரசர்களின் ஜூடாயிச் கோவில்கள் அம்மலையில் உள்ளன. மெக்கா, மெதினாவுக்கு அடுத்து முஸ்லீம்கள் புனிதமாகக் கருதும் - முகமது நபி வெண்புரவியில் ஏறி சொர்க்கத்துக்குப்






படிப்பகம்

www.padippakam.com

போனதாக நம்பப்படும் அல்அக்சா மசூதியும் அங்குள்ளது. மதக்கலவரம் வெடிக்கும் என்பதற்காக யூதர்களும் - முஸ்லீம்களும் பெருமளவு திரண்டு தொழுகை நடத்துவது தடை செய்யப்பட்டிருந்தது.

ஆனால் அக்டோபர் 8ந்தேதி, அக்கோவில் மலையில் திருவிழாக் கொண்டாட ஏராளமான யூதர்கள் கூடினர். 'கோவில் மலை விசுவாசிகள்' என்கிற யூதமதவெறி அமைப்பு, "2000 ஆண்டுகளுக்கு முன்பு அம்மலையில் இருந்த யூதக் கோவிலை முஸ்லீம்கள் இடித்தனர். அங்கே கட்டப்பட்டுள்ள மசூதியை இடித்து மீண்டும் யூதக் கோவில் கட்டுவோம்" என்று பிரகடனப்படுத்தியுள்ளது. அதன்படி மசூதியை இடித்து, யூதக் கோவிலுக்கு அடிக்கல் நாட்ட முனைந்தது. செய்தி அறிந்த 2000 ஜெருசலேம் நகர பாலஸ்தீன முஸ்லீம்கள் திரண்டனர். நிராயுதபாணிகளான அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தி 23 பேரைக் கொன்று, 140 பேரை படுகாயப்படுத்தியது, இஸ்ரேலிய இராணுவம்.

உலகம் முழுவதும் இப்படுகொலையைக் கண்டித்தபோதும், "இது திட்டமிட்ட கலவரத்தின் விளைவு" என்று இஸ்ரேல் சாதிக்கிறது. அமெரிக்கா அதற்கு வக்காலத்து வாங்குகிறது. ஆக்கிரமித்துள்ள ஜெருசலேமில் புது யூதக் குடியிருப்புகளை நிறுவி இஸ்ரேலின் அங்கமாக்கிக் கொள்வதற்கான திட்டத்துக்கு 700 கோடி ரூபாய் வழங்கியுள்ளது, அமெரிக்கா. இதைச் செய்பவர்கள், இங்கே பாபர் மசூதியை இடித்து ராமன் கோவில் கட்டுவதென்று பல உயிரைக் காவு கொள்ளும் இந்துமத வெறியர்களைப் போல, ஜெருசலேம் கோவில்மலை மசூதியை இடித்து யூதக் கோவிலைக் கட்ட முயல மாட்டார்கள் என்று எப்படி நம்புவது?

யூத மதவெறி இராணுவத்தின் இக்கொலை வெறியாட்டத்தை கண்டித்த உலக நாடுகள், ஜெருசலேமுக்கு ஒரு ஐ.நா. விசாரணைக் குழு அனுப்பும் தீர்மானத்தைக் கொண்டுவந்தன. அமெரிக்காவோ ரத்து (வீட்டோ) அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக மிரட்டியது. ஆனால் குவைத் ஆக்கிரமிப்பைக் காட்டி ஈராக் மீது பாயத்துடிக்கும் இவ்வேளையில் ஜெருசலேம் விவகாரத்தில் விட்டுக் கொடுக்கும்படி பிரிட்டன் உட்பட அமெரிக்காவின் கூட்டாளிகள் நிர்பந்தித்தனர். எனவே ஐ.நா. விசாரணைக் குழு அனுப்புவதை அமெரிக்கா எதிர்க்காமல் இருந்துவிட்டது.

ஆகவே, அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், அதன் உலக ஏவல் நாடுகளையும் முறியடிக்காமல் உலக மக்கள் நிம்மதியாகவும், அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாழ முடியாது. அமெரிக்க மக்களும் தான்! ஏனெனில் அந்நாட்டுப் பொருளாதார நெருக்கடிக்கு பிரதானக் காரணம் உலக மேலாதிக்கத்திற்கான, உலகப் போருக்கான ஆயுதக் குவிப்பில் அது இறங்கியதுதான்! இப்போது நெருக்கடியின் சுமை முழுவதையும் அமெரிக்க மக்கள் மீது திணிப்பதற்குத் தான் அதன் யுத்தவெறிபிடித்த புஷ் நிர்வாகம் முனைந்துள்ளது.

— மணி.



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

**1996-ம்** ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டுக்களை அதன் தாயகமான கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடத்துவதென ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது திடீரென அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் நடத்துவதென சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி முடிவு செய்துள்ளது. ஏதென்ஸ் நகரில் போதிய பாதுகாப்பு இல்லையென்று ஒலிம்பிக் கமிட்டி காரணம் கூறுகிறது. உண்மைக் காரணம் இதுவல்ல. ஒலிம்பிக் விளையாட்டின் போது வியாபாரம் பெருமளவில் நடக்கும்; இதன் மூலம் குறுகிய காலத்திலேயே கோடிக் கணக்கில் லாபம் ஈட்ட முடியும் என்று கணக்குப் போட்டு கோகோ கோலாவும் இதர ஏகபோக நிறுவனங்களும் அமெரிக்காவில் நடத்தச் சொல்லி ஒலிம்பிக் கமிட்டியை விலை பேசிவிட்டன. கடைசியில் கோகோ கோலாவின் கொள்ளை லாபத்துக்காக ஒலிம்பிக் விளையாட்டின் பாரம்பரிய மரபு அடகு வைக்கப்பட்டுவிட்டது. ஏகாதிபத்தியங்கள் ஏழை நாடுகளை மட்டும் ஆட்டிப் படைப்பதில்லை; ஒலிம்பிக் விளையாட்டையும் தான்!

**க**டந்த செப்.15 அன்று 48 வயதான ஆஷாதேவி என்ற பெண்மணி தனது கணவர் இறந்த துக்கம் தாளாமல் தனது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கொண்டு மாண்டார். செப்.11 அன்று தனது கணவர் இறந்தவுடன் உடன்கட்டை ஏற அவர் முயற்சித்தபோது பலர் தடுத்து விட்டனர். இப்போது மத்தியப் பிரதேசத்திலுள்ள கார்கோன் மாவட்டம் தவானா கிராமத்தில் மாண்டு போன ஆஷா தேவி சதிமாதாவாக போற்றப்படுகிறார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவர் தற்கொலை செய்து கொண்ட இடத்தில் தேங்காய் உடைத்து ஊதுபத்தி கொளுத்தி வழிபடுகின்றனர். இந்து வெறியர்கள் மாநிலம் முழுவதும் இதுபற்றி பிரச்சாரம் செய்வதோடு, அங்கே கோயில் கட்ட நிதி திரட்டியும் வருகின்றனர். ராஜஸ்தானுக்கு ஒரு ரூப்கன்வர்; மத்திய பிரதேசத்துக்கு ஒரு ஆஷாதேவி என்று இந்து அடிப்படைவாதிகள் மாநிலந்தோறும் சதிமா[illegible]களை உருவாக்கி வருகின்றனர்.



**மே**லை நாடுகளில் தலை தூக்கி வரும் இனவெறி பிடித்த நவீன நாஜிக் குழுக்கள் இப்போது ஆஸ்திரேலியாவிலும் ஆட்டம் போடத் தொடங்கியுள்ளது. குடியேறிய ஆசியர்களையும், யூதர்களையும், கருப்பர்களையும் கொன்றொழிப்பது, அவர்களின் சொத்துக்களைச் சூறையாடுவது என்பதையே தொழிலாகக் கொண்டு பீட்டர் வான் டோங்கிரென் என்பவன் தலைமையில் ஒரு புதிய நாஜிக் குழு செயல்பட்டு வருகிறது. 'ப்ரீஜாக்' எனும் பெயரைக் கொண்ட இந்த இனவெறிக் குழுவினர் இட்லரை தெய்வமாக வழிபடுகின்றனர். நாஜிக்களைப் போலவே மொட்டை அடித்துக் கொண்டு நாஜி பாணியிலேயே துப்பாக்கியைத் தூக்கி சல்யூட் வைக்கின்றனர். இந்த கும்பலுக்கு ஆதரவாக தென்னாப்பிரிக்காவிலிருந்து குடியேறிய வெள்ளையர்கள் செயல்படுகின்றனர். வெள்ளையர் புரட்சி என்ற பெயரில் இந்த இனவெறியர்கள் கடந்த ஓராண்டில் மட்டும் 800 பேரை ரகசியமாகக் கொன்றொழித்து 8 லட்சம் டாலர் மதிப்புள்ள சொத்துக்களைச் சூறையாடியுள்ளனர். இனவெறியும் மேலாதிக்கமும் முதலாளித்துவத்தின் பிரிக்க முடியாத அம்சம். அமெரிக்காவானாலும், ஆஸ்திரேலியாவானாலும் இது தான் முதலாளித்துவ ஜனநாயகத்தின் யோக்கியதை!

**மே.** வங்கத்திலுள்ள முதலாளிகள் சங்கமும் இதர வர்த்தக சங்கங்களும் தாங்களே சாலைகளைப் போட்டுக் கொண்டு பராமரிக்க அனுமதிக்குமாறு அரசுக்கு விண்ணப்பித்துள்ளன. குறிப்பாக கல்கத்தாவின் 11 முக்கியமான சாலைகளைப் பழுதுபார்க்கவும் அவற்றை தமது பொறுப்பில் விட்டு விடுமாறும் நகர முதலாளிகள் சங்கம் கோரியுள்ளது. அதாவது அமெரிக்காவைப் போல சாலைகளை தனியார் பொறுப்பில் விட்டு வரிவசூல் செய்து கொள்ள அனுமதிக்குமாறு முதலாளிகள் கோரியுள்ளனர். 'சோசலிச சிற்பி'யான ஜோதிபாசு அரசும் இதற்கு சம்மதித்து விட்டது. கல்கத்தா நகராட்சி பச்சைக் கொடி காட்ட வேண்டியது தான் பாக்கியுள்ளது. மே. வங்க 'மார்க்சிஸ்டுகள்' ஆட்சியில் இப்படி தொடர்கிறது முதலாளித்துவ சேவை!



படிப்பகம்

www.padippakam.com

அயோத்தியிலுள்ள மசூதியை இடித்து விட்டு ராமர் கோயில் கட்டுவதற்கு இந்துக்களிலேயே பெரும்பான்மையினர் ஆதரிக்கவில்லை. டெல்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய 4 பெருநகரங்களில் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதைப் பற்றி சண்டே மெயில் என்ற ஆங்கில வார இதழ் ஒரு உத்தேச கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்தியது. அதில் பெரும்பான்மையினர் மசூதியை இடிப்பதை ஆதரிக்கவில்லை. மசூதிக்கு அருகில் கட்டலாம் அல்லது முஸ்லீம்களிடம் இணக்கமாகப் பேசி ஏற்கச் செய்யலாம் என்று தான் பெரும்பாலோர் கருத்து கூறியுள்ளனர். இந்து வெறியர்கள் கொக்கரிப்பதைப் போல இந்து சமூகம் முழுவதும் அவர்களது கோரிக்கையை ஆதரித்து நிற்கவில்லை என்பதை இந்தக் கருத்துக் கணிப்பு நிரூபித்துக் காட்டிவிட்டது.

விரவர வி.பி.சிங், ராஜீவாக மாறி வருகிறார். பாதுகாப்புக் கெடுபிடிகள் ஏதுமின்றி டெல்லியில் ஆட்சிக்கு வந்தபோது உலாவிய வி.பி.சிங், இப்போது பலத்த பாதுகாப்புடன் தான் திரிகிறார். அக்டோபர் முதல் வாரத்தில் அவர் தனது மாளிகையிலிருந்து ஜனதா தள தலைவர் பொம்மையைச் சந்திக்கச் சென்றபோது, அந்தப் பகுதி முழுவதும் ஒரு மணி நேரத்துக்கு போக்குவரத்து நிறுத்தப்பட்டு துப்பாக்கி ஏந்திய போலீசார் வாகனங்களை சோதனை போட்டனர். பிரதமர் செல்லும்போது 20 கார்கள், 6 ஜீப்புகளில் கருப்புப் பூனைப் படை எந்திரத் துப்பாக்கியுடன் பின் தொடர்ந்து சென்றது. அதே போல பாட்னாவில் அவர் பொதுக் கூட்டத்திற்குப் பேசச் சென்றபோது கருப்புப் பூனைப்படைகளும் துணை ராணுவப் படைகளும் அங்கு குவிக்கப்பட்டன. பாட்னாவில் இந்த ராணுவக் கும்பல் ராஜீவ் ஆட்சி [illegible] [illegible] அக்டோபர் 2-ம் தேதியன்று காந்தி சமாதிக்கு அஞ்சலி செலுத்தப்போன வி.பி.சிங், 9 கறுப்புப் பூனைகள் படை சூழ ராஜீவைப் போல குண்டு துளைக்காத 'கோட்' அணிந்து கொண்டு சென்றார். போகிற போக்கைப் பார்த்தால் இனி பிரதமர் என்றாலே அவர் பாதுகாப்புக் கைதியாக இருக்க வேண்டும் என்பது இந்தியாவின் தலைவிதியாகி விடும் போலிருக்கிறது.

இந்தியாவிலுள்ள சிமெண்ட் கம்பெனி முதலாளிகள் கூட்டுச் சேர்ந்து கடந்த மார்ச் மாதத்தில் சங்கம் (கார்ட்டெல்) அமைத்துள்ளனர். இதில் அங்கம் வகிக்கும் டாடாவின் துணை நிறுவனமான ஏ.சி.சி. சிமெண்ட் நிறுவனத்தின் முதலாளியாக இருப்பவர் தர்பாரி சேத். இவர் மத்திய தொழில் மந்திரி அஜித் சிங்கின் கூட்டாளி. தமது சங்கத்தின் மூலம், நாட்டில் பெருமளவுக்கு சிமெண்டுக்குத் தேவை இருப்பதை ஆய்வு செய்து அறிந்து கொண்ட சிமெண்ட் முதலாளிகள், மந்திரியின் அருளாசியுடன் கடந்த மாதத்தில் ஒரு மூட்டை சிமெண்ட் விலையை ரூ 67-லிருந்து 100 ரூபாயாக உயர்த்திக் கொண்டு கொள்ளை லாபத்தை ஈட்டியுள்ளனர். உதாரணமாக, ஏ.சி.சி. சிமெண்ட் நிறுவனத்தின் ஆண்டு உற்பத்தித் திறன் 15.6 கோடி மூட்டைகள். ஒரு மூட்டைக்கு ஒரு ரூபாய் விலை ஏற்றினால் கூட லாபம் மட்டும் 15.6 கோடி ரூபாய். 33 ரூபாய் விலையேற்றினால் ஆண்டுக்கு லாபம் ரூ 514.8 கோடி. இப்படி எந்த செலவும் சிரமுமின்றி சிமெண்ட் முதலாளிகள் கொழுத்த லாபத்தை ஈட்டியதோடு, பங்குச் சந்தையில் தமது நிறுவனங்களின் பங்கு மதிப்பையும் உயர்த்திக் கொண்டுள்ளனர். ராஜீவ் ஆட்சியானாலும் ராஜா ஆட்சியா [illegible] முதலாளிகளுக்கு எப்போதுமே கொள்ளை லாபம் தான்! கொண்டாட்டம் தான்!

இந்திய ராணுவம் காமவெறியர்களின் கூடாரமாகச் சீரழிந்து சந்தி சிரிக்கத் தொடங்கி விட்டது. ராணுவத்தின் அதி உயர் பொறுப்பில் உள்ள 4 அதிகாரிகள் தமது கீழதிகாரிகளின் மனைவிகளுடன் கூடிக் குலாவி கும்மாளமடித்த விவகாரம், ராணுவ வரலாற்றிலேயே முதன் முறையாக பகிரங்கமாக வெளியே வந்துள்ளது. லெப்டினன்ட் ஜெனரல் ஜே.எம்.சிங், மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா, பிரிகேடியர் ஜால் மாஸ்டர், பிரிகேடியர் ஓபராய் மற்றும் 14 உயரதிகாரிகள் தமது கீழ்திகாரிகளுக்கு திடீரென அவசர வேலை கொடுத்து விரட்டி விட்டு அவர்களது மனைவிமார்களுடன் கும்மாளமடித்துள்ளனர். இது தவிர பதவி உயர்வு பெறுவதற்காக கீழதிகாரிகள் தமது மனைவிகளைக் கூட்டிக் கொடுப்பதும் நடந்துள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் 'அமைதிப் படை'க்குப் பொறுப்பேற்றுச் சென்ற படைத் தளபதிகளும் இதில் அடங்குவர். சொந்த நாட்டிலே கொட்டமடித்த இந்த கும்பல் ஈழத்தில் எந்த அளவுக்கு பாலியல் வன்முறையில் இறங்கியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இந்த காமவெறி கும்பலுக்கு 'மகாவீர் சக்ரா' விருது வேறு கடந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. காம வெறி பிடித்த கயவாளிகளின் கூடாரமான இந்த ராணுவப் படைதான் நாட்டைக் காக்கும் அரும் பணியாற்றுகிறதாம்! நம்புங்கள்!

மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய திரைப்பட பிரிவு அண்மையில் தேவ்ரஹா பாபா என்கிற சாமியாரைப் பற்றிய சினிமா படத்தை தயாரித்துள்ளது. வட மாநிலங்களில் இந்த செய்திப்படம் எல்லா சினிமா கொட்டகைகளிலும் திரைப்படத்திற்கு முன் காட்டப்படுகிறது. தரைக்கு மேல் 7 அடி உயரத்தில் மரப் பலகைகளால் மேடை கட்டிக் கொண்டு அம்மணமாக வாழ்ந்து வந்த இந்த சாமியார் அண்மையில் மண்டையைப் போட்டார். பக்திப் பெருக்குடன் அவரது அருமை - பெருமைகளை இந்த சினிமா விளக்குகிறது. இந்த சாமியார் பக்தர்களின் தலையை தனது காலால் மிதித்துத் தான் ஆசி வழங்குவார். இவரிடம் மிதிபட்ட ஓட்டுப் பொறுக்கிகள் ஏராளம். ராஜீவ் காந்தியிலிருந்து சாதாரண எம்.எம்.ஏ. வரை அனைவருமே இவரின் பக்தர்கள். திரைப்பட பிரிவின் தலைவராக உள்ள விஜய் சந்திரா, இந்த சாமியார் 400 ஆண்டுகளாக வாழ்கிறார்: இத்தகைய உயர்ந்த மனிதரைப் பற்றி படம் எடுப்பது தவறல்ல; யோகா என்பது விஞ்ஞானம்; அவர் யோகி - அவரைப் பற்றிய திரைப்படம் விஞ்ஞானத்தை வளர்க்கும் என்று காதில் பூ சுற்றுகிறார். கடைசியில், இந்த சாமியாரைப் பற்றி படமெடுத்து நமது வரிப்பணம் ரூ 25 லட்சத்தைப் பாழாக்கியதோடு, அது விஞ்ஞானத்தை வளர்க்கும் என்று வேறு நம்பச் சொல்கிறது அதிகார வர்க்க கும்பல். போகிற போக்கைப் பார்த்தால் மேல் மருவத்தூர் பங்காரு பண்டாரத்தைப் பற்றி நாளை அரசின் செய்திப்படம் வெளிவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**ஓட்டுப் பொறுக்கிகளுக்கு ஆசி வழங்கும் அம்மண சாமியார் - அரசு திரைப் பிரிவு உருவாக்கிய கதாநாயகன்.**



ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ்.மதியழகன், 21 பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com



இதோ பெட்ரோலியப் பொருட்கள் தட்டுப்பாட்டால் அவதியுறும் நடுத்தர வர்க்க மக்கள், பல மணி நேரம் நீண்ட 'கியூ' வரிசையில் காத்துக் கிடந்தாலும் பெட்ரோல் கிடைப்பதற்கு உத்தரவாதமில்லை; கிடைத்தாலும் தேவையான அளவு கிடைப்பதில்லை. வளைகுடா நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள இந்நிலை இந்தியாவின் அனைத்து நகரங்களிலும் காட்சிப் பொருளாகி இருக்கிறது. இந்தியாவின் மொத்த பெட்ரோலியப் பொருட்கள் 'சப்ளை'யில் 15 சதவிகிதத்தை குறைத்தும் விலையில் 25 சதவிகிதத்தை கூட்டியும் உள்ளனர். 'ஒவ்வொரு துளி சொட்டு எண்ணெய்யும் முக்கியமானது; சிக்கனமாக செலவழியுங்கள்; அவசிய - அவசரம் கருதி மட்டுமே வாகனங்களை பயன்படுத்துங்கள்' என்று வானொலி, வானொளி மற்றும் பத்திரிகைகள் மூலம் நமக்கு 'பலமாக அறிவுரை' கிடைக்கின்றன.

ஆபாவாணனின் ஊமை விழிகள் படக்காட்சி போல் நூறு கார்களின் 'ஹெட் லைட் வெளிச்சமும் ஒன்றன்பின் ஒன்றாய் இரட்டைப் புள்ளிகளாய் பின் தொடர நூறு கார்களுமே 'ஜெ' காரின் அடுத்ததாய் செல்ல வேண்டுமென்ற வெறியில் பக்க வாட்டில் சீறியபடி முன்னேற படு த்ரில்!

இது 'அதிரடி அரசியல் புரட்சி தலைவி' ஜெயலலிதா சென்ற மாதம் திருமண நிகழ்ச்சி ஒன்றிற்கு சென்றதைப் படம் பிடித்த பத்திரிகையாளர்களின் வர்ணிப்பு! கிருஷ்ணகிரியில் கே.ஆர். சின்னராசு மகள் திருமணத்தை நடத்தி வைக்க ஜெயலலிதா சென்றபொழுது ஜெயலலிதாவின் முந்

# இதுதான் இன்றைய இந்தியா

தானை 'ஜரிகை'களான பூனைப்படைகளும் எலிப் படைகளும் அணிவகுத்துச் சென்ற காட்சி தான் இது.

அண்மையில் - செப்7- 'எம்.ஜி.ஆர் சிலை திறப்பு விழா' என 20,000 (!) வாகனங்களைத் திரட்டி ஊர்வலம் நடத்தியது,

அ.தி.மு.க மட்டுமல்ல அனைத்து ஓ டுப் பொறுக்கிக் கட்சிகளின் நடைமுறை இதுதான். பி.ஜே.பி., நூற்றுக்கணக்கா வாகனங்களுடன் முஸ்லீம்களின் படுகொ லைகளுக்கு நாள் குறித்து ரதயாத்திரை நட துகிறது. காங்கிரசோ தேச ஒற்றுமையின் காவலனாக (!) சத்பவன யாத்திரை தொடங் கியிருக்கிறது. பாட்னாவில் வகுப்பு வாத தேசிய ஒற்றுமைக்கு பேரணியென வி.பி. சிங்கும், ஐம்பெரும்விழாவை கருணாநிதியும் நடத்திவிட்டு அடுத்ததை யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெட்ரோலை ஒரு சொட்டுக் கூட வீணாக்காதீர் என மக்களுக்கு அறிவுறுத்தி கொண்டே ஆயிரக்கணக்கான லிட்டரை இப்படி பதவிக்காக — பகட்டிற்காக போட்டிப் போட்டுக் கொண்டு விரயமாக்குகின்றன, ஓட்டு பொறுக்கும் கும்பல்கள். மந்திரிக ளையும், மக்கள் பிரதிநிதிகளையும் அதிகாரி களையும் 10 சதவிகிதம் பெட்ரோலிய பொருட்களை மிச்சப்படுத்தும்படி அர வேண்டுகோள் விடுத்திருந்தும் 'ஊருக்கு தான் உபதேசம்; எங்களுக்கில்லை' என்று ஊதாரித்தனமாக திரியும் இக்கும்பலை இன் னும் விட்டு வைத்திருக்கத்தான் வேண்டுமா?






படிப்பகம்